# தேவை : தேவபக்தியுள்ள மூப்பர்கள்

## NEEDED : MORE GODLY ELDERS

*Byron Nichols*

நான் பொதுவாக, உண்மையுள்ள மூப்பர்கள், பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் தன்னலமற்ற ஊழியர்களுக்கு வயதாகிக் கொண்டிருப்பதைப் பற்றி சிறிது கவலையடைந்திருக்கிறேன். இங்கே நான் அவநம்பிக்கையுடன் பேசவில்லை. ஆனால், கர்த்தருடைய சபையில் இப்போது பொறுப்புகளை ஏற்றிருக்கும் இந்த உறுதியான கிறிஸ்தவர்களைப் பின்தொடர்ந்து, அடுத்து பொறுப்புகளை ஏற்கும் சகோதரர்கள் குறித்து கவலை எனக்குக் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. இன்றைய நாட்களில் சபைகளில் தேவபக்தியுள்ள மூப்பர்களின் பொறுப்புகளை ஏற்பதற்கு ஆவிக்குரிய பிரகாரமாக ஆயத்தமாயிருக்கிற சகோதரர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை.

சபைகளை வழிநடத்துவதற்குத் தலைவர்கள் இருக்கமாட்டார்கள் என்று நான் பயப்படவில்லை. சபையை வழிநடத்த பலர் உருவாக்கப்படுவார்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால், அவர்கள் எப்படிப்பட்ட தன்மைகளை உடையவர்களாயிருப்பார்கள் என்பது தான் என் கவலையாயிருக்கிறது.

சபையில் மூப்பர்களுக்கு மாத்திரம் பொறுப்புகள் கொடுக்கப்படுவதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வது முக்கியமாகும். இது புதிய ஏற்பாட்டில் உண்மையாயிருக்கிறது. இது எப்போதுமே உண்மையாயிருக்கும். இது ஒன்றும் தீமையானதல்ல, மாறாக, நன்மையானது தான். மூப்பரல்லாத பல உண்மையுள்ள சகோதரர்கள் சபையை வழிநடத்தும் சிறப்பான திறமைகளைப் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேவ மனிதர்கள் சபையில் மூப்பர்களின் கண்காணிப்புக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்யும்போது, அவர்கள் சபைக்கு பெரிய ஆசீர்வாதமாயிருப்பார்கள். இந்த தேவ மனிதர்களில் சிலர், சபையை வழி நடத்துவதற்குத் திறமைகளைப் பெற்றிருந்தாலும், 1 தீமோத்தேயு 3, மற்றும் தீத்து 1 ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற தகுதியம்சங்களுக்கு உட்பட்டவர்களாக அல்லது பொருந்தாதவர்களாக இருக்கிறபடியால் அவர்களால் ஒருபோதும் மூப்பர்களாக முடியாது. அவர்களுடைய தகுதியின்மைக்கும், ஆவிக்குரிய தன்மைகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. உதாரணமாக, ஆவிக்குரிய பிரகாரமாக முதிர்ச்சியடைந்த பல கிறிஸ்தவ சகோதரர்களை எனக்குத் தெரியும். ஆனாலும், அவர்களுக்கு இன்னும் திருமணமாகவில்லை. இதன் பொருள், அப்படியானால் இவர்களால் சபையில் தலைமைத்துவ பொறுப்புகளை ஏற்று நடத்த முடியாது என்று இருக்குமா? இல்லைவே இல்லை. வேறு சில தேவ மனிதர்களுக்குத் திருமணமாகிவிட்டது. ஆனால், அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை.

ஆகவே, அவர்களால் மூப்பர்களாக சேவை செய்ய முடியாது என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. இருந்தபோதிலும், அவர்கள் மற்றவர்களைக் கிறிஸ்து வுக்குள் சிறந்த வாழ்க்கை வாழ வழி நடத்த முடியும். இப்படிச் சபையில் பலரைக் கிறிஸ்துவுக்குள் சிறப்பாக வழிநடத்துகிற பல சகோதரர்களை உதாரணமாகச் சொல்லமுடியும். ஆனால், பல காரணங்களால் இவர்களால் மூப்பர்களாகச் செயல் பட முடியாது. இந்த சகோதரர்களால் நிச்சயமாக சிறந்த தலைவர்களாச் செயல்பட முடியும். ஆனால், இவர்கள் மூப்பர்களின் தலைமைத்துவத்தையும், அதிகாரத் தையும் பறிக்காத அளவுக்குச் செயல்பட வேண்டும்.

ஓர் உள்ளூர் சபையில், மூப்பர்களின் சேவை அவசியமானதால் தான் அவர்களைத் தெரிந்தெடுப்பதில் அதிகபட்ச அக்கறையும், கவனமும் எச்சரிப்பும் கொடுக்கப்படுகிறது. சபையின் எதிர்கால நலன் கருதி மூப்பர்களைத் தெரிந் தெடுப்பதில் சபையார் மிகுந்த ஜாக்கிரதையுடன் செயல்பட வேண்டும். பிரசங்கியார் களைத் தெரிந்தெடுப்பதிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. பிரசங்கியார்கள் தேவனுடைய வார்த்தையை உண்மையாக அறிவிக்கும் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். சபையில் அவர்களுக்கு, மூப்பர்களை விட அதிகமான பணிகள் உண்டு. பிரசங்கியார்கள் அநேக நன்மைகளைச் செய்யும் நிலையில் இருக்கிறார்கள். இருந்த போதிலும், அவர்கள் அப்படிச் செய்யாத பட்சத்தில் அதிகமான தீமைகளைச் செய்கிறார்கள். பிரசங்கியார் உட்பட ஒட்டுமொத்த மந்தையையும் கண்காணிக்கும் பொறுப்பு மூப்பர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு பிரசங்கியார் வேத வசனங்களுக்கு எதிராகப் போதித்தாலோ அல்லது காரியங்களைச் செய்தாலோ அதைச் சீர்த்திருத்தும் பொறுப்பு மூப்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும்போது, "*கண்காணியானவன் ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற் கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்* " என்று சொல்லுகிறார் (தீத்து. 1:9). அப்போஸ்தலர் 20:28 மற்றும் 1 பேதுரு 5:8 போன்ற வசனங்கள், மூப்பர்கள் தேவனுடைய வார்த்தையில் தேறின வர்களாகவும், ஆவிக்குரிய மனதுடையவர்களாகவும் இருக்க வேண்டியதின் அவசியத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறது. மூப்பர்கள் தங்கள் வேத அறிவைக் கொண்டும், தேவனுடைய வார்த்தையைக் கொண்டும் கடிந்து கொள்ளவும், சீர்திருத்தம் செய்ய வேண்டும். மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், சிக்கலான சூழ்நிலைகளைச் சமாளிக்க அல்லது அச்சூழ்நிலைகளில் வேத அறிவைக் கொண்டு தீர்வுகாண அவர்களுக்கு வேத அறிவோ, திறமையோ, விருப்பமோ இல்லையென்றால் அவர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்று கிறார்களா? மூப்பர்கள் தங்கள் முழுத்திறனுடன் செயல்படத்தக்க மூப்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியத்தில் சபை தன் பொறுப்பை நிறைவேற்றுகிறதா? தகுதி யில்லாத மூப்பர்களைத் தெரிந்தெடுப்பது யாருடைய தவறாயிருக்கிறது? உண்மை யாகவே, மூப்பர்கள் தங்கள்மீது மிகப்பெரிய பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்.

ஒரு சபை உண்மையுள்ளதாயிருந்தாலும், உண்மையற்றதாயிருந்தாலும் கடைசியாகக் கணக்கு கொடுக்கவேண்டியவர்கள் அவர்களே. அவர்கள் தங்கள் மந்தையினிடத்தில் உண்மைத்தன்மைக்கும், ஆரோக்கியமான உபதேசத்துக்கும் சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும் (1 பேதுரு 5:3; எபிரெயர் 13:17). இது நாம் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் அல்ல. " *மூப்பர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்* " (எபிரெயர் 13:17).

வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்காக மந்தையை உண்மையாய் மேய்க்கும் அநேக மூப்பர்களைக் கொடுத்து தேவன் சபையை ஆசீர்வதிப்பாராக ! ✝

## அதிகாரம்

**அ**ப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி; வானத்திலும் பூமியிலும் சகல " *அதிகாரமும்* " எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென் (மத்தேயு 28:18, 20)

பின்பு கப்பர்நகூமுக்குப் போனார்கள். உடனே அவர் ஓய்வு நாளில் ஜெய ஆலயத்திலே பிரவேசித்து, போதகம் பண்ணினார். அவர் வேதபாரகரைப் போலப் போதியாமல், "*அதிகாரமுடையவராய்* " அவர்களுக்குப் போதித்த படியினால் அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள் (மாற்கு 1:21, 22)

அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே " *நாமம்* " தரிக்கப்பட்டார் (எபிரெயர் 5:8, 10).

நிர்வாக ஆசிரியர் உரை

# ஏன் இந்த மாற்றம்?

## WHY THIS CHANGE?

*E.Z.S. Rajanayagam*

**மா**னிடர்களாகிய நாம் வாழும் இந்த உலகம் மாற்றத்திற்குப் பெயர்போனது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஏனெனில், உலகில் மாற்றமா அல்லது மாற்றமே உலகமா என்று சொல்லுமளவுக்கு மாற்றங்கள் துரித கதியில் நடந்து, மிக முக்கியமான இடத்தைப் பெற்றுவிட்டது. தினம் தவறாமல் ஏதாவதொரு மாற்றம் நடந்து கொண்டுள்ளது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவ்வப்பொழுது நிகழும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு, அவைகளை ஜீரணிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனக்கு மாற்றமே பிடிக்காது. ஆகவே நான் இவைகளை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என யாரும் ஒதுங்க முடியாது.

யோசுவா தனது இறுதி நாட்களில், தன்னால் வழிநடத்தப்பட்ட இஸ்ரவேலின் மூப்பரையும், நியாயாதிபதிகளையும் தேவனுடைய சந்நிதியில் நிற்கச் செய்து (யோசுவா 24:1), மறக்கும் இயல்பைச் சற்று அதிகமாகவே கொண்ட இஸ்ரவேலுக்கு, ஒட்டு மொத்த சரித்திரத்தையும் நினைவுபடுத்தி, தேவனுக்கு அவர்கள் விசேஷமானவர்கள் என்பதை எடுத்துச்சொல்லி, தேவன் அவர்களுக்குச் செய்த நன்மைகளை விவரித்துக் காட்டி, அந்த தேவனுக்கு அவர்கள் என்றென்றும் உண்மையாக இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, அவர்களுடைய சிந்தனையைக் கிளறி, உணர்வுகளைத் தட்டியெழுப்பும் ஒரு பிரிவுபசார பிரசங்கத்தை மிக நேர்த்தியாகச் செய்தான்.

யோசுவாவின் வாயிலிருந்து புறப்பட்ட ஆழமும், அர்த்தமும் மிகுந்த இவ்வார்த்தைகள், கூடியிருந்தவர்களின் நெஞ்சில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் உடனடியாக, ஏக குரலால், " *...வேறே தேவர்களைச் சேவிக்கும்படி கர்த்தரைவிட்டு விலகுகிற காரியம் எங்களுக்குத் தூரமாயிருப்பதாக (24:16) என்றார்கள். இதிலும் திருப்திப்படாத யோசுவா மேலும் அவர்களைச் சோதிக்கும் படியாய்,*" " *...நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்..*" என்றபோது (24:19), ஜனங்கள் மீண்டும் யோசுவாவை நோக்கி, "*...அப்படியல்ல நாங்கள் கர்த்தரையே சேவிப்போம்* " (24:21) என்றார்கள்.

ஆனாலும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இதே இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து, மறுரூபமலையில் இயேசுவோடு காட்சிதரும் அளவுக்கு

(மத்தேயு 17:3). தனது தீர்க்கதரிசன ஊழியத்தில் நெடிதுயர்ந்து நின்ற எலியா, இஸ்ரவேலை ஆண்ட ஆகாப் என்பவனின் நாட்களில். " ....*நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். ஜனங்கள் பிரதியுத்தமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை* " (1 ராஜாக்கள் 18:21). ஆம், அப்பொழுது அங்கே கூடியிருந்த திரளான ஜனங்கள் பேசா மடந்தைகளாகக் காட்சி தந்தார்கள்.

இஸ்ரவேலின் சரித்திரத்தை நாம் கொஞ்சம் அலசிப்பார்த்தால் இக்கேடான நிலை எப்படி வந்தது என்று ஓரளவு புரிந்து கொள்ளலாம். விக்கிரக வணக்கத்தை தேவன் " *ச்சீ* " (உபாகமம். 7:26; ஏசாயா. 30 :22) என்று ஒதுக்கச் சொல்லுகிறார். ஆம்! அது யெகோவாவின் பார்வைக்கு அருவருப்பானது. ஆனாலும், " *யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப் பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பர்களுடைய சகல நாட்களிலும் இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்.*" (யோவா 24:31). இவர்களுக்குப் பின் எழும்பின அடுத்த சந்ததியார் பாகால் களையும், அஸ்தரோத்தையும் சேவித்தார்கள் (நியாயாதிபதிகள் (2:10,13).

அதன் பிறகு, இராஜாக்களின் காலம் தொடங்கியது. ஒருவேளை சவுல் ராஜா கொஞ்சம் சரியில்லையென சொல்லும்படியான நிலையிலிருந்தாலும், அவன் நாட்களில் விக்கிரக வணக்கம் இல்லை. பிறகு தாவீது அரசனின் நாட்கள். இஸ்ரவேலின் பொற்காலம். கர்த்தர் தாவீதுடனே இருந்தார். அதன் பிறகு, ஞானி என்று பெயர் பெற்றும், தனது இறுதிக் காலத்தில் மூடனாக ஜீவித்த சாலமோன் ராஜாவின் காலம். சாலமோனின் மோக இச்சை ஒழுக்க ரீதியான எல்லையைக் கடந்தபடியால், இவன் தேசத்தின் எல்லையைக் கடந்து அந்நிய ஜாதியான அநேக ஸ்திரீகள் மேல் ஆசை வைத்து 700 மனைவிகளையும், 300 மறு மனைவி களையும் தேடிக்கொண்டான். விளைவு? "... *அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்* (1 ராஜாக்கள் 11:4)."

எப்படியோ, பரிசுத்த தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஓர் உன்னத ஜனம் விக்கிரகங்களின்பால் கொண்ட நாட்டத்தால், தாங்களின் பக்தி நிலையை மாற்றிக் கொஞ்சம், கொஞ்சமாக விலகி, இந்த விபரீத விளையாட்டின் வெற்றிக்குக் கிடைத்த பரிசாக கி.மு. 722 ம் ஆண்டு அசீரியர்களால் மேற்கொள்ளப்பட்டு, சிதறடிக்கப்பட்டு, உருத்தெரியாமல் அழிந்து, சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து முற்றிலுமாக துடைத்துப் போடப்பட்டார்கள் (2 ராஜாக்கள் 17:1, 8). ஆம், இதன்பிறகு, இவர்கள்பற்றிய பேச்சு வேதாகம சரித்திரத்திலோ அல்லது உலக சரித்திரத்திலோ இல்லை.

1. யோசுவாவின் காலமும்–முதல் நூற்றாண்டுக் காலமும்

இந்த மாற்றம் தரும் முதல் பாடம், இரண்டு காலங்களையும் ஒப்பிடுவதன் மூலம் கிடைப்பதாகும்.

ஆம், யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த பக்தியுணர்வு கொண்ட இஸ்ர வேலையும், முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த விசுவாச உறுதிகொண்ட கிறிஸ்தவர்களையும் நாம் ஒரு வகையில் ஒப்பிட முடியும். " *இரட்சிப்பு* " என்ற பொருளையுடைய யோசுவாவுக்குப் பின் உயிரோடிருந்த மூப்பர்களுடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் எப்படிக் கர்த்தரைச் சேவித்தார்களோ அதுபோலவே, "*இரட்சிப்பு* " என்ற பொருளையுடைய இயேசுவுக்குப்பின் வாழ்ந்த அப்போஸ்தலர் களுடைய காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், தங்களுடைய விசுவாச விஷயத்தில் ஒரு சிறப்பான இடத்திலேயே இருந்தனர்.

அப்படியானால் தவறு எங்கே நிகழ்ந்தது? அழிவை ஏற்படுத்தும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதே, அது எப்படி? யோசுவாவின் காலத்து ஜனங்கள், ஒரு வேளை மோசேயின் பிரமாணம் முழுமையையும் கைக்கொண்டோமென்று சொன்னாலும் கூட, குறிப்பிட்ட ஒரு கட்டளையை அவர்கள் பின்னுக்குத் தள்ளிய தாகவே தோன்றுகிறது. " *...இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலிருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளை களுக்கு கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு...* " (உபாகமம் 6:6,7) என்று மோசேயின் பிரமாணம் சொல்லுகிறது. இக்கட்டளைக்கு அந்த ஜனம் முழுமையாகக் கீழ்ப்படிந்ததுபோல் தெரியவில்லை. ஆக, முக்கியமான தேவ கட்டளை புறக்கணிக்கப்பட்டதால், அதாவது உபதேசிக்க வேண்டியதை உபதேசிக்காததால் பக்திநிலையில் மாற்றம் எற்பட்டு, சிறிது சிறிதாக விலகி, ஒரு கட்டத்தில் முற்றிலும் அழிந்து போனார்கள்.

அதுபோலவே, முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிற்பகுதியையும், குறிப்பாக அதன் பிறகு வந்த காலங்களையும் கவனித்துப் பார்த்தால், அங்கும் உபதேசம் தான் சீஷர்களின் - கிறிஸ்தவர்களின் பக்திநிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு - பின் மாற்றத்திற்குக் காரணமாகிவிட்டது. ஆனால், வித்தியாசம் யாதெனில், அங்கே உபதேசம் இல்லாமல் தேவஜனம் கெட்டு சரீரப்பிரகாரமாக அழிந்தது. இங்கே உபதேசங்களால், அதாவது கள்ள உபதேசங்களால் தேவஜனம் வழி விலகிப் போனது.

ஆகையால், அருமையான வாசகரே! நாம் ஒவ்வொருவரும் யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த தேவ ஜனங்களைப் போலவும், முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் போலவும் கர்த்தருடைய உபதேசத்திற்கடுத்த காரியங்களில் உண்மையும், செம்மையுமாயிருந்து, சரீர வாழ்வுக்கான பாதுகாப்பையும், ஆன்ம வாழ்வுக்கான பாதுகாப்பையும் பெற்றுக்கொள்வோமாக!

**2. ஆகாபின் நாட்களும் - நமது நாட்களும்**

இந்த மாற்றம் தரும் இரண்டாவது பாடம், ஆகாபின் நாட்களையும், நமது நாட்களையும் ஒப்பிடுவதின் மூலம் கிடைப்பதாகும்.

ஆகாப் ராஜாவின் நாட்களில் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற மக்களின். ஆன்மீகச் சீரழிவு உச்ச கட்டத்திற்குப் போய்விட்டது. மெய்யான தேவனை விட்டு விக்கிரகங்களின் பின் சென்றதால் அவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது. பக்தி நிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் முடிவெடுப்பதில் தடுமாற்றம் பெருமளவில் வந்தது.

ஆகாபின் நாட்களில் இருந்த அதே நிலைதான் இன்று நம்முடைய நாட்களிலும் இருக்கிறதோ என்று எண்ணுமளவு தான் காரியங்கள் உள்ளது. எப்படி உண்மையான தேவனுக்கும், பொய்யான தெய்வங்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஜனங்கள் தடுமாறினார்களோ அதுபோலவே, மெய்யான தேவனால் கட்டப்பட்ட ஒன்றான மெய் சபைக்கும், பிசாசின் விபரீத எண்ணங்களால் விளைந்த பொய்யான சபைகளுக்கும் வேறுபாடு காணமுடியாமல் கிறிஸ்தவம் தடுமாடுகிறது.

உண்மையில், வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவத்திற்கும் இன்றைக்கு நடைமுறையில் உள்ள கிறிஸ்தவத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லையென்ற நிலைதான் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒன்றான மெய் சபையாகிய " *கிறிஸ்துவின் சபை* " ஆரம்பிக்கப்பட்ட நாட்களில், கிறிஸ்தவர்களுக்குக்குள்ளாக இருந்த மேலான குணங்கள் இன்று கிறிஸ்தவர்களிடையே இல்லை. வேதாகம கிறிஸ்தவர்களுக்கும், இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்குமிடையே ஒரு பெரிய இடைவெளி காணப்படுகிறதே. இது எதனால்? இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் சொல்லுங்கள்.

எப்படி, " *என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்* " (யாத்திராகமம் 20:3) என்று மோசேயைன் கொண்டு சொல்லப்பட்ட தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியால் அந்நிய ஜனங்களின் விக்கிரகங்களைப் பின்பற்றி ஒரு சீரழிந்த நிலைக்கு இஸ்ரவேலர் சென்றார்களோ, அதே போன்ற வெளிப்படையான காரணம் தான் இங்கும். ஆம், " *இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்* " (மத்தேயு 16:18) என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினதைக் கண்டுகொள்ளாமல், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகளில் தங்களை இணைத்துக்கொண்டு, ஆவிக்குரிய ரீதியில் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களின் ஆன்மீக வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் வடக்கு ராஜ்ஜியத்தின் ஜனங்களை கி.பி. 722 உடன் தேவனிடத்திலிருந்து நிரந்தரமாகப் பிரித்துவிட்டது. ஒருவேளை, நாமும் ஆன்மீக காரியங்களில் மாற்றம் விரும்பிகளாக இருப்போமானால், கிறிஸ்துவின் வருகையின் நாளிலிருந்து என்றென்றும் பிரிக்கப்பட்டு விடுவோம். எனவே, ஆவிக்குரிய காரியங்களில், வேதவசனங்களுக்கு மாறான மாற்றம் விரும்புகிற மக்களாக நாம் இராமல் உண்மைச் சத்தியத்திற்கு ஒப்புக்கொடுத்து, ஒன்றான மெய் சபையாம் கிறிஸ்துவின் சபையில் அங்கமாகி வாழ்வோமாக!.

# உள்ளடக்கம்


தேவை : தேவபக்தியுள்ள மூப்பர்கள் .................. Byron Nichols ... 1

ஏன் இந்த மாற்றம்? .................. S. Rajanayagam ... 4

மாதிரியாக இருத்தல் .................. J.C. Choate ... 10

தேவன் வல்லவராயிருக்கிறார் .................. Jerry Bates ... 13

வேதத்தின் மகத்துவம் .................. Benny Martin ... 17

நன்றி கொடுத்தல் .................. P.C. Philemon Rajah ... 20

விசுவாசத்தின் இரகசியம் .................. B. Arjunan ... 22

கிறிஸ்தவன் என்று மட்டும்.... .................. E.Z. Selvanayagam ... 26

**தேவன் — God**

கழுகைப் போல .................. Tom Kelton ... 29

இயேசு தேவனாயிருக்கிறார் .................. Gray C. Hampton ... 31

இயேசுவின் பலி .................. Andrew House ... 33

இயேசுவும், சிலுவையும் .................. Williard Collins ... 35

**சாட்சியங்கள் — Evidences**

கிறிஸ்தவ சாட்சியங்கள் .................. T. Pierce Brown ... 39

பரிணாமமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? .................. Ashley Betes ... 42

**தேவனுடைய வார்த்தை — The Word of God**

மிகச்சிறந்த மறைவிடம் .................. Bob Plunket ... 44

நாம் வேதாகமத்தைச் சரியாக .... .................. Kerry Holton ... 46

பரிசுத்த வேதவாக்கியங்களின் மதிப்பு .................. Wayne Jackson ... 47

**இரட்சிப்பு — Salvation**

அதிக காலம் காத்திருப்பது .................. Hershel Dyer ... 49

ஞானஸ்நானம் பெற .................. Ron Bryant ... 51


இழந்த வாய்ப்புகள் .................. Charles R.Rose ... 55

**சபை — The Church**

தேவனுடைய ராஜ்யமும் ...... .................. Sunny David ... 58

| | | |
|---|---|---|
| நம் மாபெரும் தேவை | ................. Dalton Key | ... 61 |
| கர்த்தருடைய சேனை | ................. L.E. Cranford | ... 63 |
| மன்னிப்பும், ராஜ்யமும் | ................. Gary C. Hampton | ... 66 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine To Live By** | |
| ஒன்று பாதிப்பை ஏற்படுத்தினாலும் | ................. Bobby Wheat | ... 70 |
| வேறொரு உபதேசமில்லையே | ................. Owen D. Olbricht | ... 72 |
| விசுவாசமே நம்முடைய ஜெயமாயிருக்கிறது | ................. Randall Caselman | ... 74 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| மார்த்தாளா அல்லது மரியாளா? | ..................... Bonnie Rushmore | ... 77 |
| சுவிசேஷ ஊழியத்தின் | ..................... Wayne Barrier | ... 80 |
| வெளியே சொல்லாமல் | ..................... Ronny Crocker | ... 82 |
| நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன் | ..................... Roy V. Palmer | ... 84 |
| **ஆராதனை** | **Worship** | |
| அவருடைய நினைவில் | ..................... Roger Johnson | ... 87 |
| ஜனங்கள் எதற்காகக் கொடுக்கிறார்கள்? | ..................... Jerry A. Jenkins | ... 90 |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** | **Daily Christian Living** | |
| கஷ்டங்கள் இயல்பான வாழ்க்கை | ..................... Ronald D. Bryant | ... 93 |
| நான் சபைக்கு கட்டாயம் | ..................... Steve Higginbotham | ... 94 |
| மதிகேடாய் நடக்கிற அழகுள்ள | ..................... Ken Tyler | ... 95 |
| மனதைப் பூட்டுதல் | ..................... David. W. Caldwell | ... 96 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | |
| நேர்மறையாகப் பயிற்றுவித்தல் | ..................... Betty Burton Choate | ... 100 |
| நல்ல பெற்றோர்களாய் இருப்பது எப்படி? | ..................... David Terbet | ... 103 |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | **Bible Characters** | |
| இயேசு நேசித்த சீஷன் | ..................... Don R. Owen | ... 105 |
| சில புதிய ஏற்பாட்டு விஜபிகள் | ..................... Owen Cosgrove | ... 107 |
| தேவனை மகிமைப்படுத்துவோம் வாருங்கள் | ..................... Thomas R. Dohline | ... 109 |

# மாதிரியாக இருத்தல்



## BEING AN EXAMPLE

*J.C.Choate*

நீங்களும், நானும் மாதிரியாக இருக்கிறோம். நாம் உணர்கிறோமோ அல்லது உணராமல் இருக்கிறோமோ, நாம் விரும்புகிறோமோ அல்லது விரும்பாமலிருக்கிறோமோ, நாம் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறோமோ அல்லது ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறோமோ, நீங்களும், நானும் நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு நல்ல மாதிரியாகவோ அல்லது மோசமான மாதிரியாகவோ இருந்து கொண்டு தான் இருக்கிறோம்.

மாதிரி என்றால் என்ன? இதன் பொருள் எடுத்துக்காட்டு அல்லது முன்னுதாரணம் என்பது. மற்றவர்கள் நம் வாழ்க்கையைக் காண முடியும், அவர்கள் நம் பேச்சைக் கேட்க முடியும், நம் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும். மற்றவர்களால், நாம் ஜனங்களிடத்தில் எவ்விதமான மனநிலையில் நடந்து கொள்ளுகிறோம் என்பதை உற்றுக் கவனிக்க முடியும். நாம் செய்கிற நல்ல விஷயமாக இருந்தாலும் சரி, மோசமான விஷயமாக இருந்தாலும் சரி, அவர்கள் நம்மிடம் எதைப் பார்க்கிறார்களோ அதினால் ஈர்க்கப்படுவார்கள். பார்வையாளர்கள் நாம் எதைச் செய்கிறோமோ அதைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நாம் இதைப்பற்றி சிந்திப்போமானால், மற்றவர்கள் பின்பற்றும்படியான மாதிரியை முன் வைப்பதன் நித்திய முக்கியத்துவத்தை நம்மால் காணமுடியும்.

நாம் மற்றவர்களுக்குச் சிறந்த மாதிரியாக இருக்க வேண்டுமென்றால் முதலில் நாம் பின்பற்றத்தக்கதான சிறந்த முன்மாதிரி நமக்கு வேண்டும். நமக்கு அதிக நெருக்கமானவர்கள் நம்மீது ஒரு பெரியதாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. நம் வாழ்க்கை மதிப்புமிக்க ஒன்றாக இருக்கவேண்டுமென்றால் நாம்

மோசமான சகவாசங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். ஆனால், நம் வாழ்க்கையின் சிறந்த மாதிரியாக நாம் யாரை நோக்கிப் பார்க்க முடியும்? இக்கேள்விக்குப் பதிலளிக்க நாம் வசனங்களில் பரிச்சையமுடையவர்களாக இருந்தால் மட்டுமே உங்களுக்கும், எனக்கும், எல்லோருக்கும் மிகச் சிறந்த மாதிரியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை காட்ட முடியும். அப்போஸ்தலனாகிய பேதுரு, " *இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்* " என்று சொன்னார் (1 பேதுரு 2:21). கிறிஸ்துவானவர் தேவனிடத்திலிருந்து வந்தவராயிருந்தாலும் கூட, எல்லாவற்றிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவம் செய்யவில்லை. இதுபற்றி எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, " *நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசிரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்* " என்றார். (எபிரெயர் 9:15) கிறிஸ்து தேவபக்தியுள்ளவராகவும், பரிசுத்தமுள்ளவராகவும் தன்னலமற்றவராகவும், தாழ்மையுள்ளவராகவும், பொறுமையுள்ளவராகவும், எல்லோரிடத்திலும் அன்புடையவ்ராகவும் இருந்தார்.

வாழ்வின் ஏதாவதொரு கட்டத்தில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்து நிச்சயமில்லாத சூழ்நிலையில், இயேசுவானவர் எனக்கு என்ன செய்வார் என்று கேட்பது நலமாயிருக்கும். நாம் அந்தக் கேள்வியைக் கேட்டு இயேசுவின் மாதிரியைப் பின்பற்றினால், நாம் நிச்சயமாக சரியானதைச் செய்கிறவர்களாக இருப்போம். நாம் நம்மை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறோம். அதன் பொருள் கிறிஸ்துவைப் போன்றவன் என்பதாகும். 1 கொரிந்தியர் 5:20ன் படி நாம் இவ்வுலகில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாயிருக்கிறோம். " *ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருந்து தேவனோடே ஒப்புர வாகுங்கள்* " என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஒருவரை என் பெயரில் ஒரு குறிப்பிட்ட பணிக்காக அனுப்பினால், எந்தச் சூழ்நிலையிலும் நான் எப்படிப் பேசுவேனோ, சிந்திப்பேனோ, நடந்துகொள்வேனோ அப்படித்தான் அந்த நபரும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பேன். ஆனால், அதற்குப் பதிலாக அந்த நபர் என் பெயரில் பொய் சொன்னாலோ, என் பெயரில் ஏமாற்றினாலோ, நான் எதற்காக நின்றேனோ அதற்கு முரண்பட்ட விதத்தில் நடந்து கொண்டால் அந்த நபர் எனக்கு மிகப்பெரிய துரோகம் இழைத்துவிட்ட வராவார்.

நம் ஆண்டவர் தம்முடைய நாமத்தை நாம் தரித்துக்கொள்ளும்படி அதை நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அந்நாமம் பாவத்தாலோ, அக்கிரமத்தாலோ ஒருபோதும் களங்கப்படுத்தப்படவில்லை. நாம் மற்றவர்களுக்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாயிருக்க வேண்டும். நாம் எதைச் சொல்லுகிறோமோ, எதைச்

செய்கிறோமோ அதையெல்லாம் ஜனங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம் மனப்பான்மையை அவர்களோடும், மற்றவர்களோடும் எடை போட்டுப் பார்க்கிறார்கள். இது அவர்கள், கிறிஸ்தவத்திற்கு எப்படி விளக்கம் கொடுப் பார்கள் என்பதைத் தீர்மானிக்கும். நாம் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதும், அவர்களை வெளியே விரட்டி விடுவதும் அவர்கள் கிறிஸ்தவத்திற்குக் கொடுக்கும் விளக்கத்தைப் பொறுத்துத்தான் அமையும்.

நாம் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளலாம், நம்மைச் சுற்றிலு மிருப்பவர்களுக்கு நாம் உடனடியாகப் பிரசங்கிக்கலாம். ஆனால், நாம் என்ன சொல்லுகிறோம் என்பதைவிட நாம் எப்படி வாழ்கிறோம் என்பதுதான் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இங்கே கேள்வி என்னவென்றால், நாம் எதைப் பிரசங்கிக் கிறோமோ அதை அப்படியே செயல்படுத்துகிறோமா? நம்மை ஒவ்வொரு நாளும் திரளான ஜனங்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் உலகத்தின் மக்கள் இருக்கிறார்கள். ஆனால், இதில் நம் நண்பர்களும், உறவினர்களும், நம் சொந்த பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றிய எண்ணம், நம்மைப் பார்க்கும்போது எப்படியாக இருக்கிறது? நாம் நம்மை நேர்மையானவர் களாக, உண்மையுள்ளவர்களாக சொல்லிக்கொள்கிறோமே! அவர்கள் நம்மை அப்படிக் காண்கிறார்களா?

அவர்கள் நம்மைப் போலிகளாக, வேடதாகளாக, நடிகர்களாக, பாசாங்கு செய்கிறவர்களாகக் காண்கிறார்களா? சபை அங்கத்தினர்களில் சிலர் ஆராதனை களில் கலந்து கொள்வதுமில்லை, தங்கள் பிள்ளைகளை வேதபாட வகுப்புகளுக்கு அழைத்து வருவதுமில்லை. அதுபோல் வீட்டிலும் வேதாகமத்தை வாசிப்பதில்லை. இன்னும் சிலருக்கு சொந்த செலவுகளுக்காக பணம் இருக்கும். ஆனால், கர்த்தருடைய காரியங்களுக்குப் பணம் இல்லை என்பர். நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களில் குற்ற உணர்வு உடையவர்களாக இருந்தால், உங்கள் பிள்ளைகள் வளரும் போது, கர்த்தருக்கடுத்த காரியங்களில் விருப்பமாயிருந்து அவருக்குக் கீழ்ப் படிவார்களா? அல்லது அவருக்கு உண்மையாயிருப்பார்களா?

இப்படிப்பட்ட உதாரணம் கிறிஸ்துவின் நாமத்திற்கு நாம் இழைக்கும் துரோகமாகும். இது கிறிஸ்துவினிடத்தில் ஜனங்களை வழி நடத்தாது, மாறாக அவர் களை கிறிஸ்துவை விட்டு வெளியே இழுத்துச் சென்று விடும். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து காலம் முடிவதற்கு முன்பாக தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ளுங்கள். அப்போஸ் தலனாகிய பவுல் இளம் பிரசங்கியாரான தீமோத்தேயுவிடம், " *உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசி களுக்கு மாதிரியாயிரு* " என்றார். (1 தீமோத்தேயு 4:12). தீமோத்தேயு ஓர் இளம் வாலிபனாக, குறிப்பாக இளம் விசுவாசியாக இருந்தபடியால், வயதை அடிப்படையாக வைத்து யாரும் குற்றம் சுமத்தாத வாழ்க்கையை வாழவேண்டுமென்று பவுலடி யாரால் புத்தி சொல்லப்பட்டுள்ளது. ✝

# தேவன் வல்லவராயிருக்கிறார்

## GOD IS ABLE

*Jerry Bates*

எபேசியர் 3:20-ல், ஒரு உற்சாகமான சொற்றொடரை நாம் காண்கிறோம். தேவன் " *நாம் வேண்டிக் கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராயிருக்கிறார்* " என்று இவ்வசனம் நமக்கு உறுதி செய்கிறது என்று. தேவனுக்கு மிகப் பெரிய வல்லமை உண்டு. ஆனால், கேள்வி என்னவென்றால். அவருடைய வல்லமையின் எல்லை எவ்வளவு என்பது தான். தேவனை பலர் மனிதனைப் போன்றவரென்றும், சாதாரண மனிதனைவிட அதிக வல்லமையுடையவரென்றும் எண்ணுகிறார்கள். இருந்தபோதிலும் சில மனிதர்களால் ஆச்சரியப்படும்படியான காரியங்களைச் செய்ய முடியும். " *சூப்பர் மனிதர்கள்* " என்று தலைப்பிடப்பட்ட ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றை ஒளிபரப்பினார்கள். அந்நிகழ்ச்சியில் ஒரு மனிதன் " *220 வோல்ட்* " மின்சாரத்தை தன் உடம்பில் பாய்ச்சி வித்தை காட்டினான். அவனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. இந்த அளவு (220 வோல்ட்) சக்திவாய்ந்த மின்சாரம் சாதாரணமாக மனிதனைக் கொன்று விடும். ஆனால், அந்த மனிதனுக்கு அது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. உண்மையாகவே, இன்னும் பல ஆச்சரியமுட்டும் திறமைகளுடன் சில சூப்பர் மனிதர்கள் இருக்கிறார்கள்.

தேவன் வெறுமனே ஒரு சூப்பர் மனிதனா? ஏசாயா தீர்க்கதரிசி, ஏசாயா 40:18-ல் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார். " *இப்படியிருக்க தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?* "இதே விதமான கேள்வி ஏசாயா 40:25-லும் இடம் பெற்றிருக்கிறது. நாம், தேவனை ஒரு சூப்பர் மனிதனோடு ஒப்பிட முடியுமா? தேவனுடைய வல்லமை என்ன என்பதை நம்மால் தீர்மானிக்க முடியுமா? ஆதியாகமம் 14:18-ல், மெல்கிசெதேக்கு அறிமுகப் படுத்தப்படுகிறார். அவர் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாக விவரிக்கப்பட்டிருக்கிறார். இது "*ஏலியோன்*" என்கிற எபிரெய வார்த்தையிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் "*வல்லமை மிக்கவர்* " என்பதாகும். தேவன் முழுமையான அதிகாரம் படைத்தவராயிருக்கிறார். ஆதியாகமம் 21:33-ல் தேவன் சதாகாலமுமுள்ள தேவனாக அழைக்கப்படுகிறார், இதில் காலம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்று நாம் சாதாணரமாக நினைப்போம். இருந்தபோதிலும், காலத்தைக் கடந்தும் பல காரியங்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. தேவன் முதலும், முடிவும் இல்லாதவர் என்பதால் அவர் நித்தியமாவனர் மாத்திரமல்ல, அன்பு, தயை, மகிமை,

சத்தியம், நீதி போன்ற எல்லாவற்றிலும் அவர் அளவில்லாதவராக இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 3:19 ல், தேவனுடைய அன்பு அறிவுக் கெட்டாதது என்று சாட்சி கொடுக்கிறார். ஆதியாகமம் 17:1ல் தேவன் "*சர்வ வல்லவர்* " என்றழைக்கப்படுகிறார். இங்கே சூழ்நிலை என்னவென்றால், ஈசாக்கின் பிறப்பு அறிவிக்கப்படுகிறது. ஆபிரகாம் ஒரு குமாரனைப் பெறுவார் என்பதை நிச்சயப்படுத்த, தேவன் தாம் சர்வ வல்லவர் என்பதை ஆபிரகாமுக்கு நினைவுபடுத்தினார். சாராள் நகைத்த போது, " *கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?* " என்று தேவன் கேட்டார் (ஆதியாகமம் 18:14). தேவனுக்கு இருக்கின்ற வல்லமையைப் போன்று உலகில் வேறு யாருக்குமே இல்லை. எவ்வித கேள்வியுமின்றி, மேற்சொல்லப்பட்ட நாமங்களால் எந்த ஒரு மனிதனையும் வர்ணிக்கவே முடியாது. சூப்பர் மனிதர் களும் அதற்கு விதிவிலக்கல்ல.

தேவனுடைய வல்லமை அவருடைய கிரியைகளில் வெளிப் படுத்தப்பட்டிருப்பதை நாம் காண முடியும்.

தேவன் சிருஷ்டிப்பின் தேவனா யிருக்கிறார். " *வானங்கள் தேவனு டைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது* " (சங்கீதம் 19:1). எபிரெய ஆசிரியர் காணப்படு கிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்று அறிவிக் கிறார். இதன் பொருள், இவ்வுலகம் ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக் கப்பட்டது அல்லது உண்டாக்கப்பட்டது என்பதாகும். இதை எந்த ஒரு மனித னாலும் செய்ய முடியாது. மனிதனால் சில அற்புதமான காரியங்களை உண்டாக்க முடியும். ஆனால், அவன் ஏதோ ஒன்றிலிருந்து தொடங்கி முற்றிலும் வேறுபட்ட ஒன்றுக்கு மாறி விடுகிறான். 2010. மே. 20 ம் தேதி ஓர் அறிவியல் பத்திரிக்கையில், உயிரியல் விஞ்ஞானி ஒருவர் சோதனைக்குழாயில் உயிரை அல்லது ஒரு ஜீவனை உண் டாக்கினதாகச் சொல்லிக் கொண்டார். ஆயினும் அதே கட்டுரையில், நான்கு பாட்டில்களில், இரசாயனப் பொருட் களால் செயற்கையாக அந்த உயிரை உருவாக்கினதாகச் சொல்லப்பட்டிருந் தது. "*உண்மையான படைப்பு அல்லது சிருஷ்டிப்பு என்பது ஒன்றுமில்லாமை யிலிருந்து ஏதோ ஒன்றை உருவாக்கு வதாகும்* ". ஆகையினால், விஞ்ஞானி யின் கூற்று சிருஷ்டிப்புக்குத் தகுதி பெறாது. நாங்கள் அதை உருவாக்கு கிறோம் இதை உருவாக்குகிறோம் என்று மனிதர்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், எந்த ஒரு மனிதனாலும் ஒன்றுமில்லாமையிலிருந்து எதையும் உருவாக்க முடியாது.

தேவனுடைய வல்லமையானது அவருடைய வார்த்தையில் வெளிப்படு கிறது. தேவன் தம்முடைய வார்த்தை யினாலே இவ்வுலகத்தை உண்டாக் கினார். "*தேவன் வெளிச்சம் உண்டாக கடவது என்றார், வெளிச்சம் உண்டாகக் யிற்று* " (ஆதியாகமம் 1:3). கிறிஸ்து இப் பூமியில் வாழ்ந்தபோது, அவர் பேசி னார், லாசரு மரித்தோரிலிருந்து உயி ரோடு எழுந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு தம்முடைய சீடர்களுடன் படகில் பயணித்தபோது பெருங்காற்று எழும் பியது. சீடர்கள் தாங்கள் மரிக்கப் போவ தாக எண்ணினார்கள். அப்போது இயேசு கடலையும், காற்றையும் பார்த்து அதட்டி னபோது, அவருடைய சத்தத்திற்கு அவைகள் கீழ்ப்படிந்தன. "*அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும்*

*இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"* (ஏசாயா 55:11). உண்மையாகவே, எந்தவொரு மனிதனுக்கும் இப்படிப்பட்டதொரு வல்லமை இல்லவே இல்லை.

மாறாக, தேவனால் எல்லாவற்றையும் செய்யமுடியும். ஆனால், மனிதனாலும் சில காரியங்களைச் செய்ய முடியும். என்றாலும் கூட, தேவன் முதலில் ஏதோ ஒன்றைத் தந்திருப்பதிலிருந்து தான் நம்மால் எதையாவது செய்யமுடியும் என்பது உண்மையாயிருக்கிறது. ஒன்றுமில்லாமையிலிருந்து மனிதனால் ஒரு போதும் ஒன்றையும் உருவாக்க முடியாது. எபேசியர் 3:5-ல் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது என்று சொல்லியிருந்தாலும் கூட தேவன் அதை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால் தான் நம்மால் அதை அறிந்து கொள்ள முடிகிறது என்று பவுல் உறுதிப்படுத்துகிறார். எபேசியர் 6:11-ல் நாம் சாத்தானை மேற்கொள்ள முடியும் என்றும் சொல்லுகிறார். இன்னும் அவர், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் (6:13) என்றும் சொல்லுகிறார். நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டால் தான் பிசாசுக்கு எதிர்த்து நிற்க முடியும். எபேசியர் 6:16-ல் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத் தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாகவும் நில்லுங்கள் என்று நாம் வலியுறுத்தப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு காரியத்திலும் நம்மால் ஒன்றைச் செய்ய முடிகிறதென்றால் தேவன் நமக்கு வல்லமையைத் தருகிறபடியால் தான் அதை நம்மால் செய்ய முடிகிறது.

மேற்சொல்லப்பட்டவைகளின் உட்பொருள் என்ன? ஆவிக்குரிய பிரகாரமாக நம்மால் எதையும் தனியாகச் செய்யவே முடியாது. தேவனால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவருடைய உதவியால்தான் நம்மால் எல்லாவற்றையும் செய்ய முடிகிறது. அவரில்லாமல் நம்மால் ஒன்றையும் செய்ய முடியாது. நாம் தனியாக வாழ்க்கையைக் கழிக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுக்கு அளவற்ற வல்லமை இருக்கிறபடியால் நாம் அவரை விசுவாசிக்க வேண்டுமென்று நம்மிடம் அவர் எதிர்பார்க்கிறார். அவரால் நம்முடைய பாவமான இருதயத்தை நீக்கிப் போட்டு தேவசாயலில் அதாவது, அவருடைய சாயலில் உருவாக்க முடியும். நாம் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அதை நம்மைக் கொண்டு அவரால் செய்ய வைக்க முடியும். அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல், " *என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு* " என்று சொல்லுகிறார் (பிலிப்பியர் 4:13). சிலர் இந்த வசனத்தை தவறாகப் புரிந்து கொண்டு, நாம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் உள்ளவர்களாயிருக்கும் வரைதான் நம்மால் விரும்புகிறதைச் செய்ய முடியும் என்று தவறாகத் திரித்துப் பேசுகிறார்கள். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல்

ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் அப்படிப் போதிக்கவில்லை. இருந்த போதிலும், நம்மால் சோதனைகளைத் தாங்குவதற்கும், எதிர்த்து நிற்பதற்கும், அவைகளை மேற்கொள்வதற்கும் சர்வ வல்லவராகிய கிறிஸ்து நமக்குப் பெலனைத் தருகிறார் என்று தான் பவுல் போதிக்கிறார். அவரைக் கொண்டு நம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியும், அவரில்லாமல் எதையும் செய்ய முடியாது. தேவன் வல்லவராயி ருக்கிறார், அவர் நம்மை வலிமை மிக்கவர்களாக மாற்றுகிறார். †

**தேவன் வல்லவராயிருக்கிறார், அவருடைய உதவியால் நாமும் வலிமை மிக்கவர்களாகிறோம். அவரில்லாமல், எதையும் நம்மால் செய்யமுடியாது.**

# தேவனின் திருவுளம்.....

எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள். உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால், அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்தரியா மலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக் காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சை களினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனு டைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென் (ரோமர் 1:20-25)

**மொழியாக்க ஆசிரியர் உரை**

# வேதத்தின் மகத்துவம்

## Greatness of The Bible

***Benny Martin***

உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகம் நம்முடைய பரிசுத்த வேதாகமம் தான். அநேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும் நம் பரிசுத்த வேதாகமம் தான். அப்படியிருந்தும் அநேகர் இன்றைய நாட்களில் வேத வசனங்களை வாசிப்பதில் அதிகமாக அக்கறை செலுத்துவதில்லை. அப்படியே வாசித்தாலும் மேலெழுந்த வாரியாக வாசித்து விடுகின்றனர். ஆனால், அதைத் தியானிப்பதில்லை. அதில் புதைந்து கிடக்கின்ற பொக்கிஷங்களைத் தோண்டி எடுப்பதில்லை. சங்கீதக்காரன் சொல்லும் போது " *கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்*" என்று சொல்கிறார் (சங்கீதம் 1:2). அநேகர் வேதத்தைத் தியானித்து படிக்காமலிருப்பதற்குக் காரணம் வேதத்தை நம்பாமலிருப்பது தான். சரி. வேதாகமத்தை நாம் ஏன் நம்புகிறோம்? ஏனென்றால், வேதாகமத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள ஒற்றுமை நம்மை நம்பத் தூண்டுகிறது. வேதாகமம் ஓர் அறிவியல் புத்தகம் அல்ல. ஆனால், அது ஒரு விஞ்ஞானப் பூர்வமான தகவல்களைத் தெரிவிக்கும் போது மிகத்துல்லியமாக இருக்கிறது. இது ஒரு புவியியல் புத்தகமும் அல்ல. ஆனால், பூகோளத்தைப் பற்றி மிகத் துல்லியமாக தகவல்களைத் தருகிறது. வேதாகமம் ஒரு வரலாற்றுத் தகவல்களைத் தெரிவிக்கும் போது எப்போதும் அது சரியாக இருக்கிறது.

### I. இரத்தம்

அப்போஸ்தலனாகிய பவுல் மார்ஸ் மேடை பிரசங்கத்தின் போது, தேவனுடைய மகத்துவத்தையும், வல்லமையையும் விவரித்தார். அப்போது அவர் சொல்லும் போது "*மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்*" என்று பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு சொன்னார். இதில் அடங்கியிருக்கிற உண்மையென்னவென்றால் தேவன் மனித இனத்தை ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணியிருக்கிறார் அல்லது படைத்திருக்கிறார். நமக்கு குரங்குகள் உட்பட மற்ற மிருகங்களைக் காட்டிலும் வித்தியாசமான இரத்தம் இருக்கிறது. நம்முடைய இரத்தம் மிருகங்களின் இரத்தத்தைப் போல் இல்லாதபடியால் நாம் மிருகங்களிடமிருந்து வரவில்லை. எனவே, பரிணாமக் கொள்கைக்காரர்கள் நம்புவதும், சொல்வதும் தவறாகும்.

நம்முடைய இரத்தம் மிருகங்களின் இரத்தத்திலிருந்து வேறுபடுவது மாத்திரமல்ல, நமக்கு வித்தியாசமான மாம்சமும் இருக்கிறது. " *எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல; மனுஷனுடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே* ", (1 கொரிந்தியர் 15:39). எனவே, நாம் மிருகங்களிடமிருந்து தோன்ற வில்லை. ஆனால், நாமும், மிருகங்களும் ஜீவனுள்ள தேவனால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம் (ஆதியாகமம் 1:24-27). நவீன தொழில்நுட்பத்தால் இரத்தத்தைப் பற்றி அதிகமாக விஞ்ஞானிகள் கற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆனால், மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே சிருஷ்டித் திருக்கிறார் என்பதை அவர்கள் தொடர்ந்து உறுதி செய்கிறார்கள். இது வேதாகமத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்கத் தூண்டுகிறது. சரி, மனித இனத்தைத் தேவன் ஒரே இரத்தத்தினால் சிருஷ்டித்தார் என்பது பவுலுக்கு எப்படித் தெரியும்? இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். பவுல் ஒரு மருத்துவரோ அல்லது விஞ்ஞானியோ அல்ல. ஆனால், அவர் ஒரு கூடாரம் கட்டுகிறவர். இந்த உண்மையை உதிர்க்க மனித ஞானத்தை விட மேலான ஞானம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். இது அவர் 1 கொரிந்தியர் 2:13ல் " *அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக் கிறோம்* ", என்று சொல்லியிருப்பதன் மூலம் நம்பகத் தன்மையை அதிகரிக்கிறது.

## II கிருமிகள்

லேவியராகமம் 13,14 அதிகாரங்களில் ஆசாரியனால் எப்படி குஷ்டரோகம் கண்டுபிடிக்கப்படுகிறது, குஷ்டரோகம் வந்தால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றிய விளக்கங்களை மோசே கொடுத்திருக்கிறார். குஷ்டரோகம் பிடித்தவன் தனியே குடியிருக்க வேண்டும் என்று மோசேயால் சொல்லப்பட்டிருக் கிறது. இன்றும் கூட வியாதியுள்ளவர்கள் மற்றவர்களிடம் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் வியாதி பிடித்துவிடும் என்பதற்காக மருத்துவமனைகளில் தனியாக வைக்கப்படுகிறார்கள். சிலவகையான தொற்று நோய் பிடித்தவர்களை இப்படித் தனியாக வைக்கிறார்கள். ஏனென்றால், கிருமிகள் மூலமாக தொற்றுநோய் பரவுகிறது என்பதை நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக நாம் கற்றுக் கொண்டி ருக்கிறோம். ஆனால், பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதியுள்ள காரியங்கள் நவீன விஞ்ஞானத்தோடு ஒத்துப்போகிறது, ஒன்றுபட்டிருக்கிறது.

## III பூமியின் அமைப்பு

"*அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப் போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்* " (ஏசாயா 40:22) கிறிஸ்துவுக்கு முன் சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்பு

ஏசாயா பூமி உருண்டை என்று எழுதினார். ஆனால், சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மக்கள் வரை பூமி தட்டை என்று நினைத்தார்கள். மேலும், வேதாகமம் பூமியின் நான்கு மூலைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது இது பூமியின் நான்கு திசைகளைக் குறிக்கிறது. பூமி உருண்டை என்று பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஏசாயாவுக்கு எப்படித் தெரியும்? தேவனுடைய வெளிப்படுத்துதலினால் தான் ஏசாயாவால் அவருடைய நாட்களில் இப்படி எழுத முடிந்தது. இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மை வேதாகமத்தின் மீது நம்முடைய நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது. தேவன் மீது விசுவாசத்தையும் அதிகரிக்கிறது.

## IV பூமி அந்தரத்திலே தொங்குகிறது

"*அவர் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்*" (யோபு. 26:7). சமீப காலங்களில் தான் நாம் புவிஈர்ப்பு சக்தியைப் பற்றி தெரிந்துகொண்டோம். விண்வெளியில் புவிஈர்ப்பு சக்தி கிடையாது. முற்காலங்களில் சிலர், கிரேக்க கடவுளான அட்லஸின் தோள்களில் பூமி இருந்தது என்று நம்பினார்கள். சில இடங்களில் இன்னும் பூமியானது ஒரு இராட்சத கடல் ஆமையின் மேல் இருக்கிறது என்ற மூட நம்பிக்கை நிலவுகிறது. ஆனால், இப்போது புவிஈர்ப்பு விதி ஈடுபடுத்தப்படுகிறது. பூமி அந்தரத்திலே தொங்கு கிறது என்பதை நாம் அறிவோம். ஆனால், யோபுவுக்கு இது எப்படித் தெரியும்? அநேகமாக யோபு புத்தகம் தான் வேதாகமத்தின் பழைய புத்தகமாக இருக்க வேண்டும். அப்படியென்றால் யோபுவுக்கு எப்படித் தெரியும்? தேவன் யோபுவுக்கு வெளிப்படுத்தினார். யோபு அதையே எழுதினார். இந்த விஞ்ஞானப் பூர்வமான உண்மை வேதாகமத்தின் மீது நம்முடைய நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது.

## V கடல்வழிப் பாதைகள்

கடல்வழிப்பாதையைக் கண்டுபிடித்த "*மேத்யு பான்டேய்ன் முரே*" என்பவர் ஒரு முறை தன்னுடைய மகன் சங்கீதம் எட்டாம் அதிகாரத்தை வாசிப்பதை கவனித்துக் கொண்டிருந்தார். குறிப்பாக எட்டாம் அதிகாரத்தின் எட்டாம் வசனத்தை கூர்ந்து கவனித்தார். அந்த வசனம் இப்படியாகச் சொல்கிறது. "*தேவன் ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக் கிறவைகளையும் மனிதனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்*". தேவன் கடலுக்குள் பாதை இருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக பாதை இருக்கும். அதை நான் கண்டுபிடிப்பேன் என்று சொல்லி கடல் வழிப்பாதையை "மேத்யு பான்டேய்ன் முரே" கண்டுபிடித்து மாலுமிகளிடம் படத்தை வரைந்து கொடுத்தார். அதைத்தான் இன்றைய நாட்களில் கடல் வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுத்து கிறார்கள்.

கடல்களில் பாதைகள் இருப்பது தாவீதுக்கு எப்படித் தெரியும்? அவர் மாலுமி அல்ல, அவர் ஒரு மேய்ப்பன். ஆயினும், அவர் கொடுத்த விஞ்ஞானப் பூர்வமான உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு மனிதனுக்குப் பல நூற்றாண்டுகள் பிடித்தது. தாவீது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார். ✝

# நன்றி கொடுத்தல்

## THANKS GIVING

**P.C. Philemon Rajah**

**பி**ரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும், ராஜா இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என்னுடைய வாழ்த்துதலும் ஜெபங்களும். தேவன் இதுவரை நம்மை ஆச்சரியமாக வழி நடத்தி வந்ததை நினைத்துப் பார்த்து, அவருக்கு நன்றி கொடுக்க நாம் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால், நன்றியை எவ்வாறு கொடுக்கலாம் என்பதைக் குறித்து தியானிப்பது நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று நான் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

தேவன் செய்தவைகளை நினைத்துப் பார்க்கையில் நம்மில் சிலருக்கு கண்ணீர் வெள்ளமாகப் பெருக்கெடுக்கும், உதடுகள் நன்றி நன்றி என துதிக்கும். இன்னும் சிலருக்கு வார்த்தைகள் தடுமாறும். எப்படியெல்லாம் நமது நன்றியுணர்வை வெளிப்படுத்தலாம் என்பதைக் குறித்து தியானம் செய்ய, நமது வேதாகமத்தோடு, நமது இருதயத்தையும் திறந்து படிப்போம்.

**1. நன்றி கொடுத்தல் நம் வாழ்வில் ஒவ்வொரு செயலிலும் இருக்க வேண்டும்:**

சங் 103:1-2, *"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!"* நமது செயல்கள் ஒவ்வொன்றும், தேவன் நமக்குச் செய்த நன்மைக்கும் கிருபைக்கும் ஏற்ற நன்றியுணர்வினை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

**2. நாம் முன்பு, கிறிஸ்து இல்லாமல் எந்நிலையில் இருந்தோம் என்ற உணர்வானது, நமது நன்றியுணர்வைத் தூண்ட வேண்டும்.**

எபே 2:2,3,12 *"அவைகளில் நீங்கள் முற்காலத்தில் இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்தில் நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத் தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக் கினையின் பிள்ளைகளாயிருந்தோம்."*

*"அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்.* பிரியமானவர்களே! "தேவனற்ற கடந்த கால பரிதாபகரமான நம்முடைய நிலையானது நமது நன்றியுணர்வைத் தூண்ட வேண்டும் பாவத்தினால் நரகத்திற்கு ஏதுவான நிலையில், நாம் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தோம் என்பதையும், கர்த்தர் நம்மைக் கைவிடாமல் இரட்சித்ததையும்

நாம் உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த உணர்வானது நமது நன்றியுணர்வை செயல்படுத்தக் காரணியாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தனது நன்றியுணர்வு மிக்க செயல்களுக்கு இப்படிப்பட்ட அடிப்படையான காரணத்தைக் கொண்டிருந்ததாகக் கூறுகிறார் (1 தீமோ 1:12-17).

**3. நேர்மையான நன்றியுணர்வு, நம்மை உலக கவலைகளில் இருந்து விடுதலை செய்யும்.**

2 கொரி 9:15 "*தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.*" தேவன் மீது நன்றியுணர்வு உள்ளவர்களாக இருப்பது உண்மையானால், அது நிச்சயம் நம்மை உலகக் கவலைகளிலிருந்து விடுவிக்கும். தாவீதும் கூட, தனக்கு தேவன் மேலிருந்த நன்றியுணர்வினிமித்தம் உலகக் கவலையிலிருந்து விடுதலையானவராக, "*கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்*" (சங் 138:8) என்று கூறுகிறார்.

வேதாகமம் தேவனிடத்தில் படக பாதமில்லை என்ற உண்மையை நாம் அறியும்போது, நமது நன்றியுணர்வு, உலகக் கவலையை நம்மை விட்டு விடுவிக்கும் (2 கொரி. 8:9.1 தீமோ. 6:17-19). யாக்கோபும் இவ்வாறு கூறுகிறார், "*நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.*" (யாக். 1:17)

**4. நன்றியுணர்வு என்பது, மிதமிஞ்சிய செயலால் செய்துகாட்டப்படுகிறது.**

யோவான் 12:3-5, "*அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து; இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்.*"

தேவன் மீதுள்ள நன்றியுணர்வை வெளிப்படுத்த, எந்த ஒரு அளவு கோலும் நமக்குத் தேவைப்படாது. தேவனது கிருபை என்பது நம்மேல் அளவற்றதாக இருப்பதைப் போலவே, நமது நன்றியுணர்வு என்பதும் குறைவானதாக இல்லாமல் மிதமிஞ்சினதாக இருக்க வேண்டும். சிலருக்கு இந்த செயல்பாடுகள் மிகவும் ஊதாரித்தனமாகத் தோன்றலாம். இயேசுவின் பாதத்தில், நன்றி பெருக்கினால் பாவியாகிய அந்தப் பெண் பரிமள தைலத்தினை ஊற்றிக் கழுவின போது, யூதாஸ் அதனை ஆடம்பரமாகவும், ஊதாரித்தனமாகவும் நினைத்தார். ஆயினும் ஆண்டவர் அந்த பெண்ணின் நன்றியுணர்வு மிக்க அந்த செயலை ஏற்று, அப்பெண்ணை பாராட்டினார். (மாற் 14: 1-11, யோவா 12: 1-10).

இறுதியாக, பிரியமானவர்களே! உங்கள் நன்றியுணர்வை, எவ்வாறு நன்றி கொடுத்தலாக்குவது என முடிவெடுங்கள். அதற்காக ஜெபியுங்கள்! உடனே தாமதமின்றி அதனை செயல்படுத்துங்கள். தேவன் தாமே உங்களது நன்றி கொடுத்தலை ஏற்று, நன்மையால் உங்களுக்கு முடிசூட்டுவாராக! ✝

# விசுவாசத்தின் இரகசியம்

## MYSTERY OF THE FAITH

***B. Arjunan***

எத்தனையோ இரகசியமான காரியங்களைக் குறித்துப் பேசுகிறோம் அல்லது கேள்விப்படுகிறோம். விசுவாசத்திலும் ஒரு இரகசியம் இருக்கிறது. அது எப்படிப்பட்டது? அதன் தன்மை என்னவென்று நாம் இன்றைய நாளிலே தியானிக்கலாம். " *விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்* " என பவுல் தீமோத்தேயுவுக்கு எழுது கிறார் (1 தீமோத்தேயு 3:9). காணாததை நம்புவதே விசுவாசமாகும். காணாததை நாம் நம்புகிறோம் அல்லவா அந்தக் காணாததற்கும், நம்பிக்கைக்கும் இடைப்பட்ட ஒரு இரகசியம் இருக்கிறது அதுவே அந்த விசுவாசத்தின் இரகசியம். விசுவாசத்தை ஒருவரும் காண்பிக்க முடியாது. அதைப்போல் இரகசியத்தை சொல்லமுடியும் ஆனால் காண்பிக்க முடியாது. பவுல் சபையைக்குறித்து பேசும் போது; " *இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன்* " என்கிறார் (எபே. 5:32). அது இரகசியமான ஒன்று. அப்படியானால் அதற்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இரகசியமான ஒரு காரியத்தைப்பேசும்போது மிகவும் உன்னிப்பாக காது கொடுத்துக் கேட்கிறோம். சபையும் அவ்வளவு முக்கியமானது. சிலர் சபை ஒன்றும் முக்கியமில்லை என்று சொல்லுகிறார்கள், ஒரு வாகனத்திற்கு பெயர்பலகை முக்கிய மில்லை என்று சொல்வதைப்போல் இருக்கிறது. அது என்ன வாகனம் என்பதைக் கண்டுகொள்ள பெயர் பலகை முக்கியம். சபை என்றால் அது யாருடைய சபை? அந்த சபைக்கும் கிறிஸ்துவுக்கும் என்ன சம்பந்தம்? போன்ற கேள்விகள் எழும்பு கிறது. கர்த்தர் தம்முடைய இரத்தத்தை சிந்தி சபையை சம்பாதித்திருக் கிறார். அப்படி சம்பாதிக்கப்பட்ட சபை அவரையும் அவருடைய உபதேசத்தையும் அறிவிக்க வேண்டியதாக இருக்கிறது. இது மிவும் முக்கியமான ஒன்று, ஆகையால் இந்த இரகசியம் பெரியது என்கிறார். அதைப்போல விசுவாசத்தின் இரகசியமும் மிகவும் முக்கியமானதாயிருக்கிது. ஏனெனில், " *விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்* " என காண்கிறோம் (எபி. 11:6). ஒருவர் எப்படி வேண்டு மானாலும் தேவனுக்குப் பிரியமாக வாழலாம் என நினைக்கின்றனர். அது தவறு. தேவனை நம்புகிறவர்கள் முதலாவது அவரை விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசமானது முழுநம்பிக்கையுள்ளதாகவும், அவராலே எல்லாம் கூடும், அவர் என்னுடைய எல்லாக் காரியங்களையும் பொறுப்பேற்று நடத்துவார், நான் எதைக் குறித்தும் கவலைப்படேன் என்ற ஆழமான விசுவாசத்தை கர்த்தர் மீது வைத்தவர் களாயிருக்கும்போது முழு நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம்.

இந்த விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனசாட்சியிலே வைக்க வேண்டும். மனது சுத்தமாக இருந்தால் எல்லாம் சுத்தமாக இருக்கும். மனது சரி யில்லையென்றால் எல்லாமே சரியில்லாமல் போய்விடும். ஆக, சுத்த மனசாட்சி யுடையவர்களாயிருக்க தூய்மையான ஆண்டவருடைய வசனங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது; அவ்விதமான மனசாட்சியுடையவர்களாயிருப்போம். "*முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும். இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்* " என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (ரோமர் 6:17). ரோம கிறிஸ்தவர்கள் முன்னே பாவத்திற்கு அடிமைகளாயிருந்தார்கள். அதைப் போல நாம் ஒவ்வொருவரும் முன்னே பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம். ஆனால், இப்பொழுதோ, கர்த்தருடைய உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்த வர்களாயிருக்கிறோம். நம்முடைய மனசாட்சிக்குத் தெரியும் நாம் எதற்குக் கீழ்ப்படிந்து வாழுகிறோம் என்று. அந்த சுத்த மனசாட்சியை உடையவர் களாக எப்பொழுதும் இருக்கவேண்டுமென வேதம் எதிர்பார்க்கிறது. " *இந்த நல்மனச் சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப் படுத்தினார்கள். இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்* " என்கிறார். பவுல் (1 தீமோ. 1:19,20). ஒவ்வொருவருக்கும் தெரியும் கிறிஸ்தவத் தைப் பற்றி இதில் எந்த ஒரு நபரும் நஷ்டப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்று. அவ்வளவு ஆசீர்வாதத்தைக் கொடுக்கக்கூடியதாக கர்த்தருடைய உபதேசங்கள் இருக்கிறது. அதை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகிற அளவுக்கு அவைகள் ஆசீர்வாதம் மிகுந்தவையாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய மனச்சாட்சியும் அதற்குச் சாட்சியாக இருக்கிறது. பவுலுடைய நாட்களில் இப்படிப்பட்ட நல்மானச்சாட்சியை தள்ளிவிட்ட சிலரைப்பற்றி இவ்வசனத்தில் குறிப்பிடுகிறார். இன்றைக்கும் அதேப்போல மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவும், அநேகரை விசுவாசத்தினின்று திருப்பவும்,விசுவாசமான சபைகளைப் பிரிக்கவும், அதைச் சேதப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட வர்களை ஒருவகையில் சாத்தான் எடுத்துப் பயன்படுத்துகிறான். இவர்கள் தாங்கள் கெட்டதுமல்லாமல் மற்றவர்களையும் திசை திருப்பப்பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட வர்களை நல்வழிபடுத்துவது கூடாத காரியம். ஆகையால், இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். நாமும் மனசாட்சிக்கு விரோதமாக நடக்கிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளவேண்டும். இரகசியத்தை இரகசியமான இடத்தில் வைப்பார்கள். அதேப் போல விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனச்சாட்சி என்ற லாக்கரில் வைத்துக் காக்கவேண்டும். பவுல் சொல்லுகிறார்; " *நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்* " (2 தீமோத்தேயு 4:7). பவுலுக்கு வாழ்க்கையே போராட்டம் தான். அவரைப்போல கஷ்டங்களை மற்ற சீஷர்கள் அனுபவித்திருக்க வாய்ப்பில்லை என்றே எண்ணுகிறேன். அந்த அளவு கர்த்தர் நிமித்தம் போராட்டத்தைச் சந்தித்தார். அதை ஒரு நல்ல

போராட்டமாக எடுத்துக்கொண்டார். ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவன் என்று ஆண்டவர் சொன்ன வசனத்தின்படி தன்னுடைய பாடுகளோடு சுவிசேஷத்தை அறிவித்தவர். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் கர்த்தரே. அவர் துவக்கிய அந்த ஓட்டத்தை முடித்தேன் என சொல்லுகிறார். அநேகர் துவங்கின ஓட்டத்தை முடிக்க முடியாது போய் விடுகிறார்கள். ஆதியிலே இருந்த அன்பு குறைந்துவிடுகிறது. பாதியிலே விசுவாசத்தை விட்டு இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் மறுதலித்துப் போய்விடுகிறார்கள். பவுல் தன்னுடைய துவக்க ஓட்டத்தை விடாது ஓடி அதை முடிக்கவும் செய்தார். அதுமாத்திரமல்ல தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். விசுவாசத்தைக் காத்துக் கொள்வதென்பது ஒரு சாதாரண விஷயமல்ல, குறித்து, விசுவாசத்தைக் வயதாகி கல்லறையை எதிர்நோக்கி இருப்பவர்களைக் கேட்டால் அதைப்பற்றி சொல்லுவார்கள். அவர்களுடைய ஜீவிய நாட்களிலே அவர்களுடைய விசுவாசத்தைச் சோதிக்கும்படியாக பல்வேறு சோதனைகளைப் பிசாசு அவர்களுடைய வாழ்க்கையில் கொண்டு வந்திருப்பான். அவைகளுக்கெல்லாம் அவர்கள் எதிர்த்து நின்று எப்படிப் போராடியிருப்பார்கள். அப்படிப் போராடி இறுதிவரை நிலைத்திருக்கும்போதே அந்த விசுவாசம் காக்கப்படும். பவுலுடைய இறுதி நாட்களில் அவருடைய முடிவு வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. ஆனால், அவர் ரோமாபுரியில் சிரச்சேதம் செய்யப்பட்டதாக சரித்திரம் சொல்லுகிறது. அதுவரை தன்னுடைய விசுவாசத்தை சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொண்டார். அன்பானவர்களே, விசுவாசத்திற்கு அநேக போராட்டம் உண்டு. ஆகையால், அந்த விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்வோம்.

மேலும், "*நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்*." என்கிறார் பவுல். (2 தீமோத்தேயு 1:13,14). விசுவாசம் என்பது கிறிஸ்தவர்களின் ஆரம்பம் அல்லது அவர்களது ஆணிவேர் என்றே சொல்லவேண்டும். இந்த விசுவாசத்தோடு அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்ட அந்த விலைமதிக்க முடியாத நற்பொருளைப் பாதுகாத்துக்கொள்ள சுத்த மனச்சாட்சியை தேவன் ஏற்படுத்துகிறார். அத்துடன் அதைப் பாதுகாக்க பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார். இந்த பரிசுத்த ஆவியானவர் பாவத்தைச் சுட்டிக்காட்டக் கூடியவர். கர்த்தருடைய வசனங்கள் அவருடைய பரிசுத்தவான்களைச் சரி செய்கிறது. அதில் பரிசுத்த ஆவியானவரின் பணி அதிகமாக இருக்கிறது. அவருடைய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. இதை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை மாற்றியமைத்துக் கொள்ளுகிறார்கள். பாவத்தைத் தள்ளி ஜீவனுள்ள வார்த்தைக்குச் செவி கொடுக்கிறார்கள். பாவத்தைத் தண்ணீரைப்போல பருகுகிறவர்கள் பரிசுத்த ஆவிக்கு

எப்போதும் எதிர்த்து நிற்கிறவர்களாகவும், வசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் இருந்து கொண்டு மென்மேலும் கேடுண்டாக்குவார்கள்.

அன்பானவர்களே, உங்களுடைய விசுவாசத்தின் இரகசியத்தை உங்களுடைய சுத்த மனச்சாட்சியினாலே காத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய விசுவாசம் பறிபோகுமானால் உங்களுடைய ஆத்துமா நித்தியத்தை இழந்துவிடும். உங்களுடைய விசுவாசம் விலையேறப்பெற்றது. அந்த இரகசியத்தை விசுவாசமுள்ளவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். அப்படிப்பட்ட விசுவாசத்தை பெற்றுக் கொள்ள ஆசையாயிருக்கிறவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களைப் போல அவர்களும் விசுவாசத்திற்குள்ளாக வருவதற்கு அது பயனுள்ளதாயிருக்கும். எபிரெய ஆசான் விசுவாச வீரர்களின் பட்டியலை எழுதுவதின் நோக்கம்; நாமும் அவ்விதமாக விசுவாச வீரர்களாக மாறவேண்டும், பெற்றுக்கொண்ட விசுவாசத்தைக் கடைசிவரை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே அதை எழுதியிருக்கிறார். அதற்குப் பரிசுத்த ஆவியானவரும் உதவியாயிருந்திருக்கிறார். ஆகையினாலே உங்களுடைய விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலே காத்துக்கொள்ளுங்கள். ✝

## கேள்வி நேரம்

**விசுவாசமார்க்கத்தார்கள் இருக்கிறார்களா?**

**விசுவாசம் இருக்கும்போது விசுவாசமார்க்கத்தார்களும் இருப்பார்கள். ஏனெனில், விசுவாசத்தைத் துவக்குகிற இயேசு இன்றும் ஜீவிக்கிறார். அவருடைய மார்க்கம் விசுவாச மார்க்கம். அதை ஒவ்வொருவரும் கண்டுகொள்ள வேண்டுமென்பதற்காகவே, விசுவாசமுள்ள ஆபிரகாமுடைய சந்ததியில் பிறந்தார். "*அந்தப்படி விசுவாச மார்க்கத்தார்கள் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்*" (கலா. 3:9). உண்மையிலே நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆபிரகாம் விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆனால், நீங்களும் நானும் அந்த விசுவாசத்தின் மார்க்கத்தில் இருந்தால் விசுவாசமுள்ள அந்த ஆபிரகாமோடு சேர்ந்து ஆசீர்வதிக்கப்படுகிறோம். உனக்குள்ளே சகல சந்ததிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று அவனைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். நீங்கள் இந்த ஆசீர்வாதத்திற்குப் பாத்திரவான்களா?**

# " கிறிஸ்தவன் " என்று மட்டும் கூறிக் கொள்வதில் என்ன சங்கடம்?

## *WHY NOT PROFESS AS CHRISTIANS?*

*E.Z. Selvanayagam*

பலவிதக் கொள்கைகளும், சித்தாந்தங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொள்கிற இந்த நாட்களில், எவ்விதமான அடைமொழிகளையும் சேர்த்துக் கொள்ளாமல் வேதம் கூறுகிறபடி, "கிறிஸ்தவன்" என்று மட்டும் கூறிக்கொள்வது நியாயமான காரியம். ஆனால், அதை ஏற்றுக்கொள்வதற்கு நாம் ஏனோ தயங்கு கிறோம்.

நமக்கு இருக்கிற இந்தக் குறுகிய வாழ்நாளில் "*நாளொரு கொள்கையும், பொழுதொரு சபையுமாக உதயமாகிக் கொண்டிருக்கிற அனைத்து சபைகளின் உபதேசங்களையும், கோட்பாடுகளையும் சோதித்துப் பார்ப்பதென்பது ஆகிற காரியமா?* " இப்படிப்பட்டவர்கள் தாங்கள் சந்திக்கிற ஏதாவது ஒரு குழுவினரின் தொழுகை முறை மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டுவிட்டார்களானால், அதிலேயே மூழ்கி அதுவே தேவன் தனக்குக் காட்டின சபை என்று கண்மூடித் தனமாக நம்பிக்கொண்டு வேறெதையும் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறார்கள். அவர்களுடைய உபதேசங்கள் வேதாகமத்தின் வெளிச்சத்தில் பார்த்து, தவறு என்று சுட்டிக் காட்ட முற்பட்டால் கூட அதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குத் தங்கள் மனதைக் கல்லாக்கிக் கொள்வார்கள். இதுதான் இன்றைக்கு மக்கள் மத்தியில் காணப்படும் பக்தி நிலை. இந்த மனப்பான்மையானது உண்மையை அறிந்துகொள்வதற்கு உதவாது. கிளி ஜோஸ்ய முறையில் மெய்யான மார்க்கத்தைக் கண்டுகொள்ள முடியாது. வேதாகமம் கூறுகிறவைகளைப் படித்துப் புரிந்து கொண்டால் தான் சத்திய மார்க்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

இப்படி நாம் யோசித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று நமக்கு இன்னொரு சந்தேகம் எழும்புகிறது. தேவனுடைய வசனத்தின் மூலமாக நான் இயேசுவினிடத்தில் வந்து உண்மை வழியைக் கற்றுக்கொள்ள முடியுமா? எல்லாக் கூட்டத்தாருமே வேதத்தின் வெளிச்சத்தில் நடப்பதாகத் தானே கூறிக்கொள் கிறார்கள்? ஆனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய் கிறார்களே! எவ்வளவோ கற்றறிந்த மேதைகள் எல்லாம் புரிந்து கொள்ள முடியாத தேவ இரகசியங்களைப் பேதையாகிய நான் புரிந்து கொள்ள முடியுமா? நான் செல்லுகிற பாதைதான் சரி என்று நான் எதை வைத்து உறுதி செய்வது?

நண்பர்களே, நாம் நினைத்துப் பயப்படுகிற அளவுக்கு விஷயம் அவ்வளவு கடினமானதல்ல. ஒன்றை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் காரியம் கல்வியறிவினால் தீர்மானம் செய்யப்படும் விஷயம் அல்ல. அதுபோல் மனித அறிவினாலும், திறமையினாலும் முடிவெடுக்கும் விஷயமும் அல்ல. கல்வியறிவும், திறமையும் அவசியம் தான். ஆனால், அதை வைத்துக் கொண்டு

ஆன்மீகக் காரியங்களில் ஒருவன் மற்றொரு மனிதனுக்கு உதவவே முடியாது என்று நான் வாதிடுவதாக நினைக்க வேண்டாம். ஒரு மனிதன் சக மனிதனுக்குச் செய்யக்கூடிய உண்மையான உதவி கர்த்தருடைய வசனத்துக்கு அவனை வழி நடத்தி, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவசித்தம் என்ன என்பதைக் கற்றுக் கொடுப்ப தாகும்.

ஒவ்வொரு மனிதனும் தாங்களாகவே வேதாகமத்தை வாசிக்க முற்பட்டால் ஆளுக்கொரு விதமான அபிப்பிராயம் தோன்றி, மேலும் பிரிவினைகளும், குழப்பங்களும் அதிகமாகும் என்று ஒரு சாரார் வாதிடக் கூடும். ஆனால், அது தேவையற்ற பயம். தேவனுடைய வார்த்தையை விட்டு விலகியும், கூட்டியும் குறைத்தும் மாந்த அறிவைப் பயன்படுத்தி தவறுதலாக வியாக்கியானம் செய்வதால் தான் பிரிவினை உண்டாகிறதேயொழிய தேவனுடைய வசனத்தை வாசித்து தியானிப்பதினால் அல்ல.

உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும், மார்க்கங்களிலும் சில உண்மைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், மெய் கிறிஸ்தவ மார்க்கமே அனைத்து உண்மைகளையும் உடையதாக இருக்கிறதென்பதை நாம் அச்சடித்துக் கூறுகிறோம். " *அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது* " என்கிறார் பவுல் (கொலோசெயர் 2:3) ஆகவே, ஒரு கிறிஸ்தவன் வேதாகமத்தை எடுத்து அனுதினமும் வாசித்து காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று ஆய்ந்து பார்க்கிற மனப்பக்குவம் அடைய வேண்டும். அப்பொழுது சத்தியம் அவனை விடுதலையாக்கும் (யோவான் 8:32).

## பிரச்சனையின் உண்மை நிலை

ஒருவன் மார்க்க சம்பந்தமான விஷயங்களில் தனக்கு இஷ்டமானதைத் தெரிந்து கொள்ளலாம். இது அவரவருடைய அபிப்பிராயத்துக்கு அடுத்த காரியம் என்ற நிலையிலிருந்தால் நாம் அதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டிய தில்லை. ஒருவன் தனக்கு விருப்பமான ஒரு கொள்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதை உண்மையாய் கடைப்பிடித்து வந்தால், அதனால் கிடைக்கும் நன்மைகள் போதுமென்று நினைக்கிறான். ஆனால், " *மனுஷனுக்குச் செம்மை யாய்த் தோன்றுகிற வழி உண்டு, அதன் முடிவோ மரண வழிகள்* " என்று ஞானி சாலமோனும் (நீதி. 14:12). " *கர்த்தாவே மனுஷனுடைய வழிகள் அவனாலே ஆகிறதல்லவென்று நான் அறிவேன்* " என்று தீர்க்கன் எரேமியாவும் (எரேமியா 10:23) சொல்லுகிறார்களே! அதை எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?

ஆகையால், நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று ஒரு மனிதனோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட மதச்சட்டங்களோ, சித்தாங்களோ (பார்வைக்கு அவைகள் எவ்வளவு நல்லவைகளாகவும், நடைமுறைக்கு பொருத்த மானவைகளாகவும் இருப்பினும் சரி) நியாயத்தீர்ப்பு நாளிலே செல்லுபடி ஆகாது. கிறிஸ்து சொன்ன வசனத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவான் 12:48). ஆகையால், கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்கிற எவனும், தனக்குப் பெரும் நஷ்டத்தையும், சொல்லி முடியாத இழப்பையும் அறுவடை செய்வது நிச்சயம்.

**நாம் எப்படி அடைமொழிகள் ஏதும் இல்லாத கிறிஸ்தவனாகலாம்?**

இதை வாசிக்கும் எவராவது கிறிஸ்தவர் ஆக விரும்பினால் தேவனுடைய பிள்ளையாக, கிறிஸ்துவின் தொண்டனாக ஆவதற்கு அப்போஸ்தலர் காலத்தில் ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளைச் செய்தல் அவசியம். அப்போஸ்தலர் 2 ம் அதிகாரம் 36-41 ஆகிய வசனங்களில் அதற்குரிய வழிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வாசித்து விசுவாசியுங்கள், கீழ்ப்படியுங்கள். *"பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது, உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்று புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்."*

இங்கே, சொல்லப்பட்டிருக்கிற வழிமுறைகள் சரியான வழி மட்டும் அல்ல எளிமையானவைகளும் கூட. இது கர்த்தருடைய வழி, இவருடைய சுலபமான மாதிரியைப் பின்பற்றுங்கள். அப்போஸ்தலர்களுடைய நேரடிப் பார்வையில், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக மக்கள் இவ்வாறாகத் தான் கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். அதேபோல் ஒரு மனிதன் இந்த விசுவாச உபதேச சட்டத்துக்குக் கீழ்ப்படியும்போது, *"கிறிஸ்தவன்"* என்றில்லாமல் வேறொன்றாகவோ அல்லது கிறிஸ்துவின் சபை, என்றில்லாமல் வேறொரு மனிதனால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றிலோ சிக்கிக்கொள்வது கிடையாது. அதன் பிறகு அவர் பரிபூரணத்தை நோக்கி நடைபோடலாம். திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலையும், சத்தான ஆகாரத்தையும் உண்டு கிறிஸ்துவுக்குள் வளருவான் (1 பேதுரு 2:1,3; 2 பேதுரு 3:18).

அப்போஸ்தலர் காலத்தில் கர்த்தர் எப்படி இரட்சிக்கப்பட்டவர்களை இந்த ஒரே சபைக்குள் சேர்த்துக் கொண்டாரோ அப்படியே இந்நாட்களிலும் செய்வார் (அப்போஸ்தலர் 2:47). மார்க்க சம்பந்தமான எல்லா விஷயங்களைக் குறித்தும் வேதம் தெளிவான முறையில் பேசுகிறது. ஆகவே, மனிதர்கள் அந்த உறுதியான அஸ்திபாரத்தின்மேல் நின்றுகொண்டு, தேவன் ஒருவருக்கு மட்டுமே கிறிஸ்துவுக்குள்ளாகக் காரியங்களைச் செய்கிறவர்களாகவும் மாந்த அறிவு, சடாங்காச்சாரம், பாரம்பரியம் ஆகியவைகளுக்கு செவிகொடுக்காமலும், கிறிஸ்துவின் மென்மையானதும், இலகுவானதுமான நுகத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டு நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கச் செய்வோமாக! இது ஒவ்வொரு மெய் கிறிஸ்துவனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற சிலாக்கியமும், அழைப்புமாகும். சிந்திப்பீர்! செயல்படுவீர்!! ✝

# கழுகைப் போல

# LIKE AN EAGLE

*Tom kelton*



இன்றைய நாட்களில் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கழுகுகளைப்பற்றி அதிகமாகப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் கழுகுகளை அழிவின் விளிம்பிலிருக்கும் பறவை இனமாகக் கண்டறிந்து அதைப் பாதுகாக்க விரும்புகிறார்கள். வேதாகமம் கழுகுகளைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதிலிருந்து கிறிஸ்தவர்கள் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

*"பாழான நிலத்திலும், ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அவர் அவனைக் கண்டு பிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்துகொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழி நடத்தினார், அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை "* (உபாகமம் 32:10 -12).

*" நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள் (யாத்திராகமம் 19:4). கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்பு வார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள் "* (ஏசாயா 40:31).

கழுகு இவ்வுலகில் மிகப்பெரிய பறவைகளுள் ஒன்றாகவும், சக்தி

வாய்ந்த பறவைகளுள் ஒன்றாகவும் திகழ்கிறது. சில கழுகுகள் ஆறு கிலோ எடையுள்ளதாகவும், அதின் சிறகுகள் ஏழு அடி நீளமுள்ளதாகக் கூட இருக்கும். கழுகு சிறு குச்சிகளாலும், பசுமையான இலைகளாலும் தன் கூட்டைக் கட்டு கிறது. வருடத்திற்கு ஒருமுறை பெண் கழுகு, ஒன்று அல்லது இரண்டு முட்டை களை இடுகிறது. பின்பு அம்முட்டைகள் பத்திரமாக பெண் கழுகினாலும், ஆண் கழுகினாலும் அதாவது பெற்றோர் களால் பாதுகாக்கப்படுகிறது. பெண் கழுகு முட்டைகளின் மீது அடைகாத்து, நாற்பது நாட் களில் குஞ்சு பொரிக்கிறது. பின்பு அக்குஞ்சுகளின் பெற்றோர்கள் அக்குஞ்சுளைக் கூட்டில் வைத்துப் பாதுகாத்து அவைகளுக்கு ஆகாரத் தைக் கொண்டு வந்து கொடுக்கின்றன.

அதன்பின், சுமார் பதினொன்று அல்லது பன்னிரெண்டு வாரங்களுக்குப் பிறகு, ஓர் ஆச்சரியமான காரியம் நடை பெறுகிறது. அந்தக் கழுகுக் குஞ்சுகள் தாங்களாகவே கூட்டை விட்டு வெளி யேறி, பறந்து இரை தேடவில்லை யென்றால், தாய்க் கழுகுகள் அக்கூட்டை விட்டு தன் குஞ்சுகளை வெளியேற்று கின்றன. அப்போது அக்குஞ்சுகள் பயத்தில் தடுமாறினாலும், சுதாரித்துத் தாழப் பறந்து அப்புது பழக்கத்திற்குள் தங்களைப் பரிச்சயப்படுத்திக் கொள் கின்றன. தாய்க் கழுகானது தன் குஞ்சு களின் மீது அசைவாடி, கண்காணித் துக் கொண்டே இருக்கும். கழுகின் சிறகு நீளமாயிருக்கிறபடியால் அது எவ்வளவு உயரமாகப் பறந்து கொண்டி ருந்தாலும் மிக வேகமாக தாழப்பறந்து வந்து தன் குஞ்சுகளை ஆபத்திலிருந்து காப்பாற்றி கூட்டிற்குள் மறுபடியும் கொண்டு வருகிறது.

நம் தேவன் சர்வ வல்லமை யுள்ளவர் ஏற்றகாலத்தில் நமக்கேற்ற வைகளைச் செய்ய வல்லவர். தாய் கழுகைப்போல், நம் தேவைகளைத் தேவன் அறிந்தவராயிருக்கிறார். நாமும் குஞ்சுகளைப் போல கூட்டுக் குள்ளே அடைந்து கிடக்க வேண்டு மென்று அவர் விரும்பாமல், நாமாகவே வெளியே சென்று நம் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அதே நேரத்தில் நமக்கு ஆபத்து என்று வரும்போது தம் செட்டைகளை விரித்து நம்மைப் பாது காத்து வழி நடத்துகிறார். நாம் நம் முடைய வாழ்க்கைப் பாதையில் நாமாகவே காரியங்களைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும் புகிறார். நாம் பயத்தை விட்டு விட்டு அவருக்காக காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நம் கண்களை அவருக்கு நேராக ஏறெடுத்து, அவரு டைய செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகக் கற்றுக் கொள்ள வேண்டும். ✝

### தேவனுடைய வார்த்தை....

உணர்வுகள் வரும் போகும்

உணர்வுகள் வஞ்சிப்பவைகள்

தேவனுடைய வார்த்தை தான்

என்றும் உத்திரவாதம்

வேறொன்றும் நம்பத் தகுந்தவை

களல்ல ஆத்துமாவும், சரீரமும்

பிரிக்கப்படும் வரை

தேவனுடைய மாறாத வார்த்தையில்

நான் நம்பிக்கை கொள்வேன்;

ஏனென்றால், எல்லாமே ஒழிந்து

போனாலும் அவருடைய வார்த்தை

என்றென்றும் நிலைத்து நிற்கும்.

# இயேசு தேவனாயிருக்கிறார்!

## JESUS IS GOD!

*Gary C. Hampton*

இன்று நாம் உலகத்தில் பார்க்கும்போது, ஒரு மனிதனுடைய மகன் அவருடைய வாரிசாக இருக்கிறார். இருந்தபோதிலும் கிறிஸ்து வேறொரு காரணத்திற்காக தேவனுடைய குமாரனாக அழைக்கப்பட்டார். நிச்சயமாகவே, அவர் பிறப்பாலே தேவனுடைய குமாரனாகத்தான் இருக்கிறார் (லூக்கா 1: 34, 30.) ஆனால், தேவனுடைய குமாரன் என்னும் தலைப்பு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட தற்கான காரணம் அவர் தேவனுடைய பண்புகள் உடையவராக இருந்ததால்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இயேசு தம் பிதாவை தேவன் என்று அழைத்தபோது, அவர் தம்மை தேவனுக்கு சமமாக்கிக் கொண்டதாக யூதர்கள் புரிந்துகொண்டார்கள் (யோவான் 5 :17, 24). அவர்கள் சரியாகத்தான் சொன்னார்கள்! இயேசு தேவனாகத்தான் இருக்கிறார்!

### இயேசு ஆதியில் இருந்தார்.

இயேசு மிகவும் நேசித்த அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவைப் பரத்திலிருந்து இறங்கிவந்த தேவன் என்று சொல்லுகிறார். "*ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை* " (யோவான் 1:1,3) . இங்கே, யோவான் சுருக்கமாக ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்று சொல்லுகிறார்.

இங்கே சகலமும் இயேசு மூலமாய் உண்டாயிற்று என்பது இயேசு தேவன் என்பதற்குச் சான்றாக உள்ளது. " *ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்* " (ஆதி. 1:1; கொலொசெயர் 1:16,17 வசனங்களை ஒப்பிடுக). தேவனாயிருந்த இந்த வார்த்தையை யோவான் இயேசு என்று வெளிப்படையாகவே காட்டுகிறார். "*அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*" (யோவான் 1 : 14).

## இயேசு பிரகாசிக்கும் தேவனுடைய சொரூபமாயிருக்கிறார்

எபிரெயு எழுத்தாளர், இயேசுவை தேவனாக எண்ணித்தான் எழுதியுள்ளார். "*இவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்*" (எபிரெயர் 1 : 3). *W.E. Vine* என்னும் கிரேக்க அறிஞர் இயேசு தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட ஆசிரியர் எபிரெய சகோதரர்களுக்கு இந்த நிரூபத்தை எழுதினதால் சங்கீதம் 45:67-ஐ மேற்கோள் காட்டுகிறார். அங்கே, பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவிடம் பேசும்போது இவ்விதமாகச் சொல்கிறார், "*தேவனே உமது சிங்காசனம் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது*, என்று." வேறுவிதமாகச் சொன்னால், பிதாவாகிய தேவன் என்று கிறிஸ்துவை குமாரனென்றும், தேவனென்றும் அழைக்கிறார். ✝

## கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும் மனிதன் ......

1. தன் வாழ்க்கையில் தேவனுக்கு முக்கியத்துவத்தை முதலாவது கொடுக்கிறான் (மத்தேயு 6:33).
2. இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் இருக்கிறான். (ரோமர் 12:2)
3. மேலானவைகளை நாடுகிறவனாக இருக்கிறான் (கொலோ. 3:1,2)
4. ஆவியின் கனிகளைப் பிரயாசப்பட்டுக்கொடுக்கிறான் (கலா. 5:22,26)
5. தேவனைப்பற்றியும், தன் வாழ்க்கை மீதான தேவனுடைய சித்தத்தையும் நன்றாக அறிந்திருக்கிறான் (யோவான் 17:3).
6. சபைக்குள்ளாக சகோதரர்களின் பாரத்தைச் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் (கலா. 6:2)
7. பொய்யைக் களைந்து, பிறனுடனே மெய்யைப் பேசுகிறவனாக இருக்கிறான் (எபேசியர் 4:25).

தேவன்

# இயேசுவின் பலி

## THE SACRIFICE OF JESUS

*Andrew House*

வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் இயேசுவின் பலியை அல்லது அவர் செய்த தியாகத்தைப் பற்றி, யாராவது ஒருவராகிலும் சொல்லக் கேட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பிரசங்கத்தில் பிரசங்கியாரோ அல்லது உரையாடலின் போது நண்பர்களோ இயேசுவின் தியாகத்தை அல்லது பலியைப் பற்றி கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் இயேசுவின் பலியைப்பற்றி நினைக்கும் போதெல்லாம், அவர் சிலுவையில் தொங்கும் காட்சியைப் பற்றி மாத்திரமே நினைக்கிறேன். அப்படி நினைக்கும் நேரங்களில், இயேசு இவ்வுலகை இரட்சிக்க என்னவெல்லாம் செய்தார் என்பதைப் பற்றிய என் கண்ணோட்டம் ஓர் எல்லைக்குட்படுத்தப்படுகிறது. நாமெல்லாருமே வாழ்க்கையின் ஏதாவதொரு கட்டத்தில் இயேசுவின் பலியை முழுமையாக உணராத குற்ற உணர்வுடன் காணப்படுகிறோம் என நான் நம்புகிறேன்.

மத்தேயு 26 :47 ல், இயேசுவைப் பிடிக்க யூதாஸ் கூட்டிச் சென்ற கூட்டத்தைப்பற்றி விவரிக்கிறது. அவர்கள் பட்டயங்களையும், தடிகளையும் எடுத்துச் சென்றார்கள். இயேசுவை கைது செய்ய ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஒரு கூட்டம் தேவைதானா? அதற்கான பதில் நமக்கு நிச்சயமாகத் தெரியும் தேவையில்லை என்பது தான். ஏனென்றால், இயேசு ஒரு பெருங்குற்றவாளி அல்ல. 1 பேதுரு 2 :21, 22 வசனங்களில் " *அவர் பாவஞ்செய்யவில்லை* " என்று பேதுரு குறிப்பிடுகிறார். எனவே, பாவமே செய்யாத ஒரு மனிதன், தான் ஒரு பெருங்குற்றவாளியைப் போல் இழுத்துச் செல்லப்பட்டிருப்பதை எப்படித் தாங்கியிருக்க முடியும்? அது அவருக்கு எவ்வளவு அவமானமாய் இருந்திருக்கும்? இருந்தபோதிலும், இயேசு தம்மைத் தற்காத்துக்கொள்ள எதையும் செய்ய வில்லை, ஏனென்றால், அவைகளெல்லாம் தேவனுடைய திட்டத்தின் பகுதியாயிருந்தது.

மத்தேயு 26 : 59, 60 ம் வசனங்களில் பிரதான ஆசாரியரும், மூப்பரும் மற்றும் ஆலோசனைச் சங்கத்தார் யாவரும் பொய் சாட்சிகளைத் தேடினார்கள். ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவை குற்றவாளியகத் தீர்த்து , அவருக்கு மரண தண்டனை கொடுக்கத் தீர்மானித்து ஒன்றாகக் கூடினார்கள். குற்றப்படுத்தவும் பொய்சாட்சிகளை ஆயத்தப்படுத்தினார்கள். பெரும்பாலானோர் தமது விசாரணைக்காகப் போராடுவார்கள். ஆனால், இயேசுவோ அப்படிச் செய்ய வில்லை. இங்கே அவர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் அவர் கொடுத்தார். ஏனென்றால், இதுவும் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாயிருந்தது. பின்பு, மத்தேயு 27 ம் அதிகாரத்தில், பிரதான ஆசாரியர்களாலும், மூப்பர்களாலும்

இயேசு பிலாத்துவினிடத்தில் கொண்டுவரப்பட்டார். ஏனென்றால், ரோம சாம்ராஜ்யத்தின் கையெழுத்தில்லாமல் அவர்களால் இயேசுவுக்கு மரண தண்டனையை விதிக்க முடியாது. தேசாதிபதியாகிய பிலாத்துவினிடத்தில் அவர்கள் இயேசுவைக் கொண்டுவந்தபோது, காரியங்களைச் சரி செய்யும் வாய்ப்பு அவனுக்கிருந்தது. பிலாத்து இயேசுவினிடத்தில் யாதொரு குற்றத்தையும் கண்டுபிடிக்காத காரணத்தால், அவரை விடுவிக்கும் அதிகாரம் அவனுக்கு இருந்தது. ஆனால், அதை அவன் பயன்படுத்தாமல் ஜனங்களைத் திருப்திபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். அதே நேரத்தில் இயேசுவை விடுவிக்கவும் சாதுரியமாக முயற்சித்தான். பண்டிகை தோறும் ஒரு கைதியை விடுதலையாக்குவது வழக்க மாயிருந்தபடியால், பிலாத்து யூதர்களைப் பார்த்து *எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப் படுகிற இயேசுவையோ? என்று கேட்டான்* (மத்தேயு 27 :18). பிரதான ஆசாரியர் களும், வேதபாரகரும் பரபாசை தெரிந்தெடுக்கும்படியாக ஜனக்கூட்டத்தைத் தூண்டி விட்டார்கள். இங்கே இயேசுவின் இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு, உங்கள் மரணத்தைத் தங்கள் கைகளில் வைத்திருக்கும் ஜனக்கூட்டத்திற்கு முன்பாக நீங்கள் நிற்கிறீர்கள். அப்போது அந்த ஜனங்கள் உங்களை விடுவிப்பதற்குப் பதிலாக வேறொருவரை விடுவித்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்?

மத்தேயு 27 :26 ல் இயேசு வாரினால் அடிக்கப்பட்டார் என்று எழுதப்பட்டி ருக்கிறது. அந்நாட்களில் கைதிகளின் முதுகில் வாரினால் அடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அந்த வார் அல்லது சவுக்கின் முற்புறத்தில் அடிக்கப்படுபவரு டைய சதையைப் பிய்த்துக் கொண்டு வரும்படியாக கண்ணாடி மற்றும் உலோகத் துண்டுகளைப் பதித்திருப்பார்கள். இயேசு அக்காயங்களுடன், வேதனையைத் தாங்க முடியாத நிலையில் சிலுவையைத் தூக்கி நடந்து சென்றார் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

மத்தேயு 27 : 31 ம் வசனங்களில் தேசாதிபதியின் போர்ச்சேவகர் முள்ளு களால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின் மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு; யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி, துப்பி, அவர்மேல், அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள். இது இயேசுவுக்கு அதிக வேதனையைக் கொடுத்தாலும், அவரைப் போர்ச்சேவர்கள் காரித்துப்பி, கோலினால் சிரசில் அடித்து அவருக்குக் காயத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செய்யாமல் அவரை தாழ்மைப்படுத்தி சிறுமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செய்தார்கள்.

இவைகளெல்லாம் நடந்தபிறகு, அவர்கள் இயேசுவை வெளியேவிட்டு அவர் கீழே விழும் வரை சிலுவையைச் சுமக்கும்படி செய்தார்கள். கடைசியாக கொல்கொதா மலைக்கு அவரைக் கொண்டுபோய் அங்கே சிலுவையிலறைந் தார்கள். சிலுவையிலறைப்பட்டது தான் இயேசுவினுடைய தியாகத்தின் உச்சமாக இருந்தது. ஆனால், அந்தப்பாடுகளுக்குள்ளாக அவரைக் கொண்டு சென்ற மற்ற சம்பவங்களை நாம் மனதில் வைத்தால் தான், அவர் என்னென்ன பாடுகளை யெல்லாம் பட்டார் என்பதைப் பற்றிய சரியான புரிந்துகொள்ளுதல் நமக்கு ஏற்படும்.

# இயேசுவும், சிலுவையும்

## JESUS AND THE CROSS

### *Wiliard Collins*

உலக முழுவதுமுள்ள இழந்து போனவர்களின் இரட்சிப்பு இயேசுவையும், அவருடைய சிலுவையும் மையமாகக் கொண்டுள்ளது. அவருடைய தியாகம் மனிதனை கடந்த 1900 ஆண்டுகளுக்கும் மேலாக தேவன் பக்கமாக இழுத்து வந்துள்ளது. சிலுவையிலறையப்படுவதற்கு முன், கிறிஸ்து அவமானமான முறையில் நடத்தப்பட்டார். உலக ரட்சகர் இயேசு, தன்னுடைய விரோதிகளால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச் சேவகரால் துன்புறுத்தப்பட்டு பரிகசிக்கப்பட்டார். எதிரிகள் அவர் மீது உமிழ்ந்து, அதன்பிறகு சிலுவையில் அறைய அவர் கொண்டு போகப்பட்டார். சிலுவை மரணத்தை மத்தேயு இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். அவரை சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் சீட்டு போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள்... அவர்கள் உட்கார்ந்து அவரை காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் (மத்தேயு 27:35-36) சில மணி நேர பாடுகளுக்குப் பிறகு இயேசு கொல்கதாவில் தன் உயிரை விட்டார்.

## சிலுவை - ஓர் அடையாளம்

கிறிஸ்துவின் பேருண்மைகளை சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது, இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தைச் சுட்டிக்காட்டுகிறது. பாவத்தின் விளைவைச் சிதைந்து போன குடும்பங்களிலும், பயங்கர பகையுணர்விலும், ஒருவருடைய உரிமையை மற்றவர் பறித்துகொள்கிற கொடூரச் செயல்களிலும் நாம் காணலாம். ஆனால், இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத் தன்மையோடு மனிதனுக்குக் காட்டும் தேவனின் மாபெரும் முயற்சி யாகும். தேவ குமாரனின் மரணத்திற்குப் பாவம் தான் பொறுப்பாகும். ஒரு சமயம் நான் மறைந்த " லியோ போல்ஸ் " என்பவர் " இயேசுவை சிலுவை யிலறைந்த பாவம் " என்ற தலைப்பில் பிரசங்கிப்பதைக் கேட்டேன். அவர் அறியாமையான பாவம் என்பதிலிருந்து தொடங்கி, விரோதம், பொறாமை, திருட்டு, பொய், பண ஆசை, ஒழுக்கக் கேடு ஆகிய பல பாவங்கள் பற்றிப் பேசினார். அந்தப் பிரசங்கத்தில் போல்ஸ் அவர்கள் நீதி தவறுதலை குறித்துப் பேசும்போது, பிலாத்துவைக் குறிப்பிட்டார். " தான் என்ன செய்ய வேண்டு மென்பது தெரிந்தும் அதை செய்ய முடியாத அளவு பெலவீனமாயிருந்தான் " அவன் உறுதியாகச் செயல்பட்டிருக்கலாம். ஆனால், தனக்குக் கனத்தைக் கொடுக்கும் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு ஒழுக்க ரீதியில் ஒரு கோழையாக நடந்து கொண்டான்.

## இரக்கத்தின் அகலம்

தேவனுடைய அளவு கடந்த இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஒரு அடையாளம். இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும்

கிடைக்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டுமென நீதி நீடிக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக் கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்குத் தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அவன் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம், மேதியர், பெர்சியராலே கொடுக்கப்பட்டது. மேதியர், பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. மாத்திரமல்ல அவைகளின் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. அச்சட்டத்தில் கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும் கேட்கப்படும். ஒரு சமயம் இளைஞன் ஒருவன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களைக் கெடுத்துப் போட்டான். அவனுடைய குற்றத்திற்குத் தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்லிற்று.

அந்த இளம் குற்றவாளி, விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்தத் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்துவிட்டது. அங்கே, நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் முரண்பாடான அழுகையின் சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. நீதிபதி மகனை நேசித்தான், கூடவே நாட்டின் சட்டத்தையும் மதித்தான். தவறு செய்தவன் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அன்பையும் தனது இரக்கத்தையும் காட்ட வேண்டும். நீண்ட சிந்தனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப் பார்த்து இவ்விதம் சொன்னான். உன்னுடைய நீதிபதி என்ற முறையில், நீ அழித்த இரண்டு கண்களுக்குப் பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தின் தண்டனையை நான் விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்குக் குறைவாக நான் நீதியை விதிக்க முடியாது. "*ஆனால், உனது தகப்பன் என்ற முறையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன்*" என்று. இந்த வகையான இரக்கத்தின் பாடத்தைக் குறித்து பவுல் சொல்லியுள்ளார். " *நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த நமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்* ". சிலுவை மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

## இரட்சிப்பின் வல்லமை

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப் படுத்துகிறது. " *சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக் கிறது*". (1 கொரி. 1:18) கிறிஸ்துவின் சிலுவை மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புர வாகிறான்.

விவாகரத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு கணவனும் மனைவியும் மரிக்கும் தருவாயிலிருந்த தங்களது குழந்தையின் படுக்கையின் இருபுறமும் நின்றிருந்த தாக ஓர் உண்மைச் சம்பவம் உண்டு. அந்தக் குழந்தை ஒரு கையினால் தனது தந்தையின் கரத்தைப் பற்றியிருந்தது. இன்னொரு கரத்தால், தாயின் கைகளைக்

கெட்டியாகப் பிடித்திருந்த இந்நிலையில் அந்தக் குழந்தையின் உயிர் பிரிந்தது. ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்பியது. பரஸ்பர அன்பில் ஒன்றாக்கப் பட்ட பிஞ்சுக் கரங்களால் கிட்டிச் சேர்க்கப்பட்ட கணவனும் மனைவியும் ஒன்று சேர்க்கப்பட்டார்களென்றும், ஒரு முறிந்து போன குடும்பம் ஒன்றானது என்றும் அது சொல்கிறது.

கொல்கதாவில் தேவகுமாரன், தனது ஒரு கரத்தை பரலோகத்திற்குள்ளாக நீட்டி தேவனைப் பிடித்துக் கொண்டார். மற்றொரு கரத்தை மனுக்குலத்துக்கு நேராக நீட்டி மனிதனின் இருதயத்தைத் தொட்டுள்ளார். அதன் மூலம், சிலுவை யில் தொங்கின கிறிஸ்து, மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார். நமது இரட்சகர் மரித்த சிலுவை மரம் சாதாரணமானது என்று எண்ண வேண்டாம். சிலுவை ஒரு மகத்தான பாடத்தைக் கற்பிக்கிறது. யோவான் அப்போஸ்தலன் தனது நூலில் சிலுவையின் மேன்மையை ஒரு வசனத்தில் இப்படியாகத் திரட்டிக் கொடுத்துள்ளார். " *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* " (யோவான் 3:16) ✝

## மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம்

| | |
|---|---|
| 1. தேவனுடைய கிருபை | – எபேசியர் 2:8 |
| 2. கிறிஸ்துவின் இரத்தம் | – ரோமர் 5:9 |
| 3. பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை | – II தீமோத்தேயு 3:16,17 |
| 4. பாவியின் விசுவாசம் | – அப்போஸ்தலர் 16:31 |
| 5. பாவியின் அறிக்கை | – ரோமர் 10:10 |
| 6. பாவியின ஞானஸ்நானம் | – I பேதுரு 3:21 |
| 7. கிறிஸ்தவனின் கிரியை | – யாக்கோபு 2:24 |
| 8. கிறிஸ்தவனின் நம்பிக்கை | – ரோமர் 8:24 |
| 9. கிறிஸ்தவனின் நிலைத்து நிற்கும் தன்மை | – மத்தேயு 24:13 |

# சபைகள் சம்பந்தமான வரலாற்றின் குரல்

## ஈராயிரம் ஆண்டு கால வரலாற்றுச் சுவடுகள் முக்கிய சபை அமைப்புகளின் தோற்றத்தைப் பற்றிய உண்மைகளைக் காட்டுகின்றன

| சபை | ஸ்தாபகர் | இடம் | காலம் |
|---|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | இயேசு கிறிஸ்து | எருசலேம் | கி.பி. 33 |
| கத்தோலிக்க சபை | போனிபேஸ் III | ரோம் | கி.பி. 606 |
| லூத்தரன் சபை | மார்ட்டின் லூதர் | ஜெர்மனி | கி.பி. 1520 |
| எபிஸ்கோபலியன் சபை | ஹென்றி VIII | இங்கிலாந்து | கி.பி. 1534 |
| பிரஸ்பட்டேரியன் சபை | ஜான் கெல்வின் | சுவிட்சர்லாந்து | கி.பி. 1536 |
| பாப்டிஸ்ட் சபை | ஜான் ஸ்மித் | ஹாலந்து | கி.பி. 1607 |
| மெதடிஸ்ட் சபை | ஜான் வெஸ்லி | இங்கிலாந்து | கி.பி. 1739 |
| மார்மன் சபை | ஜோசப் ஸ்மித் | அமெரிக்கா | கி.பி. 1830 |
| ஏழாம் நாள் சபை | வில்லியம் ஸ்மித் | அமெரிக்கா | கி.பி. 1830 |
| விஞ்ஞான கிறிஸ்துவ சபை | மேரி பெக்கர் எடி | அமெரிக்கா | கி.பி. 1866 |
| யெகோவா சாட்சிகள் | சார்லஸ் T. ரசல் | அமெரிக்கா | கி.பி. 1872 |


மேற்சொல்லப்பட்டவைகளில் " எந்த சபையின் " அடையாளக் குறிப்புகள் உங்களுக்குப் பொருந்துகிறது.

சாட்சியங்கள்

# கிறிஸ்தவ சாட்சியங்கள்

## CHRISTIAN EVIDENCES

### *T. Pierce Brown*



**1 பே**துரு 3:15-ல் "*கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களி லிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத் தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்* " என்று காண்கி றோம். இருந்த போதிலும் சிலர், அதிலும் குறிப்பாகக் கர்த்தருடைய சபையோடு தொடர்புடையவர்கள் கூட வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை விசுவாசத்தினாலே அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், " *நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்* " என்று (2 கொரி 5:17) சொல்லுகிறார்கள். இவ்வாறு அவர்களி லிருக்கும் நம்பிக்கையைக்குறித்து மற்றவர்கள் விசாரித்துக் கேட்கும்போது அதற்கான பதில் சொல்வதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். மேலும், அவர்கள், நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதை மிகச் சரியாகவோ, தர்க்கரீதியாகவோ அல்லது வரலாற்றுப் பூர்வமாகவோ நிரூபிக்க முடியாது. ஆனால், அதை வேதாகமம் சொல்கிறது என்பதற்காக நாம் விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

நிச்சயமாகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பது நமக்குப் புரியாவிட்டாலும் கூட அது எவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதை அப்படியே விசுவாசிக்க வேண்டும். சில வேளைகளில் பல காரியங்களை நாம், வராலற்று ஆதாரங்களால் நிரூபிக்க முடியாது என்பது தெளிவாகிறது. ஆயினும், வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நம்பாத ஒருவரிடம் நாம் பேசும் போது, வேதாகமம் சொல்லுகிறபடியால் "*அதை நம்புங்கள்* " என்று சொல்லுவது அர்த்தமற்றதாயிருக்கும் நம் விசுவாசம் "*கண்மூடித்தனமான* " விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதற்கான பொருள் நாம் விசுவாசிக்கின்ற எல்லாவற்றுக்கும் நம்மால் ஆதாரத்தைக் காணமுடியாது என்பதல்ல. சில சூழ்நிலைகளில் வேதாகமம் என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே கண் மூடித் தனமாக விசுவாசிக்கிறோம். உதாரணமாக, ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்பதை விஞ்ஞானப் பூர்வமாக நிரூபிப்பது

கடினம். அதேபோல், பரிணாமக் கொள்கையையும், நிரூபிப்பது கடினமாயிருக்கிறபடியால் விசுவாசத்தினாலே, வேதாகமம் என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். ஆயினும், அவிசுவாசிகளுக்கு இவைகளை ஏற்றுக்கொள்வதற்கு அதிகமான ஆதாரங்கள் தேவை.

1743-ல் பிறந்து 1805 மரித்த "William Paley" என்பவர் ஒரு குறிப்பிட்ட விவாதத்தை முன்னெடுத்து முன் நின்று அதைப் பிரபலப்படுத்தினார். அது நீண்ட காலமாக அதிகமாக விவாதிக்கப்பட்டது. அவருடைய வாதம் என்னவென்றால், ஒருவர் ஒரு கடிகாரத்தைக் கண்டால், இது ஏதோ ஒரு விவேகமுள்ள சக்தியால் தான் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது உருவாகியிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டும். ஏனென்றால், அந்தக் கடிகாரம் தற்செயலாக இயற்கையாகவே உருவாகியிருக்க முடியாது. இப்படி சாதாரணப் பொருளான ஒரு கடிகாரத்தை உருவாக்கியவர் ஒருவர் இருக்க வேண்டுமானால், இப்பிரபஞ்சத்தின் சிக்கலான வடிவமைப்புக்கு வடிவமைப்பாளர் என்று ஒருவர் இருந்திருக்க வேண்டும் என்பதன் அவசியத்தை வெளிப்படுத்தினார்.

John Stuart Mill என்பவர் இந்த விவாதத்தைப் பெலவீனமாகக் கருதினார். அவர் சொல்லும்போது, கடிகாரம் என்று ஒன்றிருந்தால் அதை உருவாக்கினவர் ஒருவர் இருப்பார் என்பது தான் அதன் உட்பொருள். ஏனென்றால், கடிகாரங்கள், கடிகாரத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுகிறதென்பதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். எனவே, இந்த விவாதம் செல்லாது. ஏனென்றால், தேவன் இப்பிரபஞ்சத்தை வடிவமைத்ததை, நம் முன் அனுபவத்தினால் அறிய முடியாது என்றார். ஆனால் Mill தனது வாதத்தில் தவறு செய்திருக்கிறார். மேஜை, நாற்காலி போன்ற சாதாரணப் பொருட்கள் கூட ஏதோ ஒரு விவேகமுள்ள சக்தியால் உருவாக்கப்பட்டது என்பதை ஒருவர் அறிந்து கொள்கிறார். மேலும், ஒன்றுமறியாத காட்டுமிராண்டி கூடவில்லையோ, அம்பையோ கண்டால் அவைகள் காட்டில் வீசும் சூறாவளிக் காற்றினால் உண்டாகவில்லை என்பதை அறிந்துகொள்வான்.

நிச்சயமாக, தேவனோ அல்லது ஒரு குறிப்பிட்ட மனிதனோ அந்த அம்பை அல்லது வில்லை உருவாக்கி அங்கே போட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளா விட்டாலும் கூட, எவ்வித சந்தேகமுமின்றி, ஒரு முயலோ அல்லது புயலோ அவைகளை உருவாக்கவில்லை என்பதை அறிந்திருக்கிறான்.

ஏசாயா 1:18 " *வழக்காடுவோம் வாருங்கள்* " என்று சொல்லுகிறது. நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் என்பது நாம் நம் விசுவாசத்திற்கான காரணகாரியங்களை அறிவதையோ, விசுவாசத்தைக் குறித்து தர்க்கரீதியாக முடிவெடுப்பதையோ தடுக்காது. நாம் இரண்டு விதங்களில் விசுவாசிக்க முடியும், ஒன்று ஆதாரத்தை ஆதாரமாக வைத்து மற்றொன்று தர்க்கரீதியாக முடிவெடுப்பதை அடிப்படையாக வைத்து முதலாவது. வேதாகமத்தைப் பார்க்கலாம். அது ஓர் அருமையான தயாரிப்பு. நாம் தர்க்கரீதியாகவும் சரியாகவும் ஒரு கேள்வியை எழுப்பலாம். "வேதாகமம் எங்கேயிருந்து வந்தது? " என்று. பெற்றோர்கள் சொன்னார்கள் என்பதற்காக நாம் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது. எப்படி இப்பிரபஞ்சம் ஒரு விவேகமுள்ள வல்லமையால் உருவாக்கப்பட்டது என்று தர்க்கரீதியாக நிரூபிக்கிறோமோ, அதேபோல், ஒரு தயையுள்ள தெய்வீக வல்லமையே வேதாகமத்தை

உருவாக்கியிருக்கமுடியும் என்பதை நம்மால் நிரூபிக்க முடியும். ஓர் உண்மையும், நேர்மையுமுள்ள மனது, அந்தத் தெய்வீக வல்லமையானது இயேசுவைப் பற்றி பொய் சொல்லியிருக்கவோ, இயேசுவை பற்றிய உண்மைகளைப் புரட்டியோ அல்லது திரித்தோ பேசியிருக்க மாட்டார் என்ற முடிவுக்கு வரவேண்டும்.

இது ஒரு கண்மூடித்தனமான விசுவாசமல்ல, மாறாக பொய்யென்று நிரூபிக்க முடியாத ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட விசுவாசம்.

முன்றாவது, வேதாகமத்திற்கு வெளியே கூட இயேசு வாழ்ந்தார், மரித்தார், மீண்டுமாக உயிர்த்தெழுந்தார் போன்றவை பற்றிய போதுமான ஆதாரங்கள் உள்ளன. ஒருவர் அந்த ஆதாரங்களை ஆராய்ந்து பார்ப்பதினால் மாத்திரம் கிறிஸ்தவராக முடியாது. ஏனென்றால், அவைகள் வெறும் வரலாற்று உண்மைகள் தான். அவைகள், ஒருவர் கிறிஸ்தவராகவதற்கான பொருளையும், நோக்கத்தையும் கொடுப்பதில்லை. உதாரணமாக, ஒருவர் அதிகமான வேதாகம வரலாற்றுத் தகவல்களைச், சேகரித்து, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் முழுக்கு ஞான ஸ்நானம் பெற்று தேவனை எதற்காக ஆராதிக்கும்படியாக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடினார்கள் என்பதைக் கண்டறிந்து கொள்ளலாம். ஆனால், அவர்கள், எதற்காக ஞானஸ்நானம் பெற்றார்கள். அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்பதை வெறுமனே வரலாற்றுத் தகவல்களைத் தெரிந்து கொள்வதினால் கண்டறிய முடியாது. "*விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* " என்பதால், எனக்கும் விசுவாசம் இருக்கிறது அதனால் நம்புகிறேன் என்ற கண்மூடித்தனமான விசுவாசமாக நம்முடைய விசுவாசம் இருக்கக்கூடாது. நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது, அது உண்மையாகவே தேவனுடைய வார்த்தை தான், அது வெறுமனே மனித ஞானத்தினால் உண்டாக்கப்பட்டிருக்க முடியாது என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் நமக்கு உள்ளன.

எனவே, நம் கிறிஸ்துவ ஜீவியம் விசுவாசமுள்ள ஜீவியமாயிருக்கிறது. நாம் கண்டிராத, காணமுடியாத காரியங்களை விசுவாசிக்கிறோம். ஆகையால், வடிவமைப்பைப் பற்றி William Paley-ன் வாதத்தின் மதிப்பை நாம் மறுக்க வேண்டாம். ஏனென்றால், அந்த வாதமே, நாம் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டுமென்பதை நிரூபிப்பதில்லை. அந்த வாதம் நியாயமானது. அது தர்க்க ரீதியாக இருப்பதினால் மாத்திரம் நியாயமானதல்ல. அது ஒட்டுமொத்த மனித இனத்தின் உலகளாவிய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டபடியால் நியாயமானது என்று நாம் காண்கிறோம். அதாவது, இவ்வுலகில் சிந்தனையும், பொறுப்புமுள்ள ஒவ்வொருவரும், கற்களினால் கற்குவியல் உருவாகியிருந்தாலும், ஜன்னல், கதவு மற்றும் கூரையுடன் ஒரு கட்டிடம் உருவாகாது என்பதை அறிந்திருக்கிறார்கள். ✝

**" ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்".** (ஆதியாகமம் 1:1,2)

# பரிணாமமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

## EVOLUTION? WHAT DO YOU THINK?

*Ashley Bates*

ஓர் உண்மையான கிறிஸ்தவனாகவும், ஒரு கல்லூரியில் அறிவியலைப் பிரதானமான பாடமாகவும் எடுத்துப் படித்துக் கொண்டிருக்கும் எனக்கு, பள்ளிக் கூடங்களில் விஞ்ஞானப் பாடங்களை உட்புகுத்துவது சவாலாக உள்ளது. இது அவிசுவாசிகளை உள்ளடக்கிய விஞ்ஞான உலகத்திற்கு நியாயமாக இருக்கலாம். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமக்கு அது எவ்வளவு அழுத்தமாகப் போதிக்கப் பட்டாலும், அது உண்மையல்ல என்பதை அறிந்திருக்கிறோம்.

ஒரு நிமிடத்துக்கு, அந்த " *அதிர்வெடிக்கொள்கை Big bang lleory* " உண்மையென்று ஒத்துக்கொள்வோம். அப்படியென்றால், அதற்கு எது காரணமாக இருந்தது? அதற்குண்டான அணுக்களும், துகள்களும் எங்கே யிருந்து வந்தன? பூமியானது ஒழுங்கும், கிரமமுமாக அல்லது மாயாஜாலமாகத் தோன்றிவிட்டதா? எளிய முறையில் பார்த்தால் கூட, எல்லாமே, ஏதோ ஒன்றி லிருந்துதான் வர வேண்டும். எதுவும் திடீரெனத் தோன்றிவிடாது. ஆதியாகமத்தில் நாம் காணும் ஞானமான வடிவமைப்பை உறுதி செய்வதன் மூலமாக இவை களெல்லாம் எங்கேயிருந்து ஆரம்பமாயின என்பதற்கு தேவதாகமம் மிகச் சிறந்த விளக்கத்தைக் கொடுக்கமுடியும் என்பதை நாம் காட்டமுடியும். ஆதயாகமம் 1:1, " *ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று வாசிக்கிறோம்.*" இது வெளிப்படையாகவும், எளிமை யாகவும் இருக்கிறது. கிறிஸ்த வர்களுக்கு இது சரிதான்; ஆனால் விஞ்ஞான உலகத்திற்கு இது தவறாயிருக்கிறது. அப்படியென்றால், அந்த ஞானமான வடிவமைப்பின் பின்னால் என்ன தான் இருக்கிறது? ஜீவராசிகள் ஆரம்பமானதைப் பற்றி ஏன் இத்தனை விவாதங்கள்! கிறிஸ்தவர்களான நாம் தான் இந்த விஞ்ஞான விவாதங்களுக்குப் பதிலளிக்க வேண்டும்.

நிச்சயமாகவே, எல்லா விஞ்ஞானிகளும் பரிணாமக்கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை. அதேபோல், ஞானமான வடிவமைப்பை நம்புகிற எல்லா விஞ்ஞானிகளுமே தேவன் தான் அந்த வடிவமைப்பாளர் என்பதை நம்புவ தில்லை. பல விஞ்ஞானிகள், சாட்சியங்கள் நம்மை டார்வின் கொள்கையைவிட மேலான ஒன்றை நோக்கி வழி நடத்துகின்றன என்பதை உணரத்தொடங்கி விட்டனர். டார்வின் சில சோதனைகளைச் செய்து தன் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டிருந்த நாட்களில் அவருடைய, தவறான முடிவுரைகள் இன்றைய நாட்களுடன் மரபணு மற்றும் நுண்ணுயிரியலைப் பற்றிய

தெளிவு இல்லாதிருந்தது. ஆனால், இவ்வுலகிலிருக்கும் சிக்கலான எல்லாக் காரியங்களையும் சுலபமாக்கும் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிபெற்றிருக்கும் இந்நாட்களில் வாழ்க்கைக்கான விளக்கமாக பரிணாமக்கொள்கையை ஏற்றுக் கொள்ளும் எந்த ஒரு விஞ்ஞானிக்கும் மன்னிப்பே கிடையாது.


"*பரிணாமம் என்பதற்கான விளக்கம், ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரு ஜீவராசி சிறிய மாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதைக் குறிக்கிறது.*" சிறிய மாற்றங்களா? டார்வினின் " *ஜீவராசிகளின் ஆரம்பம்* " என்னும் கூற்றின்படி ஒரு செல் அமீபாவிலிருந்து, 100 லட்சம் கோடிக்கும் அதிகமான செல்களால் பின்னிப் பிணையப்பட்டிருக்கிற மனித சரீரமாக பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது என்றால் இதை சிறிய மாற்றம் என்று சொல்ல முடியுமா?!

வேதவாக்கியம், ஆதியாகமம் 1:26, 27 ம் வசனங்களில் இவ்விதமாகச் சொல்லுகிறது, *பின்பு தேவன்; நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல், ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்!* ✝

# மரணத்தை ஏந்தியவன்

1. பயமுறுத்தும் கூட்டத்தின் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்
2. எந்நிலையிலும் உண்மையைப் பேசக்கூடிய தைரியம்
3. கர்த்தர் மீது அவருக்கு எத்தனை அன்பு, அளவு கடந்த நம்பிக்கை மற்றும் விசுவாசம்
4. கர்த்தருக்குள் சுவிசேஷத்திற்காக, கர்த்தருக்காக மரிப்பதில் எத்தனை சந்தோஷம், சமாதானம்.
5. எதிரே மரணம், என்றாலும் அதை கர்த்தருக்காக ஏற்பதில் எத்தனை உறுதி.
6. உண்மையாகவே ஸ்தேவானின் வைராக்கியமான வாழ்விலும் மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார்.

தேவனுடைய வார்த்தை



# மிகச் சிறந்த மறைவிடம்

## The Perfect Hiding Place

***Bob Plunket***

இன்றைய நாட்களில் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் பொருட்களை மறைத்து வைப்பது கடினமாகிவிட்டது. இன்று பலவிதமான சோதனைக் கருவிகள் உள்ளன. பல்வேறு வகையான வாசனைகளை மோப்பம் பிடிக்கத் தக்கதாக நாய்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. நம்முடைய பொக்கிஷங்கள் தண்ணீரினாலோ, அக்கினியினாலோ, திருட்டினாலோ தொலைந்து போகக் கூடியவைகளாயிருக்கின்றன. ஆனால், இம்முழு உலகத்திலே மிகப்பெரிய பொக்கிஷம் தேவனுடைய வார்த்தைகள் தான். இது போன்று ஒரு புத்தகம் ஒருபோதும் இருந்ததில்லை. காலங்காலமாக நாம் பார்க்கும்போது, வேதாகமத்தைப் பகைத்து. அதை அலட்சியம் செய்து அழித்தவர்கள் இருக்கிறார்கள். இங்கே தாவீது தேவனுடைய வார்த்தையை மறைத்து வைப்பதற்கான சிறந்த இடத்தைக் கண்டுபிடித்துவிட்டார் போல் தெரிகிறது. ஆம், " *உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்* " (சங்கீதம் 119:11) என்கிறார்.

இருந்தபோதிலும் நாம் வாழும்போது வசனத்தின் ஒவ்வொரு வார்த்தை யையும் மறந்து விடுகிறோம். ஒரு வயதான சகோதரி வசனத்தை நினைவில் கொண்டு வர முயற்சித்ததை நினைத்துப் பார்க்கிறேன். அவரால் எல்லாவற்றையும் சேர்த்து முழுமையான வசனமாகச்சசொல்ல முடியவில்லை. ஆயினும், அவர் அவ்வசனத்தைத் தன் வாழ்க்கையில் அதாவது தன் நடத்தையில், குணாதிசயத்தில் வைத்து வைத்திருந்தார். அவர் அவ்வசனத்தை மேற்கோள் காட்ட முடியா விட்டாலும் கூட அன்பும், தயையும் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தார். தேவனுடைய வார்த்தையை நம் செயல்களில் மறைத்து வைப்பது தான் மிகச் சிறந்த இடமும், நிலைத்திருக்கும் இடமுமாக இருக்கிறது. சில இடங்களில் வேதாகமத்தை வைத்திருப்பதற்காகத் தண்டிக்கப்படுகிறார்கள். தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களிலும் நடக்கையிலும் வைத்திருப்பதே மிகச் சிறந்த இடமாகும். அப்போது நம்மைச் சிறையில் அடைத்தாலும், நம் கண்கள் குருடாகிப் போனாலும், வேதாகமம் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டாலும், தேவனுடைய வார்த்தைகள் நம்மிடமிருந்து நீங்கிப்போகாது.

மறைத்து வைக்கப்பட்ட வார்த்தையானது பல ஒழுக்க நெறிகளை உள்ளடக்கியது. சங்கீதக்காரனாகிய தாவீது கூறும்போது, தேவனுக்கு விரோதமாக நாம் பாவம் செய்யாதபடிக்கு நம்மை காத்துக் கொள்ளுகிறது (2 வசனம்) சக

மனிதர்களுக்கு விரோதமாக நாம் பாவம் செய்யாதபடிக்கும் மூடத்தமான தவறுகளை செய்யாதபடிக்கும் அது நம்மைக் காத்துக் கொள்கிறது. நம் இருதயங்களில் மறைத்து வைக்கப்படும்போது. அது நம் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது. (சங். 119:105). அது நம்மை இருளில் இடறி விழாதபடி காத்துக்கொள்கிறது. தாவீது சொல்லும்போது, அது நம்மை உணர்வடையச் செய்கிறது என்கிறார். " *உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன்* " (வசனம் 104) என்று.

தேவனுடைய வார்த்தையை நாம் எப்படி மறைந்து வைக்க முடியும்? நாம் அதை நேசிக்க வேண்டும். அதனால் தான் தாவீது " *உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம் என்று பாடினார்* " (வசனம் 97). அதன் பின்பு நாம் தேவனுடைய வார்த்தையைப் பகுத்துப் போதிக்க வேண்டும். " *நீ சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு* " (2 தீமோத்தேயு 2:15). நாம் தேவனுடைய வார்த்தையை நம் வாழ்க்கையில் பொருத்தி அதன்படி வாழவேண்டும்.

இந்த வேத பொக்கிஷத்தை நீங்கள் எவ்வளவாய் உங்கள் இருதயத்திலும் நடக்கையிலும் சேர்த்து வைத்திருக்கிறீர்கள்? தேவனுடைய வார்த்தையை யார் அதிகமாக வைத்து வைத்திருக்கிறார்கள்? இயேசுவைப்போல் யார் இருக்கிறார்களோ அவர்களே அதிகமாக தேவனுடைய வார்த்தையைச் சேர்த்து வைக்கிறார்கள். ஏனென்றால், " *இயேசுவே வார்த்தையாக இருக்கிறார்* ". (யோவான் 1:14). ✝

## வேறு இல்லை

- வேதாகமத்தைத் தவிர வேறு புத்தகம் இல்லை.
- கிறிஸ்துவைத் தவிர வேறு ஆகமம் இல்லை.
- கிறிஸ்துவின் வழியைத் தவிர வேறு வழி இல்லை.
- கிறிஸ்துவின் சபையைத் தவிர வேறு சபை இல்லை.
- கிறிஸ்துவின் போதனையை விட வேறு போதனை இல்லை.

# நாம் வேதாகமத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததற்கு தேவன் மீது பழி போடுவதா?

## IS GOD TO BLAME THAT WE DO NOT UNDERSTAND THE BIBLE ALIKE?

***Kerry Halton***

" *மத ஒற்றுமை என்பது வெறும் பகற்கனவாகவே இருக்கிறது* " .... கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் ஒருபோதும் ஒன்றுபடமுடியாது. ஏனென்றால், வேதாகமம் சொல்கிற காரியங்களில் எப்போதுமே அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்து வருகிறது. வேதாகமத்திற்கு வித்தியாசமான கோணங்களில் விளக்கங்களைக் கொடுக்கிறார்கள். இப்படி வார்த்தைகளை அள்ளி வீசுகிற மனிதனல்லவா மார்க்கப்பிரிவினைக்கு தேவன் மீது பழியைப் போடுகிறான். இப்படியாக, வேதாகமத்தை ஒரே விதமாகப் புரிந்துகொள்ளாமல் தேவன் தவறு செய்கிறார் என்று சொல்லுகிற மனிதன் இவனல்லவா!

இதைக்குறித்து சற்று நாம் ஆழ்ந்து சிந்திப்போம். முதலாவது, தேவன் தம்முடைய பிள்ளைகள் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார் என்பதை நாம் ஆழமாகப் பதியவைக்க வேண்டும். பவுல் இவ்விதமாக எழுதினார் " *சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்* " *(1 கொரிந்தியர் 1:10)*

இப்போது, என்னோடு இதை சிந்தித்துப்பாருங்கள். எவ்வகையான தேவன், ஒற்றுமையைக் கட்டளையிட்டுவிட்டு, பின்பு பல்வேறுபட்ட விளக்கங்களுக்கு வழி வகுக்கும் செய்தியை வெளிப்படுத்துவார்? எவ்வகையான தேவன், ஒற்றுமையை வலியுறுத்தி விட்டுப் பின்பு, நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கும்படியான செய்தியைத் தரத் தவறுவார்? ஒற்றுமையைப் பற்றிக் கொஞ்சங்கூட அக்கறைப் படாத அல்லது தம்முடைய ஜனங்கள் ஒற்றுமையாக இருப்பதற்கு உண்டான வழியை ஏற்படுத்தத் திராணியில்லாத தேவன் தான் அப்படிச் செய்வார்.

இல்லை, ஒற்றுமையைக் குறித்து வேதாகமம் சொல்லுகிறதை கிறிஸ்தவர்கள் கேட்காமலிருப்பது தேவனுடைய தவறல்ல. தேவன் ஒற்றுமையை விரும்புகிறார், அவர் தம்முடைய சித்தத்தை தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். வேதாகமத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றால் அது நம்முடைய தவறுதான்.

இருவர் வேதவாக்கியங்களை வித்தியாசமாக விளக்கும்போது ஒரு விளக்கமோ அல்லது இரு விளக்கங்களுமோ தவறாகத் தான் இருக்க வேண்டும். இரு விளக்கங்களுமே சரியாக இருக்க முடியாது. தேவன் தம்முடைய பிள்ளைகளின் ஒற்றுமையைச் சாத்தியப்படுத்தும் வகையில்தான் தம் சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் சரியாக வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஜனங்கள் வேறுவிதமாக வேதாகமத்திற்கு விளக்கம் கொடுக்கிறார்கள். என்ன செய்வது? ஆனால், அவர்கள் அப்படிச் செய்யக்கூடாது. ✝

# பரிசுத்த வேத வாக்கியங்களின் மதிப்பு

## THE VALUE OF THE HOLY SCRIPTURES

*Wayne Jackson*

இப்பிரபஞ்சத்தை உண்டாக்கினவர் தம்மை எண்ணற்ற அசாதரண விதங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவன் இருக்கிறார் என்பது சிருஷ்டிப்பு, அவருடைய ஞானத்தின் கிரியைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (சங்கீதம் 19:1; ரோமர் 1:20). தேவன் இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றையும் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்து, தம்முடைய நற்கிரியைகளினால் மனித இனத்தை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறார் (மத்தேயு 5:45; அப்போஸ்தலர் 14:17). குற்றமுண்டு, குற்றமில்லையென்று தீர்க்கிற மனச்சாட்சி கூட சிருஷ்டிப்பை ஆளுகிறவர் ஒருவர் இருக்கிறார் என்பதற்குச் சாட்சிகொடுக்கிறது (ரோமர் 2: 14, 15). மின்னுகிற காரணிகள் கூட தேவனாகிய கர்த்தரின் இரட்சிக்கும் செய்தியைக் கொடுக்கப் போதுமானதல்ல. பட்சபாதமற்ற வெளிப்பாடாகிய வேதாகமம் அப்பணியை நிறைவேற்ற அவசியமாகிறது.

யேகோவா தேவனுடைய வார்த்தையில்லாமல் மனிதன் வாழ்க்கையின் அர்த்தம் தெரியாதவனாய் குழம்பி பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்த உண்மையை David Hume யை விட யாரும் சிறப்பாக வர்ணிக்க முடியாது. சந்தேகப் பேர்வழியான இந்த David Hume அநேகமாக கிறிஸ்தவத்தின் மிக மோசமான எதிரியாக இருந்திருக்கக்கூடும். அவர் தன் வாழ்க்கையைப் பற்றி எழுதும் போது மனச் சோர்வை ஏற்படுத்தும் இவ்வார்த்தைகளை எழுதினார். "*நான் எங்கேயிருக்கிறேன்? நான் யாராயிருக்கிறேன்? நான் உண்டாவதற்கு எது காரணமாயிருந்தது? நான் எந்த நிலைக்குத் திரும்புவேன்? நான் இப்படிப்பட்ட கேள்விகளால் மிகவும் குழப்பதில் இருக்கிறேன். என்னை நான் மிகவும் துக்ககரமான நிலையில் கற்பனை செய்து பார்க்கிறேன். மேலும், ஆழமான இருளால் சூழப்பட்டு உடல் உறுப்புகள் செயலிழந்து காணப்படுகிறேன்* " என்று, " *மனித சுபாவத்தின் ஆய்வறிக்கை* " என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். இந்த வார்த்தைகளை இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் வார்த்தைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள் "*நான் மரண இருளில் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்* " (சங்கீதம் 23 :4). அவிசுவாசிக்கு வாழ்க்கையைப் பற்றிய அறிவு எப்படி தூரத்திலிருந்ததென்றும், தாவீதுக்கு எப்படி நம்பிக்கையாயிருந்ததென்றும் பாருங்கள்! வாழ்க்கையின் அர்த்தத்தை வேதவாக்கியங்கள் தான் விளக்க வேண்டும்.

சில மதங்கள் தத்துவ ஞான போதனைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளன. ஒருவர் அந்த தத்துவஞான முறைமைகளை ஏற்றுக்கொள்ளுகிறாரா இல்லையா, என்பது ஒருபுறமிருந்தாலும் இத்திட்டங்களெல்லாம் அதன் தன்மைகளிலேயே நிரூபிக்க முடியாதவைகள். வேதாகமம் இத்தன்மையை உடையதல்ல. வேதாகமம் கனவையோ அல்லது யூகத்தையோ அடிப்படையாக வைத்து அமைந்ததல்ல. அது உண்மையை ஆதாரமாகக் கொண்ட வரலாற்றுச் சம்பவங்களை உள்ளடக்கியதாகும். வேதாகமம் சோதித்துப் பார்க்கப்படத்தக்கவை. வேதாகமத்தை நாம் விவரமாக ஆராய்ந்து பார்த்தால் அது பல்வேறுபட்ட தெய்வீகப் பண்புகளை வெளிப்படுத்துகிறது. அதன் மூலம் அது பரலோகத்திலிருந்து வந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

வேதாகமத்தின் பொருத்தமான ஒற்றுமையும் அதன் ஆச்சரியமான தீர்க்க தரிசனங்களும், உயரிய ஒழுக்க நெறிகளும் அதன் வரலாற்று மற்றும் பூலோகத் தகவல்களின் துல்லியமும், வேதாகமத்தின் பரலோக ஆரம்பத்தை நமக்கு விளக்குகின்றன. வேத காரியங்களை நாம் கவனிக்க வேண்டுமென்று வேதாகமம் நம்மிடம் எதிர்பார்க்கிறது. உண்மையாகவே, ஒரு மூடன்தான் அவைகளைக் குறித்து அக்கறையில்லாமலிருப்பான்.

✝

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்து கிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:12)

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவான் 1:1)

இரட்சிப்பு

# அதிகக் காலம் காத்திருப்பது

## WAITING TOO LONG

*Harshel Dyer*

ஒருமுறை ஒரு கழுகு ஆற்றில் பனிபடர்ந்த ஏதோ ஒரு பிணத்தின் மீது நின்று கொண்டு அதை ருசித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது சிலர் அமெரிக்காவிலுள்ள "*நயாகரா*" நீர் வீழ்ச்சிக்கு அருகில் சென்ற போது, அந்தக் கழுகு அவ்வப்பொழுது தன் தலையைத் தூக்கி உயரப் பார்த்ததை வைத்துப் பார்த்தால் ஆபத்தான நீர் வீழ்ச்சி தனக்கு முன்பாக இருந்ததை அந்தக் கழுகு அறிந்திருந்தது போல் தங்களுக்குத் தோன்றியதாக அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வர்கள் சொன்னார்கள். இருந்த போதிலும், அந்தக் கழுகு. அங்கே யிருந்த செங்குத் தான பாறையினருகில் போகும் வரை பனிபடர்ந்த அந்த இரை யைத் தின்று கொண்டிருந்தது. அதன் பிறகு அது உரத்த சத்தமிட்டு, தன் சிறகு களை அடித்துப் பறக்க முயற்சித்தது. ஆனால், அதன் கால்கள் பனி படர்ந்த, தான் நின்று தின்று கொண்டிருந்த பிணத்திற்குள் சிக்கியிருந்தபடியால் உறைந்து, நீர் வீழ்சியில் விழுந்து செத்துப்போனது.



சமீபத்தில் சில நாட்களுக்கு முன் கர்த்தருக்கு உண்மையாக இல்லாத வருடைய இல்லத்திற்குச் சென்றிருந் தேன். நான் முன்பு, பலமுறை வலியுறுத்தியதைப் போல், மறுபடியும் தேவனோடு உங்கள் உறவை சரி செய்து கொள்ளுங்கள் என்று வலியுறுத் தினேன். அவர் எழுபது வயதைக் கடந்து விட்டபடியால், அவர் வாழ்க்கையும் சூரியனைப்போல் மறையும் நேரம் வந்துவிட்டது. அவர் தன் ஆத்துமா சம்பந்தமாக தனக்கு என்ன தெரியுமோ அதை ஒரு மாதத்திற்குள் செய்வதாக வாக்குக் கொடுத்தார்.

அவருடைய துன்மார்க்கமான வழிகளைப் பற்றி ஓரளவு நான் அறிந்திருக்கிறபடியால் ஏன் அவர் இவ்வளவு காலம் காத்திருக்கிறார் என்று ஆச்சரியப்படுகிறேன். அவருடைய உள்நோக்கம் நல்லதாயிருந்தாலும், தேவ கோபம் வெளிப்படுவதற்கு முன்பாகவும் தேவன் பொறுமை இழந்து போவதற்கு முன்பாகவும் அதிக நாட்கள் காத்திராமல், தேவனோடு உறவை அவர் சரி செய்து கொள்ள வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாயிருக்கிறது.

*" உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு , இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்; சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் ". (எபிரெயர் 3:12,13).* ✝

## உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டது? (மத்தேயு 12:33,37)

❋ மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள், மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினா அறியப்படும்.

❋ விரியன் பாம்புக்குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.

❋ நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துகாட்டுகிறான்.

❋ மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.


❋ ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.

இரட்சிப்பு

# ஞானஸ்நானம் பெற தகுதியானவர் யார்?

## WHO IS QUALIFIED FOR BAPTISM

*Ron Bryant*



தாங்கள் செய்த பாவத்தின் நிமித்தமே ஜனங்கள் குற்றங்களைச் சுமந்து, இழந்தோர்களாய் இரட்சிப்பின் தேவையிலிருக்கிறார்களே தவிர, தங்களின் முன்னோர்கள் செய்த பாவத்தைச் சுமப்பதினால் அல்ல. குழந்தைகள் ஆதாம் செய்த மீறுதலை உடையவர்களாகப் பிறக்கிறார்கள் என்பது உண்மையான உபதேசமல்ல. அப்படியானால், இயேசு கிறிஸ்துவும் பாவமுடையவராகவே பிறந்திருக்க வேண்டும்.

*குழந்தைகள் கள்ளம் கபடமற்றவர்கள்*

சிறு குழந்தைகளைப் பற்றி ஆண்டவர் பேசும்போது, " *பரலோக ராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது* " என்றார் (மத்.19:20). சிறு பிள்ளைகள், பரம்பரை பாவத்தைச் சுமந்தவர்களாகப் பிறந்திருப்பார்கள் என்றால் இயேசு அவர்களைக் குறித்து இப்படிச் சொல்லுவதற்கு மாறாக, பிசாசின் ராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது என்றல்லவா சொல்லியிருப்பார்.

தாவீது, மரித்த தன் குழந்தையைப் பற்றிப் பேசும்போது " *நான் அதனிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப் போகிறது இல்லை என்றான்* " (2.சாமு. 12:23). தாவீது தன் குழந்தை பாதுகாப்பான ஓர் இடத்திலிருப்பதாகவே உணர்ந்தான். அக்குழந்தை பாவ மறியாததாகவே இருந்தது. ஏன் என்றால், " *தேவனுடைய பிரமாணத்தை மீறுவதே பாவம்* " (I.யோவா.3:4).

முன்னோர்களின் பாவத்தை சுதந்தரிக்கிறோம் என்கிற தவறான உபதேசத்திலிருந்துதான் குழந்தை ஞானஸ்நான பழக்கம் ஏற்பட்டுள்ளது.

ஞானஸ்நானத்தினால் ஒரு மனிதனுக்கு வரும் ஆசீர்வாதங்கள், குழந்தைகளுக்கு தேவையில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

மூதாதையர்களின் பாவத்தைச் சுதந்தரிக்கிறோம் என்பது கள்ள உபதேசமில்லை என்றால், குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கு நோக்கமேயில்லாமல் போய் விடும். பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஒருவர் இப்படி எழுதியிருக்கிறார் கிறிஸ்துவினுடைய மீட்பின் திட்டத்தின் கீழ் மீட்கப்பட்டவர்களாக சபையிலே சேர்க்கப்படுகிறார்கள், ஆகவே, சபைக்குள்ளாக இருக்கும் அனைத்து ஆசீர்வாதங் களுக்கும் அவர்கள் பங்காளிகளாக மாறுகிறார்கள். மற்றொரு ஆசிரியர் கூறும் போது, மாறாக, குழந்தை ஞானஸ்நானம் அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்து வந்தது தான்... இயேசு கிறிஸ்து எல்லா இனத்தாரையும் பலதரப்பட்ட வயதிலிருப் போரையும் மீட்கிறவராக இருக்கிறார் என்கிறார்.

ஞானஸ்நானத்தைப் பற்றி ஜான் வெஸ்லி கூறுகையில், குழந்தைகள் ஆதி பாவத்தில் பங்குள்ளவர்களாக இருப்பார்களானால், அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்குப் பொருத்தமானவர்கள். அப்படிப் பாவமுடையவர்களானால், அவர்கள் ஞானஸ்நானமில்லாமல் தங்கள் பாவத்தைக் கழுவ முடியாது (உபதேச பிரதிகள்.பக்கம். 252)

குழந்தைகள், மீட்பின் தேவையை, ஞானஸ்நானத்தில்தான் பெற்றுக் கொள்ள முடியும் என்கிற நிலையிருந்தால், பரிசுத்த ஆவியானவர் அதைத் தெளிவாக வெளிப்படுத்தியிருப்பார். நாம், குழந்தைகள் பாவத்தோடு பிறப்பதில்லை என்பதை, ஏற்கனவே பார்த்துவிட்டோம். வேதாகமத்தில் ஒரு வசனத்தில் கூட குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றதாக நாம் காண முடியாது.

*ஞானஸ்நானத்திற்கு 4 முக்கியமான தேவை!*

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களிடம் 4 காரியங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

1. " *இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதித்திருக்க வேண்டும்.*
2. *இயேசு, தேவனுடைய குமாரன் என்று அவர்கள் விசுவாசிக்க வேண்டும்.*
3. *தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்.*
4. *இயேசு கிறிஸ்துவின் மேல் தங்கள் விசுவாசத்தை அறிக்கை விட வேண்டும்.*"

பிரதான கட்டளையைக் கொடுக்கும்போது, இயேசு கிறிஸ்து இப்படியாகக் கூறினார். " *நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் (தேசத்தாரையும்) சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள்* " (மத். 28:19,19). என்றார். இவ்வசனம் ஒருவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே சீஷனாக வேண்டும் என்கிறது. ஒரு சீஷன் நிச்சயமாக காரியங்களைக் கற்றுக்கொள்வான். ஆகவே ஞானஸ்நானம் பெறுகிற ஒருவன் ஏற்கனவே நற்செய்தியைப் படித்திருக்க வேண்டும். அது குழந்தைகளால் முடியுமா?

மாற்கு 16:15,16 இயேசுவின் இவ்வார்த்தைகளைக் கொண்டிருக்கிறது "*நீங்கள் மனந்திரும்பி , ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்...* " (அப். 2:38). அப்போஸ்தலாகிய பேதுரு திரளான கூட்டத்திற்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தைத் போதித்தார். அவர்களும் அச்செய்தியின் மேல் விசுவாசம் வைத்தார்கள். ஆனால், ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக அவர்கள் மனந் திரும்புவது அவசியமானதாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில், " *அன்றைய தினம், அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்* " (அப். 2:41)

இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்வது மிக முக்கியமானதொரு காரியம்; அவரே இப்படியாக சொல்லியிருக்கிறார். " *மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்;* " (மத்.10:32,33) ரோமர் 10:9 இரட்சிக்கப்படுவதற்கு முன் ஒருவன் அறிக்கை செய்தாக வேண்டும் என்று கூறுகிறது. " *கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, ...* " அடுத்த வசனத்தில் ஏன் நாம் அப்படி செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறார். " *...இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்* " (ரோமர் 10:10) என்கிறார். குழந்தைகள் இப்படிச் சொல்ல முடியுமா?

அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் இந்த நான்கு காரியத்தையும் கொண்ட ஒரு மனமாற்ற சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. " *அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது, அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணமால், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.* " (அப். 8:35-39).

சிறுகுழந்தைகளுக்கு சுவிசேஷத்தைச் சொல்லிக் கொடுப்பது அரிதான ஒன்று, அவர்கள் அதை விசுவாசிக்கவும் முடியாது. மேலும், மனதிரும்பும்படியான பாவங்கள் அவர்களுக்குள் இல்லை, அவர்கள் மனந்திரும்பவும் முடியாதவர் களாக இருக்கிறார்கள். அவர்களால் இயேசுகிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கை செய்யவும் இயலாது. இது உண்மையாக இருப்பதால், புதிய ஏற்பாட்டு உபதேசத் தின்படி நாம் குழந்தைகளை ஞானஸ்நானத்திற்குட்படுத்த முடியாது. ✝

# ஆவியின் சாட்சி

## The Witness of The Spirit

*Dillard Thurman*

| தேவனுடைய ஆவி | மனுஷனுடைய ஆவி |
| --- | --- |
| ☞ தேவனைப் பற்றி சாட்சி கொடுக்கிறார்<br>ரோமர் 8:16; 1 கொரி. 2:11 | மனுஷனைப் பற்றி சாட்சி கொடுக்கிறது ☜<br>ரோம 8:16; 1 கொரி. 2:11 |
| ☞ வெளிப்பாட்டினால் பேசுகிறார்<br>நெகே. 9:30; 2 பேதுரு 1:20,21<br>யோவான் 16:13; அப். 2:4. | உள்ளிருந்து பேசுகிறான் ☜<br>1 கொரி. 2:1; எபி. 10:22<br>அப். 23:1; அப். 24:16 |
| ☞ வேத வசனங்கள் நம்பத்தகுந்தவைகள்<br>எபி. 10:15-17; எபி. 3:7-9<br>மத். 24:35; அப். 1:16. | உணர்வுகள் நம்பத்தகுந்தவைகளல்ல ☜<br>ஆதி. 37:23-35; 1 ராஜ 13:14,24<br>அப். 26:9; யோவான் 16:2 |
| ☞ மறுபடியும் பிறக்க வேண்டும்<br>யோ. 3:3-5; மாற்கு 16:16<br>அப். 2:38; அப். 22:16 | " நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன் " ☜<br>கலா 3:26,27; 1 பேதுரு 1:23<br>ரோமர் 6:3-6; ரோமர் 6:16-18 |
| ☞ கிறிஸ்துவுக்குள் ஆசீர்வாதம்<br>எபே. 1:3; 2 கொரி. 5:17<br>2 தீமோத் 2:10; கொலோ 2:10 | " நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் " ☜<br>கலா. 3:27; 1 கொரி. 12:13<br>ரோமர் 6:3-4; 2 கொரி. 5:17 |
| ☞ உண்மையுள்ளவர்கள் கிரீடம் சூட்டப்படுவார்கள் வெளி. 2:10; பிலிப். 2:12;<br>எபி. 5:8,9; 2 பேதுரு 1:5,7 | " நான் உண்மையுள்ளவனாயிருக்கிறேன் " ☜<br>2 தீமோ. 4:6,8; பிலிப். 3:13-14<br>தீத்து 82:11,12; பிலிப். 1:19,26 |

இரட்சிப்பு

# இழந்த வாய்ப்புகள்

## LOST OPPORTUNITIES

### *Charles R. Rose*

பிரியமானவர்களே! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரினாலே உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். நம்மில் அநேகர், தேவன் நமக்குத் தரும் வாய்ப்புகளை சில காரணங்களுக்காக தவற விட்டு விடுகிறோம். அவைகளில் அநேக வாய்ப்புகள் மறுபடியும் நமக்குக் கொடுக்கப் படுவதில்லை. இச்செய்தியானது, நாம் வாய்ப்புகளைத் தவற விடுவதற்கான சில காரணங்களை வேத வசனத்தின் உதவியுடன் அறிந்து கொள்ள உதவும்.

முதலில் நாம்,நமக்கு அருளப்படும் வாய்ப்புகளைத் தவறவிடுதல், இழப்பு களாக மாறும் என்பதை, தேவனுடைய வார்த்தையின் உதவியுடன் பார்க்கலாம்.

எரேமியா 8:20 - " *அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை* ".

நீதி. 10:5 - " *கோடைகாலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன்: அறுப்பு காலத்தில் தூங்கிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்* ".

நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவெனில், பூமிக்குரிய காரியங் களில் நாம் வாய்ப்புகளை இழந்தாலும், அதின் பாதிப்பு சாதாரணமானது அல்லது தற்காலிகமானதே! ஆனால், நம்மில் அநேகர் ஆவிக்குரிய நன்மையைப் பெறும் படியாக நமக்குக் கொடுக்கப்படும் வாய்ப்புளை அடிக்கடி தவறவிடுகிறோம். அப்படிப் பட்ட வாய்ப்புகள் பறிபோகும் பட்சத்தில், இழப்புகள் பயங்கரமானதாகவும், நிரந்த மானதாகவும் இருக்கும்.

மத். 25:20-12 " *அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார், ஆயத்தமாயிருந்தவர்கள் அவரரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள், கதவும் அடைக்கப்பட்டது. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள். அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்* ".

லூக்கா 13:25-27 - " *வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டினபின்பு, நீங்கள் வெளியே நின்று: ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார். அப்பொழுது நீங்கள்: உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர்கள். ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத் தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாம் என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்* ".

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலுமே வாய்ப்புகளைத் தவற விட்டவர் களுக்கு, கதவு மூடப்படும் வரை வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அதை அவர்கள் தவற விட்டதினால் அவர்கள் நித்தியமாக இழந்துபோனார்கள்.

தொடர்ந்து நாம், அருமையான வாய்ப்புகளைத் தவற விடுவதற்கான காரணங்களை வேதத்தின் அடிப்படையில் சில வசனங்களைக் கொண்டு பார்ப்போம்.

**1. அறியாமையினால் ...**

அப். 3:17 - " *சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமை யினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்*".

1 கொரி. 2:8 "*அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறிய வில்லை. அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே* ".

**2. வஞ்சிக்கப்பட்டபடியால்...**

யாக்கோபு 1:22 "*அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்* ".

கலா. 6:7 " *மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்* ".

**3. உதாசினத்தினால்...**

எபி. 2:3,4 "*முதாலவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்குஉறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளு வோம்*".

எபி. 12:25 "*பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவி கொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்தி லிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப் போவோம்?.*"

**4. உலக மோகத்தினால்...**

யாக்கோபு 4:4 "*விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனா யிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்* ".

யோவான் 17:14 " *நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன், நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல, ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது* ".

**5. அவிசுவாசத்தினால்...**

எபி. 3:19 "*ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்க கூடாமற் போனார்களென்று பார்க்கிறோம்* ".

யோவான் 3:18 " *அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்: விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனு டைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று* ". ✝

# நான் யார்?

*WHO AM I ?*

***Rebecca Rushmore***



என்னை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா? ஒவ்வொரு குறிப்புகளையும் வாசித்து கவனமாக யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே என் பெயரை நீங்கள் யூகித்து விட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யார் என்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையை சரிபார்க்கக் கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்

1. என் கணவன் ஒரு செல்வந்தனாயிருந்தான் (1 சாமுவேல் 25:2)
2. நான் மகாபுத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தேன்; ஆனால், என் கணவனோ முரடனும், துராகிருதனுமாயிருந்தான் (1 சாமுவேல் 25:3)
3. என் கணவனுக்கு மூவாயிரம் ஆடுகளும், ஆயிரம் வெள்ளாடுகளும் கர்மேலில் இருந்து (1 சாமுவேல் 25:2).
4. தாவீது, என் கணவனுடைய ஆட்டு மந்தைகளுக்கருகில் வசித்து வந்தார், தாவீது தனக்கென்றும், தன்னுடைய மனிதர்களுக்கென்றும் எதையும் பெற்றுக் கொள்ளாமல் அந்த மந்தையைப் பாதுகாத்தார் (1 சாமுவேல் 25:7, 15,16).
5. தாவீது என் கனவனிடம் ஆட்களை அனுப்பி அவர்களுக்காக ஆகாரத்தைக் கேட்டபோது என் கணவன் அவர்களிடம் முரட்டுத்தனமாக நடந்து, உதவி செய்ய மறுத்து விட்டார் (1 சாமுவேல் 25 :9 -11)
6. என் கணவன் தாவீதின் ஆட்களை உபசரிக்க மறுத்ததால் தாவீது என் கணவனை பழிவாங்கத் திட்டமிட்டார் (1 சாமுவேல் 25:13, 21, 22)
7. என் கணவன் தாவீதினிடத்தில் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டதை என் வேலைக்காரரில் ஒருவன் இரகசியமாய் எனக்குச் சொன்னான் (1 சாமு.25 :13,21,22)
8. தாவீது என் கணவனைக் கொலைசெய்யப் புறப்பட்டு வரும் வழியில் நான் அவரைத் தடுத்தேன். நான் தாவீதுக்கு ஆகாரம் கொடுத்து என் கணவனுக்கு எந்தத் தீங்கும் செய்யாதபடி கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன் (1 சாமுவேல் 25 :18, 20, 23 - 31).
9. என் கணவன் பெயர் நாபால் என்பதாகும் (1 சாமுவேல் 25:3)
10. என் கணவனோடு தாவீது யுத்தம் செய்ய நினைத்த 11 நாட்களுக்குப் பிறகு கர்த்தர் என் கணவனை வாதித்தார். பின்பு தாவீது என்னைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டார் ( 1 சாமுவேல் 25 :36 -42). ✝

# தேவனுடைய ராஜ்யமும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய காரியங்களும்

## THE KINGDOM OF GOD AND THE THINGS WHICH CONCERN THE LORD JESES CHRIST

*Sunny David*



அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் கடைசி அதிகாரத்தின் கடைசி வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், " *தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார்* " (அப்போஸ்தலர் 28 :31) என்று வாசிக்கிறோம். பவுல் ரோமாபுரி சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அவர் வாடகைக்கு வீடு எடுத்து வசிக்கும்படியாக அனுமதிக்கப்பட்டார். அவரைச் சுற்றிலும் போர்ச் சேவகர்கள் காவல் காத்துக்கொண்டிருந்தனர். அவர், தன்னுடைய வீட்டிற்கு வருபவர்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வாய்ப்பை தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதற்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசிப்பதற்கும்

பயன்படுத்தினார். இவ்விரண்டு காரியங்களும் பவுலின் வாழ்க்கையில் மிக முக்கியமானவைகளாக இருந்திருக்க வேண்டுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவர் ரோமாபுரியில் இரண்டு வருடங்கள் வசித்தார். அவர் இவ்விரண்டு காரியங்களையும் திரும்பத் திரும்ப தன்னிடத்தில் வந்தவர்களுக்குப் பிரசங்கித்தார் என்று வேதவசனம் சொல்லுகிறது.

தேவனுடைய ராஜ்ஜியம் பற்றி பிரசங்கிக்கும் போது பவுல், தான் யாருக்குப் பிரசங்கித்தாரோ அவர்களிடம் " *பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்* " என்று தானியேல் தீர்க்கதரிசி முன்னுரைத்ததை நிச்சயமாக பிரசங்கித்தார். பின்பு, கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம், "*இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* " என்று கூறினார். (மாற்கு 9 :1). தேவனுடைய ராஜ்யம் என்பது இயேசு ஸ்தாபித்த சபையாக இருக்கிறது (மத்தேயு 16 :18,19) இந்த சபையில்தான் கர்த்தர், இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப்போஸ்தலர் 2:47, கொலோசெயர் 1:13,14). அதன் பின்பு முடிவு வரும்போது தேவனும் பிதாவுமாயிருக்கிறவரிடத்தில் ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார் (1 கொரிந்தியர் 15 :24-28). அந்த ஆவிக்குரிய ராஜ்யமாகிய சபையில் ஒருவர் பிரவேசிப்பதற்கு மறுபடியும் பிறக்க வேண்டுமென்று பவுல் நிச்சயமாகச் சொல்லியிருப்பார். ஏனென்றால், ராஜாவும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து "*ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்* " என்று சொன்னார் (யோவான் 3:3-5).

மேலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய காரியங்களைப் போதிக்கும்போது, அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பைப் பற்றி தான் யாருக்குப் போதித்தாரோ அவர்களிடத்தில் நிச்சயமாகச் சொல்லியிருப்பார் (மத்தேயு 1:18-25; 2:1-12; லூக்கா 2:1-20; யோவான் 1:1,14). நிச்சயமாக பவுல், இவ்வுலக வாழ்க்கையில், கிறிஸ்துவின் பாவமற்ற வாழ்க்கையைப் பற்றி போதித்திருப்பார். அதுபோல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதராயிருக்கிற இயேசுவை பற்றி போதித்திருப்பார் (எபிரெயர் 4:15). கிறிஸ்து செய்த அற்புத அடையாளங்களைப் பற்றியும், அவர் போதித்த வல்லமையான போதனைகளைப் பற்றியும் பவுல் நிச்சயமாகப் பிரசங்கத்திருப்பார். மேலும், கிறிஸ்து பாவிகளாகிய நமக்காக கிருபாதார பலியாக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்து, மரித்து அடக்க பண்ணப் பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதையும், கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களிடம், உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டதையும் போதித்திருப்பார் (1 கொரிந்தியர் 15:1-14). கடைசியாக " *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " என்று இயேசு கிறிஸ்து சொன்னவைகளையும், அப்போஸ்தலனாகிய பவுல் நிச்சயம் போதித்திருப்பார் (மத்தேயு 28:18-20; மாற்கு 16 :15,16).

எவ்வித சந்தேகமுன்றி, அப்போஸ்தலனாகிய பவுல் தான் யாருக்குப் போதித்தாரோ அவர்களிடம் இயேசு கிறிஸ்து கடைசி நாளில், தம்முடைய வசனத்தின்படி இவ்வுலகத்தை நியாயத்தீர்ப்பு செய்வார் என்பது பற்றியும் போதித்திருப்பார் (அப்போஸ்தலர் 17 :30,31; யோவான் 12:48). அந்த நாளிலே அவருடைய வல்லமையான மகிமையினாலே நாமெல்லாரும் உயிரோடு எழுப்பப்படுவோம். இப்பூமியில் அவருடைய சித்தத்தைச் செய்தவர்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் (1 தெச. 4:13-18).

நிச்சயமாகவே, பவுல் எப்போது கிறிஸ்தவரானாரோ அப்போதிலிருந்தே தன்னுடைய முழு ஜீவனையும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் பிரசங்கிப்பதற்கு அர்ப்பணித்து விட்டார். பவுல் ஏன் அப்படிச் செய்தார்? ஏனென்றால், பரலோகம் மிக அற்புதமான இடமென்றும், அந்தப் பரலோக ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு இயேசுவே வழி என்றும் அவர் விசுவாசித்தபடியால், தன்னுடைய வாழ்க்கையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய காரியங்களைப் பிரசங்கிப்பதற்காக அர்ப்பணித்தார். ✝

கசப்பின் கதவையும், பகையின் கை விலங்கையும் உடைத்தெறியும் சாவி மன்னிப்பு தான். இந்தச் சாவி உங்களிடம் இருக்கிறதா?

**சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள் வாலிபரும் இடறி விழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள் (ஏசாயா 40:29-31).**

# நம் மாபெரும் தேவை

## OUR GREATEST NEED

*Dalton Key*

இன்றைய நாட்கள் விநோத மான, குழப்பமான நாட்களாக இருக் கின்றன. இந்த நாட்களில் தான் நூறு கோடிக்கும் மேலானோர். இயேசு கிறிஸ்துவுக்குப் பதிலாக முகமதுவைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்த நாட்களில் நம்மில் பலர் வேதாகத்தை விட, கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்வதை விட நாட்டு நடப்புகளை அறிந்து கொள்வதில் அதிக அக்கறை காட்டுகிறவர்களாயிருக்கிறோம். இந்நாட்களில் தங்களை அறிவாளிக ளென்று சொல்லிக் கொள்கிற சுய சிந்தனையாளர்கள், கன்னியின் மூலமாக இயேசு பிறந்ததையும், மரித் தோரிலிருந்து அவர் எழுந்ததையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். மேலும் அவர்கள், இவைகளை நியாயமற்ற தாகவும், விஞ்ஞானப் பூர்வமற்றதாக வும் எண்ணுகிறார்கள். அதே நேரத்தில் நவீன காலக் கொள்கைகளான, மறு அவதாரம் மற்றும் மரித்தவர்களுடன் பேசுதல் போன்றவைகளைப் பற்றிப் பரப்புரை செய்வதில் தீவிரமாக இருக் கிறார்கள். ஆம், நம்மைச் சுற்றிலும் நல்லவைகளெல்லாம் தீயவைகளா கவும், தீயவைகளெல்லாம் நல்லவை களாகவும் சித்தரிக்கப்படும் போது, இன்றைய நாட்கள் விநோதமான நாட்களென்பதை உண்மையாகவே யார் தான் மறுக்கக் கூடும்? எது காரியங்களைத் தலைகீழாக மாற்றும்? ஸ்திரத்தன்மை, சமநிலை, தெளிவு இவற்றில் தாறுமாறாக இருக்கின்ற இவ்வுலகத்திற்கு எது அவசரமாகத் தேவைப்படுகிறது?

இன்று உலகத்திற்கு எது தேவை? ஆம், நம்மெல்லோருக்கும் கிறிஸ்து வைப் பற்றியும், அவருடைய மாதிரி யைப் பின்பற்றறுவது பற்றிய தீவிர தீர்மான தான் தேவை.

John Banister ஒருமுறை, சுருக்கமான, அதே நேரத்தில் வல்ல மையான ஒரு கட்டுரையை "*நம் மாபெரும் தேவை*" என்கிற தலைப்பில் கீழ் எழுதினார். அதை ஜாக்கிரதையாக வாசி யுங்கள், இன்று சபைகளுக்குத் தேவை; பெரிய நிகழ்ச்சிகளோ, திட்டங் களோ அல்ல, மாறாக, கிறிஸ்துவைப் பற்றித்தான அதிகமாகத் தேவைப் படுகிறது! புதிய புதிய செயல்பாடுகளோ அல்லது தந்தி ராங்களோ அல்ல, கிறிஸ்து வைப் பற்றித் தான் அதிகமாகத் தேவைப்படுகிறது! அதிகமான அலுவல் கூட்டங்களல்ல, கிறிஸ்துவைப் பற்றித் தான் அதிகமாகத் தேவைப்படுகிறது! அதிகம் படித்த பிரசங்கியார்களல்ல, கிறிஸ்துவைப் பற்றித்தான் அதிகமாகத் தேவைப்படுகிறது! மிக அழகான தோற்றத்தை உடையவர்களல்ல,

கிறிஸ்துவை உயர்த்திக்காட்டுவது தான் அதிகமாகத் தேவைப்படுகிறது! உயர் மட்டத்திலுள்ளவர்களோ, சமூக சிந்தனையாளர்களோ அல்ல, கிறிஸ்து வைப் பற்றிச் சொல்லுகிறவர்கள் தான் அதிகமாகத் தேவைப்படுகிறது! அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் அல்ல, கிறிஸ்து வைப் பற்றித்தான் அதிகமாகத் தேவைப் படுகிறது! சகோதரன் John Banister இவைகளை விட அதிகமாக வேறு எதையாவது இலக்காக வைத்துப் பேசியிருக்க முடியுமா?

இயேசு கிறிஸ்துவில் மாத்திரமே, அவருடைய வார்த்தையை நம் மனதில் ஆழமாகப் புரிந்து கொள்வதினால் மாத்திரமே புத்திக்கெட்டாத இவ்வுல கத்தை முழுமையாகப் புரிந்து கொள் வதற்கான வழியும், கண்ணோட் டமும், ஆழ்ந்த அறிவும் கிடைக்கும். இவ்வுலகம் ஒழுக்கம் மற்றும் ஆவிக் குரிய தலைமைத்துவத்திற்காக கதறு கிறது, ஏங்குகிறது. ✝

## சிந்தித்துப் பாருங்கள்

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் முகத்தைக் கழுவி உடலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டு மென்பதற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அதே பிள்ளைகளின் ஆத்தும சுத்தத்திற்குக் கொடுப்ப தில்லை.

அதேபோல் தங்கள் பிள்ளைகள் எழுத்துக் களை சரியாக உச்சரிக்க வேண்டுமென்றும், பாடங் களை நன்றாகப் படிக்க வேண்டுமென்றும் எதிர் பார்க்கும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் பரலோகில் வாழத் தகுதியுடையவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புவதில்லை இப்பூமியில் வாழத் தகுதியுடையவர்களாயிருக்க வேண்டுமென்று கற்றுக் கொடுக்கிறார்கள். இது எவ்விதத்தில் நியாயம்? கிறிஸ்தவப் பெற்றோர்களே! இதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

# கர்த்தருடைய சேனை

## THE HOST OF THIS LORD

*Bro. L.E. Cranford*

வேத வகுப்புகளிலும், விடுமுறை வேதாகமப் பள்ளியிலும், சிறு குழந்தைகள் " *நான் கர்த்தருடைய சேனையில் இருக்கிறேன்* " என்று பாட நம்மில் அநேகர் கேட்டிருக்கிறோம். அவர்களில் பெரும்பாலானோருக்கு அந்தப் பாடலின் பொருள் தெரியாது என்று எண்ணுகிறேன். கிறிஸ்தவர்களாயிருக்கிற அநேக பெரியவர் களுக்கும், நடுத்தர வயதினருக்கும் கூட கர்த்தருடைய சேனை என்பதற்கான பொருள் தெரியுமா என்று திட்டமாகச் சொல்ல முடியாது.

கர்த்தருக்கு ஒரு சேனை இருக்கிறது என்பற்கான சில ஆதாரங்களை பின்வரும் வசனங்கள் கொடுக்கின்றன.

ரோமர் நிருபத்தின் ஆசிரியர் இவ்விதமாகச் சொல்கிறார். " *இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால், அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்* " (ரோமர் 13:12).

" *ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத் தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்* " (எபே. 6:13).

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதும் போது, " *நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி* " என்று எழுதுகிறார் (II தீமோ. 2:3).

" *தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவக மெழுதி கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்* " (II தீமோ. 2:4).

கிறிஸ்துவின் போர்ச் சேவகனாக ஒரு கிறிஸ்தவனின் சர்வாயுத வர்க்கம் இதோ: "*சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத் திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத் தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்* " (எபே. 6:1417).

கர்த்தருக்கு ஒரு சேனை உண்டு என்பதை ஒத்துக்கொண்டு ஒரு நாட்டிலுள்ள ராணுவத்தின் சில தன்மைகளைக் கவனிப்பது பிரயோஜனமாயிருக்கும்.

நான் இரண்டாம் உலகப் போரின் போது விமானப்படையில் பணியாற்றினேன். அதில் சேர்ந்த பிறகு, நான் விரும்பியபடி எதையும் செய்ய முடியவில்லை. எனக்கு யாரும் வாழ்த்துதல் சொல்லவில்லை, நான் அவர்களுடன் இருந்ததினால் அவர்களுக்கு மகிழ்ச்சி தான் என்றும் அவர்கள் சொல்லவில்லை.



ராணுவ அதிகாரி என்னை ஒரு குறிப்பிட்ட பிரிவில் சேர்த்தார். நான் செய்யும்படியாக சில பணிகள் எனக்குக் கொடுக்கப்பட்டது. எனக்கு மேலாக சில குறிப்பிட்ட அதிகாரிகள் இருந்தார்கள். சில விமானங்களை வரிசைப்படுத்தி ஒழுங்கு படுத்துவதற்கு நான் ஆஜராகும்படி கட்டளையிடப்பட்டிருந்தேன். நான் சரியான நேரத்தில் அந்த இடத்தில் இருப்பது முற்றிலும் அவசியமாகக் காணப்பட்டது. அங்கே ஆஜராகாமலிருப்பதற்கு எந்த ஒரு சாக்குபோக்கும் ஏற்றுக்கொள்ளப்படாது. “ எனக்கு வேறு வேலை இருந்தது என்றோ, என்னால் எழுந்திருக்க முடியவில்லை” என்று யாரும் சொல்லத் துணியவில்லை.

எங்கள் பயிற்சி முடிந்தவுடன், மறுபடியும் சில குறிப்பிட்ட பணி ஸ்தலங்களுக்குச் செல்ல நாங்கள் பணிக்கப்பட்டோம். அங்கே நாங்கள் செய்யும்படியாக வேலை கொடுக்கப்பட்டது.

ஒரு வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அதில் பங்கேற்கிறவர்கள் என்னென்ன செய்யவேண்டும் என்று அறிவுரை வழங்கப்படும். ஒவ்வொருவரும் அவரவர் இடத்தையும், பொறுப்பையும் அறிந்திருந்தார்கள். வேலையை முடித்து விட்டுத் திரும்புபவர்கள் தாங்கள் பணி செய்த விதம் பற்றிச் சொல்ல வேண்டும். இது தான் ராணுவத்தின் முறை.

சபை கர்த்தருடைய சேனையாக இருக்கிறபடியால் இந்த இரு அமைப்புகளிலும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்தால் பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

சில சபைகள் மற்ற சபைகளை விட ஆளுகை அமைப்பில் சிறந்து விளங்கும். இது நமக்கு புதிய செய்தி அல்ல. ஆயினும், புதிதாக சபைக்கு வருபவர்களுக்கு குறிப்பிட்ட வாரங்கள் பயிற்சி கொடுக்கும் சபையை எனக்குத் தெரியாது; அது போல அதன் அங்கத்தினர்கள் எப்போதும் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறியும் அல்லது ஒவ்வொரு கூட்டத்திலும் அதில் பணிபுரியும் எல்லோரையும் வரக் கட்டளையிடும் சபை எனக்குத் தெரியாது.

சில சபைகளில் ஞாயிறு காலை ஆராதனையை நடத்துபவர்கள் ஆராதனை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஜெபத்திற்கு கூடுவதை நான் அறிவேன்.

ஆனால், செய்த பணியைக் குறித்து விவரிக்கக் கூடிய சூழ்நிலையை அவர்களிடத்தில் நான் பார்த்த அனுபவமில்லை அல்லது அப்படிச் செய்கிற வேறு சபையைப் பற்றி எனக்குத் தெரியாது.

பொதுவாக ராணுவத்தில், ஒவ்வொரு வீரருக்கும் ஒரு பிரிவின் கீழ் செய்யும்படியாக வேலை கொடுக்கப்படும், ஒவ்வொருவரும் தங்கள் வேலையை அறிவார்கள். அது போலவே கர்த்தருடைய சேனையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் செய்யும்படியாக வேலை கொடுக்கப்பட வேண்டும்.

சபையின் அங்கத்தினர்கள் (கர்த்தருடைய சேனை) கர்த்தருடைய நாளில் அவர்களுடைய சௌகரியம் போல் சபை கூடி வந்தாலோ அல்லது சபை கூடி வருதலை விட்டு விட்டாலோ அதற்குண்டான விளைவுகள் இல்லையென்றால் ஏதோ தவறு நடக்கிறது.

அநேக ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனையை தவற விட்ட அங்கத்தினர்களை நான் அறிவேன், அவர்கள் திரும்பி வந்தபோது " நாங்கள் உங்களைக் காணத்தவறிவிட்டோம், நீங்கள் திரும்பி வந்ததினால் மகிழ்ச்சி அடைகிறோம் என்று வாழ்த்தப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நடத்தைகள் ராணுவத்தில் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது. அதுபோல ஒரு நாளில் கர்த்தர் நம் சாக்குப் போக்குகளை ஏற்றுக்கொள்ளமாட்டார் ".

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு மூப்பர் ஓர் இளம் பெண்ணைப் பார்த்து இப்படிச் சொன்னார் " *கடந்த வாரம் உன்னைக் காணத் தவறிவிட்டோம்* " அதற்கு அந்தப் பெண் பதிலாக " *நான் வேலை செய்ய வேண்டியதாயிருந்தது* " என்று சொன்னாள். அதற்கு அந்த மூப்பர் " *நான் உன்னைக் காண தவறி விட்டேன் என்று உனக்குத் தெரிவிக்க விரும்பினேன்* " என்று சொன்னார்.

அந்த இளம் பெண் கர்த்தருடைய கட்டளைக்கேற்ப மற்ற கிறிஸ்தவர்களோடு சபை கூடுதலைக் குறித்து ஜாக்கிரதையாக இல்லாமல் இருந்திருக்கலாம். கர்த்தருடைய கட்டளை "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதாகும். இதை சிலர் செய்கிறார்கள், சிலர் செய்வதில்லை.

ராணுவத்தில் ஒன்று கூடுவதற்குத் தவறினால் அது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது !. ✝

# மன்னிப்பும், ராஜ்யமும்

(மத்தேயு 18:15-35)

# FORGIVENESS AND THE KINGDOM

*Gary C. Hampton*

### தனக்கு விரோதமாக பாவஞ்செய்கிற மற்றவர்களுக்கு கிறிஸ்தவனுடைய பதில்

மனித உறவுகளில் சாதாரணமாக ஒருவர் மற்றவருக்கு விரோதமாக பாவஞ் செய்வதுண்டு. குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு விரோதமாகக் குற்றம் செய்தவனிடத்தில் போய் அவனை மீட்டமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று இயேசு அறிவுறுத்தினார். இது யூத மதக்குருக்களின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. அவர்கள், யார் குற்றம் செய்தார்களோ அவர்கள், சாட்சிகளுக்கு முன்பாக பாதிக்கப்பட்டவர்களிடத்தில் தாங்கள் தவறை சரி செய்ய வேண்டும் என்று போதித்தார்கள். சில வேளைகளில், குற்றம் செய்தவர்கள் இவ்விதமாக மூன்று முறை செய்ய வேண்டுமென்று யூத மதகுருக்கள் சொல்வார்கள். இங்கே நாம் கவனித்தால் மதகுருக்கள் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்காக அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, குற்றம் செய்தவர்களை தாழ்மைப்படுத்தி, இழிவுபடுத்துவதே அவர்கள் நோக்கமாயிருந்தது. நிச்சயமாக, குற்றம் செய்தவர் தன் குற்றத்தை உணர்ந்தால், அவனும் பிரச்சனையை சரிப்படுத்த கடமைப்பட்டிருக்கிறான் (மத். 5:23,24).

### என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்?

கர்த்தருடைய உபதேசத்திற்கு பேதுருவின் பதில், கர்த்தருடைய அன்பின் இருதயத்தைப் பேதுரு சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. "Edershein" என்பவருடைய கூற்றுப்படி, மூன்று முறைக்கு மேல் மன்னிப்பு வழங்கப்படக்கூடாது என்று யூத ரபீக்கள் போதித்திருக்கிறார்கள். எனவே, பேதுரு தன் சகோதரனை ஏழுதரம் மன்னிக்க வேண்டுமோ? என்று கேட்டதினால், தான் சற்று தாராளமாக இருப்பதாக ஒருவேளை நினைத்திருக்கலாம். ஆயினும், இயேசுவின் பதில், அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் எவ்வளவு அன்பும், அக்கறையும் உடையவராயிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அப்படி மன்னிக்கும் அன்பான இருதயம் இருக்குமானால் தவறை எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் என்கிற கேள்வியே எழும்பாது.

உண்மையாகவே, கிறிஸ்தவனுடைய மன்னிக்கும் எல்லை தேவனுடைய மன்னிக்கும் எல்லையைப் போலிருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் பிதாவின் அன்பை வெளிப்படுத்தப் பாடுபட வேண்டும் (மத்தேயு

5:43-48). இத்தகைய சிந்தை இயேசு சொன்ன உவமைகளின் பின் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

### தேவனுடைய ஆச்சரியமான கிருபை

இயேசு சொன்ன இந்த உவமையில் வரும் ராஜா தேவனாயிருக்கிறார். இங்கே இந்த ராஜா தன் வேலைக்காரர்களை கணக்கொப்புவிக்கும்படி கேட்டுக் கொண்டார். ராஜாவுக்கு முன்பாக பத்தாயிரம் தாலந்துகள் கடன்பட்டவனைக் கொண்டு வந்தார்கள். ஒரு தாலந்து என்பது தங்கத்தில் தோராயமாக நூற்றிமுப்பத் தொன்று பவுண்டுகள் எடையுடைய காசுகளாக இருந்திருக்கிறது அல்லது வெள்ளியில் நூற்றிப்பதினேழு பவுண்டுகள் எடையுடைய காசுகளாக இருந்திருக் கிறது. வேறுவிதமாகச் சொன்னால் இந்தக் கடன் மிகப்பெரிய தொகையாக இருந்திருக்கிறது.

" எடர்ஷீன்" என்பவர், இவ்விதமாகச் சொன்னார். அவருடையவைகளை நிர்வகிக்கும்படியாக நம்மிடம் ஒப்புக்கொடுத்திருக்கிற பரலோகப் பிதாவிற்கு நாம் எல்லோரும் கடனாளிகளாக இருக்கிறோம், நாம் கொள்ளையடித்தது, தவறாகப் பயன்படுத்தியது போன்றவைகளைச் சேர்த்துப் பார்த்தால் சொல்லமுடியாத அளவுக்குக் கடன்பட்டிருக்கிறோம், அவைகளை நம்மால் திருப்பிச் செலுத்தவே முடியாது. அவர் தொடர்ந்து நம்மை விடுவிக்கும்படியாக சுவிசேஷத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

மனித இனத்தின்மீது தேவனுடைய ஆச்சரியமான அன்பு, அந்த அளவு மிகப்பெரிய கடனை மன்னிப்பதற்கு ராஜா விருப்பம் தெரிவித்ததில் தெரிகிறது. இஸ்ரவேலரின் பாடகர் இவ்விதமாகப் பாடினார். "மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார் " (சங்கீதம் 103:12). அவர் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். "இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு " (சங்கீதம் 130:7). நாம் அவருக்குக் கீழ்ப் படிந்தால் பாவத்தின் ஆழமான கறைகளை அவர் முற்றிலுமாக எடுத்துப்போட சித்த முள்ளவராயிருக்கிறார். மனந்திரும்ப விரும்பி ஞானஸ்நானத்தின் மூலமாக புதிய மனிதனாக மாற விரும்புபவர்களின் பாவங்களை முற்றிலுமாகக் கழுவுவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள்ளிருந்து தன் பாவங்களை அறிக்கையிடுபவர்களை உண்மையாக மன்னிப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப்போஸ்தலர் 3:19; 1 யோவான் 1:9).

### இரக்கமற்ற வேலைக்காரன்

அந்த வேலைக்காரன், ராஜா தனக்கு என்ன செய்தார் என்பதை முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை. அது தன்னுடைய சக வேலைக்காரன் தனக்குச் செலுத்த வேண்டிய சிறிய தொகையை அவனிடத்தில் பலவந்தமாய்க் கேட்டதிலி ருந்து தெரிகிறது. அந்த சக வேலைக்காரன் இவன் ராஜாவினிடத்தில் விடுத்த அதே வேண்டுகோளையே விடுத்தான். இருந்தபோதிலும், இவன் சக வேலைக் காரனுக்கு பணத்துடன் வருவதற்கு நேரத்தைக்கூட கொடுக்கவில்லை, அவனைக் கடனாளிகளின் காவலில் போட்டுவிட்டான்.

இந்த வேலைக்காரனின் செயல்பாட்டைப் பார்த்து, மற்ற சக வேலைக் காரர்கள் அதிர்ச்சி அடைந்து நடந்ததை ராஜாவிடம் அறிவித்திருக்கிறார்கள். இங்கே இந்த மனிதனுடைய கண்ணிலிருந்து உத்திரம் ராஜாவின் இரக்கத்தால் எடுக்கப் பட்டதை உணராதவனாக இவன் காணப்பட்டான். இங்கே இந்த மனிதன் தன் சக வேலைக்காரனுடைய துரும்பை எடுத்திருக்கிறான் (மத். 7:1-5). கடிந்து கொள் வதற்குப் பதிலாக இவன் அவனை மன்னித்திருக்க வேண்டும். இப்படியிருக்கிற படியால், தேவனால் மன்னிக்கப்படுகிறவர்கள் பிறரை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (மத். 6:12,14,15). பவுல் எபேசு பட்டணத்து சகோதரர்களுக்கு சொல்லும்போது இவ்விதமாகச் சொன்னார். " *ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மனித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்* " (எபே. 4:32).

**மன்னிக்காத மனதுக்கு தேவனுடைய பதில்**

நடந்தவைகளை ராஜா கேட்டபோது கடுங்கோபங் கொண்டான். தான் அந்த வேலைக்காரனுக்கு மனித்தது போல அவனும் மன்னிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அந்த வேலைக்காரன் அப்படிச் செய்யாததினால் அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். இவ்வளவு பெரிய கடன் தொகையை அந்த வேலைக்காரன் அந்த சிறைச் சாலைச் சுவர்களுக்குள்ளிருந்து எப்படி திருப்பிச் செலுத்த முடியும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்!



அது பாடுகள் நிறைந்த நித்திய தண்டனையா யிருக்கும். "*அப்படியே இயேசு நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங் களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்* " (மத்தேயு 18:35). ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் பாவம் செய்திருக்கிறோம். நம் பாவங்கள் நித்திய மரணத்திற்கு பாத்திரமானவைகள் (ரோமர் 3:10, 23; 6:23). ஆயினும், நம் பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக தேவன் சொல்ல முடியாத ஈவாகிய அவருடைய குமாரனை நமக்காக அந்த கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் (II கொரி. 9:15; யோவான் 3:1617) "*நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம் மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்* " (ஏசாயா 53:6). நிச்சயமாக, இத்தகைய மாபெரும் கடனிலிருந்து நம்மை தேவன் விடு வித்ததற்கு நன்றி செலுத்தும் விதமாக நாம் நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டும். ✝

# நான் ஆச்சரியப்பட்டதுண்டு!

## I USED TO WONDER!

***Tommy Durden***

ஏன் ஆராதனைக்குப் போகவேண்டும்? ஜெபத்தில் எதற்காக சிரம் தாழ்த்த வேண்டும்? என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு!
ஆனால் இப்போது : என்றென்றும் காத்துக்கொண்டிருக்கிற சமாதானத்தைக் கண்டடைந்தேன் என்பதை அறிந்தேன்.

ஏன் துதிப்பாடல்களைப் பாடவேண்டும்? அவைகள் வெற்று வார்த்தைகள் தானே என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு !
ஆனால் இப்போது: துதியின் மதிப்பை நான் உணர்ந்து – அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என்பதை அறிந்தேன்.

ஏன் அமைதியாயிருந்து பிரசங்கியார் பேசுவதைக் கேட்க வேண்டும்? என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு !
ஆனால் இப்போது : அது, தள்ளாடுபவர்களுக்கும், பெலவீனர்களுக்கும் எவ்வளவு பெலன் தெருகிறது என்பதை அறிந்தேன்.

ஏன் அப்பம்பிட்டு, பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும்? என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு !
ஆனால் இப்போது : கிறிஸ்துவின் தியாகம் என் ஆத்துமாவை இரட்சித்தது என்பதை அறிந்தேன்.


ஏன் வாரந்தோறும் காணிக்கைப் பையில் காணிக்கை போடவேண்டும்? என்று நான் ஆச்சரியப்பட்டதுண்டு !
ஆனால் இப்போது : உண்மையாகவே நான் கொடுப்பதினால் ஏற்படும் மட்டற்ற மகிழ்ச்சி என்ன என்பதை அறிந்தேன்.

நான் பாவத்திலிருந்த நாட்களில் பரிசுத்த வாழ்வைக் குறித்து பலமுறை ஆச்சரியப்பட்டதுண்டு !
ஆனால் இப்போது : தேவனுடைய குடும்பத்தில் அன்பரே உள்ளே வாருங்கள் என்று உங்களை வாழ்த்தி வரவேற்பதையும் நான் அறிந்தேன். ✝

# ஒன்று பாதிப்பை ஏற்படுத்தினாலும் கூட

## EVEN WHEN IT HURTS

*Bobby Wheat*



"*ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும், இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது. அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற் போயிற்று*" (எரேமியா 20 :9).

நாம் நல்ல காரணத்திற்காக எரேமியாவை "*புலம்பலின் தீர்க்க தரிசி*" என்று அழைக்கிறோம். அவருடைய நாட்களில் புலம்புவதற்குப் பல காரியங்கள் இருந்தன. அவிசுவாசமும், ஒழுக்கக் கேடும் தலை விரித்தாடின. சமூக அநீதிகள் சகஜமான ஒன்றாகக் காணப் பட்டது. முன்பொரு காலத்தில், தேவனுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் தேவனுக்கான அன்பினால் பின்னிப் பிணையப்பட்டிருந்த சமூக கட்டமைப்பு வேகமாக சீர் குலையத் தொடங்கி விட்டது. எருசலேம் முன்பிருந்தது போல் ஓர் அழகான இடமாக இல்லை. அங்கே தேவன் வாசமாயிருக்கவில்லை.மேலும், பாபிலோனியர்கள் உள்ளே வந்து எருசலேமை அழித்துப்போட வாசற்கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

எரேமியாவின் இருதலைக்கொள்ளியான சூழ்நிலை அவருடைய பிரச்சினைகளை அதிகப்படுத்தியது. அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் ஜனங்களிடம் குறிப்பாக யூதாவின் தலைவர்களிடம் அவர்களுடைய வாழ்க்கை தேவனுக்கேற்றதாய் இல்லாதபடியால், அவர்கள் மீது

தண்டனை வரவிருக்கிறது என்பதை பிரசங்கிக்கும்படி நிர்பந்திக்கப்பட்டிருந்தார். ஆனால், ஜனங்கள் அந்தப் பிரசங்கத்தைக் கேட்க விரும்பவில்லை. தேவன் கடந்த காலங்களில் அவர்களை ஆபத்துகளிலிருந்து விடுவித்தபடியால் மறுபடியும் தங்களை இரட்சிப்பார் என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். தேவாலயம் அவர் களுடைய மத்தியில் இருந்தபடியால் அவர்களுடைய நீதி நிச்சயிக்கப்பட்ட தென்றும், அவர்கள் அழிக்கப்பட தேவன் அனுமதிக்கமாட்டாரென்றும் எண்ணி னார்கள் (எரேமியா 7). எரேமியா அவர்களிடம் உண்மையைச் சொன்னபோது அவர்கள், அவரை சிறையிலடைத்துக் கொன்று போடுவதாக மிரட்டினார்கள்.

தேவனுடைய வார்த்தைகளைப் போதிப்பவர்களாகிய நாம் சிலவேளை களில் இதேவிதமான சூழ்நிலையை எதிர்கொள்கிறோம். பெரும்பாலும் இவ்விதமான எதிர்ப்புகள் வெளியிலிருந்து வருவதாக நாம் நினைக்கிறோம். ஆனால், இவ்விதமான எதிர்ப்புகள், தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கும் மக்களிடமிருந்தும் வருகிறது. சொல்லப் போனால் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால், தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று நினைத்துக் கொண்டு தங்கள் ஆத்துமாக்களை இழக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள். இன்றைய நாட்களில் கூட சிலர், பாவத்தைப் பற்றியும், நியாயத் தீர்ப்பைப்பற்றியும் சபைகளில் பிரசங்கிக்கப்பட்டால் அதைக் கேட்க விரும்பு வதில்லை. அப்படிப் பிரசங்கிக்கப்பட்டால் அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரசங்கியார்களுக்குத் தொந்தரவு கொடுப்பார்கள்.

எரேமியாவின் சூழ்நிலைகளிலிருந்து நமக்கு இரண்டு எச்சரிப்புகள் விடுக்கப்பட்டிருக்கின்றன. எருசலேம் பட்டணத்து மக்களைப்போல், வசனத்தைக் கேட்பவர்களான நாம், ஒருபோதும் இழந்துபோகாத நீதியைப் பெற்றிருக்கிறோம் என்று நம்மை நாமே தவறான பாதையில் அழைத்துச் செல்ல வேண்டாம். நாம் தேவனுடைய ராஜ்ஜியமாகிய சபையில் அங்கம் வகிப்பதால், அது நம்முடைய பாவமான நடத்தையை நியாயப்படுத்திவிடாது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் பேசி நம்மை பாவத்திலிருந்து மட்டும் தீர்க்கதரிசிகளின் (பிரசங்கியார்களின்) போதனைக்கும், எச்சரிப்புக்கும் செவி கொடுப்போம் . அவர்கள் தங்கள் வேலையைத் திறம்பட செய்ய நாம் தடையா யிருக்க வேண்டாம்.

இரண்டாவது, தேவனுடைய வார்த்தையைப் போதிப்பவர்களான நாம், நம் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போலுள்ள தேவனுடைய வார்த்தையை நன்றாக அறித்துகொள்ள வேண்டும். நம்முடைய சகோதரர்களும் சொந்தக் குடும்பத்தினரும் எதிர்த்தாலும் கூட நாம், சத்தியத்திற்கு எதிரானவை களைக் காணும்போது பாவத்திற்கு விரோதமாகவும், உபதேசப் பிழைக்கு விரோத மாகவும் பேச வேண்டும். நிச்சயமாகவே நாம் " *அன்புடன் சத்தியத்தைக் கைக் கொள்ள வேண்டும்* " (எபேசியர் 4:15). நமக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் கூட நாம் சத்தியத்தைப் பேச வேண்டும். ✝

# வேறொரு உபதேசமில்லையே

## NO OTHER DOCTRINE

*Owen D. Olbricht*

**ப**வுல் தீமோத்தேயுவை எபேசு பட்டணத்தில் வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடி சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக விட்டுவந்தார் (1 தீமோத்தேயு 1:3). பவுல் தீமோத்தேயுக்கு இரண்டாம் நிருபத்தை எழுதி, " *அநேக சாட்சிகளுக்கு முன்பாக, நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி* " என்று சொன்னார் (2 தீமோத்தேயு 2:2) அவைகளை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டியதாயிருந்தது. சத்தியத்திற்கு மாறாக மற்றவர்கள் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்காதபடி அவர்களுக்குக் கட்டளையிட வேண்டிதாயிருந்தது.

### பவுலும் மாறுபாடான உபதேசமும்

பவுல் தன்னுடைய மூன்றாவது நற்செய்திப் பயணத்தின்போது எபேசு பட்டணத்து மூப்பர்களோடு இருந்தார். இவர்கள் அந்த சபையின் தலைவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் தான் பவுல் தீமோத்தேயுவை விட்டு வந்தார். பவுல் இந்த மூப்பர்களோடு இருந்தபோது, " *நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் . உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடம் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்* " (அப். 20 :29, 30) என்று சொன்னார்.

பின்பு, பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் நிருபத்தில், " *ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்* " என்று எழுதியிருந்தார் (1 தீமோத்தேயு 4:1). பவுல் தன்னுடைய இரண்டாம் நிருபத்தில், ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்க விரும்பாத மக்களைப் பற்றி எழுதும்போது இவ்விதமாக எழுதினார். " *ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்* " ( 2 தீமோத்தேயு 4:34).

பவுலின் முதல் நற்செய்திப் பயணத்தில் செர்கியுபவுல் என்னும் அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து அவர்களிடத்தில் தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான், எலிமா என்பவன் சுவிசேஷப் பிரசங்கத்தை



எதிர்த்த போது, பவுல் அவனைப் பார்த்து, " எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந் தவனே, பிசாசின் மகனே, நீதிக் கெல்லாம் பகைஞனே, கர்த்த ருடைய செம்மையான வழி களைப் புரட்டுவதில் ஓயமாட்டா யோ? " என்று கடுமையாகச் சாடினார் (அப். 13 :10). சபைத் தலைவர்கள் இயேசுவின் செய்திக்கு எதிரானவைகளைப் போதிப்பார்களென்பது பற்றி அதிகமாகக் கவலைப்பட்டார்.

## ஏன் வேறொரு உபதேசம் கூடாது?

இயேசு போதித்தபடியே தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுவதால் நமக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படும் (யோவான் 12:49, 50). மற்றபடி கள்ள உபதேசத்தைப் பின்பற்றுகிறவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் (1 தெச. 2:12; 2 பேதுரு 2:1,2).

நாம், நம் பாவங்களிலிருந்து விடுபட்டு சுத்திகரிக்கப்பட, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால், பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தைப் பின்பற்ற வேண்டும் (யோவான் 8:31,32; 1 பேதுரு 1:22; யோவான் 16:13). இயேசு கிறிஸ்து சத்தியத்தினால் நிறைந்தவராயிருக்கிறார் (யோவான் 1:14). சத்தியம் கிறிஸ்து மூலமாய் உண்டாயிற்று (யோவான் 1:17). அவரே சத்தியமாயி ருக்கிறார்; அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6).

நமக்கு இரட்சிப்பு வேண்டுமென்றால், நாம் இயேசுவுக்கு செவிகொடுத்து (மத்தேயு 17:5) அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபிரெயர் 5:9). அவருடைய உபதேசமல்லாமல் வேறெந்த உபதேசத்தையும் நாம் உபதேசிக்கவோ, விசுவாசிக்கவோ அல்லது பின்பற்றவோ கூடாது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

" *உன்னைக் குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு இவைகளில் நிலைகொண்டிரு இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்* " (2 தீமோத்தேயு 4 :16). †

# விசுவாசமே நம்முடைய ஜெயமாயிருக்கிறது

## FAITH IS OUR VICTORY

*Randall Caselman*

" நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் " (I யோவான் 5:4)

"*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது*". (எபி. 11:1). ஒரு மொழியாக்கம் இவ்விதமாகச் சொல்கிறது. "*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் நிச்சயமும் காணப்படாதவைகளின் உறுதியுமாயிருக்கிறது*" என்று. இன்று மத உலகில் விசுவாசம் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. விசுவாசம் என்பது என்ன? எது விசுவாசமல்ல என்பது பற்றி பரவலாகப் பேசப்படுகிறது. இப்பாடம் பற்றி நாம் புரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

### தேவனைப்பற்றிய அறிவு தான் விசுவாசம்

தேவனை அறியாமல் வேதாகம விசுவாசம் இருக்க முடியாது. அறியாமை என்பது விசுவாசத்திற்கு எதிர்மறையானதும், எதிரானதுமாக இருக்கிறது. அறிவின் விளைவு தான் நம் விசுவாசம். "*ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்*" (ரோமர் 16:17). அவர் உண்டென்று நாம் விசுவாசிக்க வேண்டுமென்று (எபி. 11:6) சொல்கிறது. தேவன் மீது விசுவாசமில்லாமல் உண்மையான, வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வது என்பது முடியாத காரியம். அதை முயற்சி செய்து கூடப் பார்க்க வேண்டாம்.

### மனரீதியாக ஏற்றுக் கொள்வது தான் விசுவாசம்

விசுவாசம் என்பது தேவனை தேவனாகவும், தேவன் தான் எல்லாவற்றையும் விட உயர்ந்தவர், இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவர், ஜீவனைத் தருபவர், இரட்சிப்பை அருளுபவர் என ஒத்துக் கொள்வது. "*ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார்* " (ஆதி. 1:1) " *அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்* " (அப். 17:28) *தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* " (யோவான் 3:16). அநேகர் தேவனை அறிந்திருக்கிறார்கள். ஆனால், அவரை எல்லாவற்றையும் விட மேலானவர், சர்வ அதிகாரம் படைத்தவர் என்பதை ஏற்றுக்கொள்ளத் தவறுகிறார்கள்.

### தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைப்பது தான் விசுவாசம்

இங்கே தான் நம்மில் அநேகர் தவறுகிறோம். நமக்கு வேதாகமம் தெரியும், நாம் நம் உதடுகளினால் தேவனை சர்வ அதிகாரம் உடையவர் என்று ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நம் இருதயங்களினால் அவரை நம்புகிறோமா என்பது குறித்து நிச்சயமில்லாமல் இருக்கிறோம். "*அவர்கள் தங்கள் உதடுகளினால் என்னை கனப்படுத்துகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருக்கிறது*" (மத். 15:8). ஆம், நோவாவின் இரட்சிப்பு, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள், இஸ்ரவேலின் விடுதலை, தாவீதின் நம்பிக்கை, எலியா காகங்களால் போஷிக்கப்பட்டது, கலிலேயக் கடல் அமர்த்தப்பட்டது பற்றி எல்லாம் நமக்குத் தெரியும், ஆனால், தேவன் நம் ஜீவியங்களில் கிரியை செய்ய அவரை அனுமதிப்பதில் நாம் குறைவுபடுகிறோம். விசுவாசம் என்பது நமது அன்றாட வாழ்க்கையில் தேவனை நம்புவதாகும். நண்பர்களே, தேவன் நம்முடைய எல்லாவற்றையும் முடிவு பரியந்தம் பார்ப்பார். எனவே, அவரை நம்புங்கள். "*அவர் தம்மைத் தேடுகிறவர் களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்*" (எபி. 11:6).

### கீழ்ப்படிவது தான் விசுவாசம்

அரைகுறையாக வேதாகமத்தை வாசிப்பவர் கூட விசுவாசமனது, தேவ சித்தத்தோடு ஒருவன் இசைந்து செயல்படாதவரை அது முழுமை பெறாது என்பதை அறிந்திருப்பார். விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேலான பலியை செலுத்தினான் (எபி. 11:4). விசுவாசத்தினாலே ஏனோக்கு தேவ னோடு நடந்தான் (எபி. 11:5). விசுவாசத்தினாலே நோவா பேழையை உண்டு பண்ணினார் (எபி. 11:7) விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் அழைக்கப்பட்ட போது கீழ்ப்படிந்தார் (எபி. 11:8). *நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக் கப்பட்டிருக்கிறோம்* (எபே. 2:8). கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார். ஆனால், எல்லோருமே இரட்சிக்கப்படமாட்டார்கள். உலகம் முழுவதற்குமான இரட்சிப்பு என்று வேதாகமத்தில் எதுவும் போதிக்கப்படுவதில்லை. எல்லோரும் என்ன செய்யும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்களோ அதையே நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும் - இவ்விதம் தேவனு டைய சித்தத்திற்கு நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும்.

இதை இயேசு சிறப்பாகச் சொன்னார். "*நான் என் பிதாவின் சித்தத்தைச் செய்ய வந்தேன்*". யாக்கோபு இப்படியாகச் சொல்கிறார். "*கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது*" (யாக். 2:17). பிசாசுகள் தேவனைப் பற்றி அறிந் திருக்கின்றன. அத்தோடு தேவனை எல்லாவற்றையும் விட மேலானவராக ஒத்துக் கொள்கின்றன. தேவனுடைய வார்த்தையில் அவைகளுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், தேவனுடைய கற்பனைகளை அவைகள் கைக்கொள்வதில்லை, அவை களுக்குக் கீழ்ப்படிவதுமில்லை, இன்னும் நறுங்குண்ட இருதயமுமில்லை. நாம் வேதாகமத்தை வாசித்துவிட்டு, நம் விசுவாசம் செயல்படுகின்ற விசுவாசமாக இருக்கிறது என்பதைக் காணாமல் இருக்க முடியுமா? "*இயேசுவானவரே கிறிஸ்து*

*என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"* (I யோவான் 5:1,3,4).

**பாவகுற்றத்தின் மீதான நம் ஜெயம் விசுவாசமாயிருக்கிறது**

*"அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்"* (அப்போஸ்தலர் 26:18).

**சோதனையின் மீதான நம் ஜெயம் விசுவாசமாயிருக்கிறது**

*"எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாகவும் நில்லுங்கள்"* (எபேசியர் 6:16)

**அறியாமையின் மீதான நம் ஜெயம் விசுவாசமாயிருக்கிறது**

*"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்"* (II தீமோத்தேயு 3:15)

**பொறுமை இல்லாமையின் மீதான நம் ஜெயம் விசுவாசமாயிருக்கிறது**

*"உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்"* (யாக்கோபு 1:3).

**ஜெபத்தில் நம் ஜெயம் விசுவாசமாயிருக்கிறது**

*"அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது"* (யாக்கோபு 1:6; 5:15,16)

**மரணத்தின் மீதான நம் ஜெயம் விசுவாசமாயிருக்கிறது**

*"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* (மாற்கு 16:16). *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"*; (யோவான் 3:16) *உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்* (I பேதுரு 1:9).

ஜெயம் நம்முடையது. தேவனுக்கு ஸ்தோத்திரம். இப்படிப்பட்ட வெற்றியுள்ள விசுவாசம் கொண்டவர்களாக நாம் இருப்போமானால், அது உங்களுடைய வாழ்விலும் என்னுடைய வாழ்விலும் எப்படிப்பட்ட மாற்றம் தரும் பாருங்களேன்! நான் இப்படிப்பட்ட விசுவாசத்தை வாஞ்சிக்கிறேன். அப்படியானால், நீங்கள்? ✝

# மார்த்தாளா அல்லது மரியாளா

## MARTHA OR MARY

*Bonnie Rushmore*

நீங்கள் மார்த்தாளா அல்லது மரியாளா? லூக்கா 10:38,42 வசனங்கள் இயேசு கிறிஸ்து மார்த்தாளுடைய வீட்டிற்குப் போனதைப் பதிவு செய்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் மார்த்தாள் சமையல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். ஆனால், மரியாளோ இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவரிடத்தில் வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாள் இயேசுவினிடத்தில் போய் எல்லா வேலைகளையும் தான் தனியாகச் செய்வதாகவும், மரியாளைத் தன்னிடத்தில் அனுப்பும்படியாகவும் கேட்டுக் கொண்டாள். சமையல் வேலையில் மார்த்தாளுக்கு உதவிசெய்ய மரியாளை அனுப்புவதற்குப் பதிலாக, மார்த்தாள் தேவையில்லாத காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததற்காக அவளை லேசாகக் கடிந்து கொண்டார். "*மார்த்தாளே, மர்த்தாளே நீ அநேக காரியங்களைச் குறித்துக் கவலைப் பட்டுக் கலங்குகிறாய், தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுபடாதநல்லபங்கைத்தெரிந்துகொண்டாள்* " என்று இயேசு சொன்னார் (லூக்கா 10:41, 42). மார்த்தாள் சரீரப்பிரகாரமான காரியங்களில் கவலையுடைவளாகக் காணப்பட்டாள். ஆனால், மரியாளோ ஆவிக்குரிய காரியங்களில் கவனமாயிருந்தாள். மரியாள் ஆவிக்குரிய காரியங்களில் அக்கறை உடையவளாக இருந்தபடியால் அவளை இயேசு பாராட்டி விட்டு, மார்த்தாள் சரீரப்பிரகாரமான காரியங்களில் கவனம் செலுத்தியதற்காக அவளை லேசாகக் கடிந்துக்கொண்டார்.

இயேசுகிறிஸ்து, மனித இனத்தின் சரீர நலனில் அக்கறை உடையவராக இருந்தார் என பல வசனப்பகுதிகள் காட்டுகின்றன. அவர் வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்தினாரென்றும், பசியிலிருந்தவர்களைப் போஷித்தாரென்றும், இன்னும் பல காரியங்களையும் நாம் சுவிசேஷப் புத்தகங்களில் காண முடியும் (மத்தேயு 8:1-4; லூக்கா 6 :17-19; மாற்கு 6:35-44) பல தனிப்பட்ட நபர்கள் இயேசு கிறிஸ்து செய்த அற்புத அடையாளங்களினால் அவரை விசுவாசித்தார்கள் (யோவான் 2:24; யோவான் 20:30, 31 வசனங்கள் எதற்காக இயேசு இந்த அற்புதங்களையெல்லாம் செய்தார் என்பதற்கான காரணத்தைக் கொடுக்கிறது. " *இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது* ". இயேசு தம்முடைய தெய்வீகத்தை நிரூபிப்பதற்காக வியாதியஸ்தர்களைச் சுகமாக்கினார், பசியாயிருந்தவர்களைப் போஷித்தார். இயேசு தம்முடைய

அப்போஸ்தலர்களுக்கு சுகமாக்கும் வல்லமையையும், பிசாசுகளைத் துரத்தும் வல்லமையையும் கொடுத்தார் (மத்தேயு 10:1,8). மேலும், தேவையில் இருப்பவர்களுக்கு உதவாதவர்கள் தமக்கு சீஷர்களாக இருக்க முடியாது என்று சொன்னார் (மத்தேயு 25 : 34-56).

தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதவாக்கியங்கள், இல்லாதவர்களிடத்தில் நாம் காட்டும் அக்கறையைக் கட்டாயமாக்குகின்றன. யாக்கோபு ஆசிரியர் "*திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது* ". (*யாக்கோபு 1:27) என்று சொல்லுகிறார்.* இங்கே விசாரிப்பது என்பது தேவையில் இருப்பவர்களிடத்தில் போய் நன்றாய் இருக்கிறீர்களா? என்று வெறுமனே நலம் விசாரிப்பதல்ல. மாறாக, அவர்களுக்கு உதவுவதைத்தான் போதிக்கிறது. உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் உதவி செய்ய வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1 தீமோத்தேயு 5:3-13 வசனங்களில் தீமோத்தேயுவிடம் விதவைகளை விசாரிக்கும்படி அறிவுறுத்துகிறார். முதிர் வயதிலுள்ள விதவைகளைப் பொறுத்தவரை, அவர்களை விசாரிக்க குடும்பத்தினர் இல்லாத பட்சத்தில் சபையானது அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அவர்களை விசாரிக்க வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறது.

மேற்சொல்லப்பட்டவைகள், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் தேவையில் இருந்தவர்களுக்கு எப்படி உதவி செய்தார்கள் என்பதற்கான சில உதாரணங்கள். இருந்தபோதிலும், வேதாகமத்தில் தேவையில் இருப்பவர்களுக்கு இரக்கம் காட்டும் ஒவ்வொரு சம்பவமும் கிறிஸ்தவ வாழ்க்கையின் உபபொருளாக இருக்கிறது. இதுவே, கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கமல்ல. மாறாக, இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களின் நோக்கத்தை யோவான் பதிவு செய்திருப்பதுபோல் (யோவான் 20 :30,31 ; 2:24). நாம் விசாரிப்பதின் நோக்கமும் மற்றவர்களுக்குச் சரீரப் பிரகாரமான உதவிகளைச் செய்வதின் மூலம் நம்முடைய அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களுடைய ஆத்துமாவைக் குறித்து நாம் அக்கறைப் படுகிறோம் என்பதற்காகத்தான் இருக்க வேண்டும்.

இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவும் தாம் வந்ததாக இயேசு போதித்தார் (லூக்கா 19 :10). இயேசு பரமேறுவதற்கு முன்பாக மனுஷர்களை சீஷர்களாக்குவதற்கான கட்டளையை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்துவிட்டுத்தான் சென்றார் (மத்தேயு 28 :19, 20; மாற்கு 16 :15, 16). அபோஸ்தலர்கள் அற்புத அடையாளங்களைச் செய்து தேவ வசனத்தை உறுதிப்படுத்தினார்கள். (மாற்கு 16 :20). அவர்கள் ஜனங்களைப் போய் சந்தித்து விசாரித்து அவர்களின் சரீரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அல்ல, அவர்களுடைய நோக்கம் இரட்சிப்பின் வழியை ஜனங்களுக்கு அறிவிப்பதாகத் தான் இருந்தது. அவர்கள் பசியாயிருந்தவர்களைப் போஷித்ததும், வியாதியஸ்தர்களைச் சுகமாக்கியதும் ஜனங்களைப் பற்றிய ஆத்தும அக்கறையில் தான்.

இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த ஊழியம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். அதாவது, கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கும் பொருந்தும். நாம் இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவும் முதலிடம் கொடுக்க வேண்டும். நாம் மற்றவர்களுடைய சரீரத் தேவைகளைச் சந்திப்பதைவிட, இழந்து போன ஆத்துமாக்கள்மீது அதிகமாக அக்கறைப்பட வேண்டும்

நற்கிரியையும், சுவிசேஷமும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்ல முடியும். ஆயினும், நம் மனநிலையைக் குறித்து ஜாக்கிரதையாக இருந்து திக்கற்றவர்கள், வறுமையில் வாடுபவர்கள், இயற்கைச் சீற்றங்களினால் வீடுகளை இழந்தவர்கள் போன்றோரின் சரீரத் தேவைகளைச் சந்திக்கும் போது, நம் பிரதான நோக்கம் அவர்களுடைய ஆத்துமாவை ஆதாயப்படுத்துவதாகத் தான் இருக்க வேண்டும். மார்த்தாள் சரீரத்திற்குத் தேவையான ஆகாரத்தைத் தயார் செய்வதில் தான் அதிக அக்கறையுள்ளவளாக இருந்தாள். ஆனால், மரியாளோ ஆவிக்குரிய சரீரத்தைப் போஷிப்பதில் அக்கறை உள்ளவளாக இருந்தாள். ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு சேவை செய்யும் போது ஆவிக்குரிய காரியங்களில் அதிக அக்கறையுடைவர்களாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்களைத் தாமே சோதித்தறிய வேண்டுமென்று உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் மார்தாளா அல்லது மரியாளா?

*" தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள். நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்" என்றார் (யோவான் 18:8)* ✝

## தெய்வீக ஆறுதல்

யாரும் வரவில்லை

யாரும் அழைக்கவில்லை

யாரும் அக்கறைப்படவில்லை

அதனால் நான் கதறினேன்!

இப்போது நான் இயேசுவை கண்டுகொண்டேன்

அவர் என் மீது அக்கறைப்படுகிறார்

அவருடைய உதவியால் நான் பார்த்துக் கொள்ளப்படுகிறேன்.

இப்போது நட்பு தேவைப்படுவோருக்கு என்னால் உதவ முடியும்

ஏனென்றால் நான் அவரில் இருந்து வருகிறபடியால் அது எனக்குத் தெரியும்

என்மீது அக்கறைப்படுகிறபடியால் தேவனே உமக்கு நன்றி!

# சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக ஆயத்தமாக்கப்படுதல்

## EQUIPPED FOR WORK OF MINISTRY

*Wayne Barrier*

உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பது தான் சபையின் பணியாகும் (மாற்கு 16 :15, 16). இது ஒரு மிகப்பெரிய பணி. ஆனால், இன்றைய நாட்களில் சபையின் மூலமாக இப்பணி அவ்வள வாகச் செய்யப்படுவதில்லை. ஒவ்வொரு மாதமும் உலகம் முழுவதிலும் லட்சக் கணக்கான மக்கள் இரட்சிப்பின் செய்தியை ஒருபோதும் கேட்காமலேயே மரணத்தைத் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். சபையானது இப்பணியைச் செய்யத் தவறுவது ஏன்? இதற்கு எண்ணற்ற காரணங்களை நம்மால் கொடுக்கமுடியும். ஆனால், அநேகமாக காரணப்பட்டியலில் முதலிடத்தைப் பிடிப்பது இப்பணிக்காக நாம் ஆயத்தமாயிருக்கவில்லை என்பது தான். இந்நிலையை நாம் எப்படி மாற்ற முடியும்? எபேசியர் 4: 12-16-ம் வசனங்களில் போதிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்.

" *பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற் காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களா யிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது* ".

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதி ஒவ்வொரு கிறிஸ்தவனும் சுவிசேஷ வேலையில் தன்னை ஈடுபடுத்தினால் அதன் விளைவாக சபையானது

பலப்படுத்தப்பட்டு பக்திவிருத்தியடைந்து வளர்ச்சியடையும் என்று போதிக்கிறது. வெளிப்படையாக, இவ்வசனப்பகுதி வெறுமனே பிரசங்க ஊழியத்தை மட்டுமே குறிக்காது. ஏனென்றால், பெரும்பாலான கிறிஸ்தவர்களால் பிரசங்கிக்க முடியாது. சுவிசேஷ வேலை என்பது சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் போதிப்பதற்காக கிறிஸ்தவர்கள் தெரிந்து கொள்ளும் தனிப்பட்ட ஒரு செயலாகும். நமக்கு வித்தியாசமான வாய்ப்புகள், தன்மைகள், பண்புகள், பலங்கள் இருக்கின்றன. நான் தெரிந்து கொண்டிருக்கிற செயலில் நம் முழுத்திறனையும் செலுத்த அல்லது அந்தச் செயல்பாட்டை அதிகரிக்க நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

சபையின் மூலமாக சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியானது ஏன் அவ்வளவாகச் செயல்படுவதில்லை? ஒவ்வொரு கிறிஸ்தவனும் சுவிசேஷ வேலையில் தன்னைத் திறம்பட ஈடுபடுத்தியிருந்தால் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு வருக்கும் இன்றைய நாட்களுக்குள்ளாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருக்கும். இப்பணிக்கு பரிசுத்தவான்கள் ஆயத்தமாக்கப்பட சுவிசேஷம் அறிவிக்கப் பட்டிருக்கும். இப்பணிக்கு பரிசுத்தவான்கள் ஆயத்தமாக்கப்பட வேண்டுமென்று வேத வசனம் சொல்லுகிறது. ஆயத்தமாக்கும் பணியானது பிரசங்கியார்களால், மூப்பர்களால், போதகர்களால் செய்யப்படவேண்டும். ஆயத்தப்படுத்துதல் என்பது தீர்க்கதரிசுளும், அப்போஸ்தலர்களும் எதைப் போதித்தார்களோ அதை அறிந்து கொள்வதின் விளைவாயிருக்கிறது. சகோதரர்கள் சரியாக ஆயத்தமாக்கப் படுவதில்லை, அதன் காரணமாக, அவர்கள் சுவிசேஷ வேலைகளில் சோபிக்க முடிவதில்லை, மாறாக, நாம் இந்த எளிய வேதாகம மாதிரியைப் பின்பற்ற, நம்மை நாம் ஆராய்ந்து பார்த்து, தேவைக்கேற்ப, மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சபைக்குள்ளாகவும் வேதாகம அடிப்படையிலான பயிற்சிகளைக் கொடுத்து சுவிசேஷ வேலைக்காக அங்கத்தினர்களை ஆயத்த மாக்க வேண்டும். இப்படி நடந்தால் சபையானது பக்திவிருத்தியடைந்து மிகப்பெரிய வளர்ச்சி அடையும். ✝

**ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனா னால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார் (யோவான் 12:25).**

# வெளியே சொல்லாமல் வேதனைப்படுதல்

## Silently Suffering

*Ronny Crocker*

இன்றைய நாட்களில் சபை அங்கத்தினர்களில் யாரோ ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டாலோ அல்லது பக்கவாதம் ஏற்பட்டாலோ ஜெபிக்கும்படியாக நாம் நம் தகவலறிக்கையில் அதை வெளியிட்டு விடுகிறோம். புற்றுநோய் ஒருவருக்கு இருக்கிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் எல்லோரும் ஜெபிக்கும்படியாக அச்செய்தி யைப் பரப்புகிறோம். புதன்கிழமை வேதபாட வகுப்புகளில் மேலும் சில தகவல் களை ஒன்று திரட்டி அதை சபையில் தெரியப்படுத்தி ஜெபங்களை ஏறெடுக் கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சபை, பாதிக்கப்பட்ட நபர்களைப் போய் சந்தித்து அவர்களுக்கு ஆதரவாகவும், சிலவேளைகளில் பொருளாதார உதவிகளையும் செய்வதையும் காண்பது கண்கொள்ளாக்காட்சி; " *ஆதலால், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்* " (1 கொரிந்தியர் 1:26).

இருந்தபோதிலும், சில ஜெபக் குறிப்புகள் அறிவிக்கப்படும்படியாக சபைக்கு வருவதில்லை. சபை அங்கத்தினர்களின் சில சூழ்நிலைகளை சபையோடு பகிர்ந்து கொள்வது வெட்கத்திற்குரிய காரியமாகிவிடுகிறது. கிறிஸ்துவுக்குள் இருக்கும் இந்த சகோதர, சகோதரிகள் யாருக்கும் தெரியாமல் அமைதியாக, பல மாதங்களாக, பல வருடங்களாக பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆராதனைக்காக நம்மோடு கூடுகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய அலறலையும், மனக்குமுறலையும் நம்மால் கேட்க முடிவதில்லை.

கிறிஸ்துவின் சபை மூலமாக நடத்தப்படும் போதை அடிமைகள் மறுவாழ்வு திட்டத்தின் இயக்குநர் என்ற நிலையில் நாடு முழுவதிலுமிருந்து எனக்குப் பல தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மதுவுக்கு அடிமையானவர்களின் தாய், தகப்பன், தாத்தா, பாட்டி, சகோதர, சகோதரிகளின் அலறல்களை என்னால் தொலைபேசியில் கேட்கமுடிகிறது. பல ஆண்டுகளாக அவர்கள் தனியாக ஜெபித்துக்கொண்டும், தீர்வை அமைதியாகத் தேடிக் கொண்டும் இருக்கிறார்கள். போதைக்கு அடிமையானதினால் ஏற்பட்ட எதிர்மறை விளைவின் காரணமாக இந்த சகோதர, சகோதரிகள் அமைதியாக அழுது கொண்டிருப்பதைக் காண்பது மிகவும் சோகமாக இருக்கிறது.

நான் அவ்வப்போது போதை மருந்துகள் மற்றும் மதுபானத்திற்கு அடிமை யானவர்களின் நிலை பற்றி பல சபைகளில் பேசுவதுண்டு. ஒவ்வொரு முறையும் இறுதியில் ஏதாவது ஒரு அங்கத்தினர் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வந்து சபையோடு பகிர்ந்துகொள்ள வெட்கப்படுகிற காரியத்தைக் குறித்து கண்ணீர் மல்க என்னோடு பேசுவார்.

சகோதரரே, ஞாயிற்றுக்கிழமை காலையில் உங்கள் அருகிலிருக்கும் ஆத்துமாவைக் குறித்து அக்கறையாயிருங்கள். ஒருவேளை அவர்களில் யாரோ ஒருவர் போதை பழக்கத்திற்கு அடிமையாகி அமைதியாக சித்ரவதைப்பட்டுக் கொண்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்களை நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே சீர் பொருந்தப்பண்ணுங்கள். இவ்விதமாக நாம் கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்ற முடியும்.

" *சகோதரரே ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர் களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர் பொருந்தப் பண்ணுங்கள், நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கை யாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்* " (கலாத்தியர் 6:1,2).

" *ஆதலால், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்* " (1 கொரிந்தியர் 12:26). ✝

## நம்முடைய கொடுத்தல் எந்த வகை?

1. விருப்பத்தோடு கொடுத்தவர் - ஆபிரகாம் (ஆதி 22:1-19)
2. மிகவும் அதிகமாக, குறைவிலும் கொடுத்தவர்-ஏழை விதவை (மாற்கு 12:44)
3. கஞ்சத்தனமாகக் கொடுத்தவர் - சவுல் (1 சாமு 15:17-23)
4. தியாகமாகக் கொடுத்தவர் - தாவீது (2 சாமுவேல் 24:24)
5. வஞ்சித்துக் கொடுத்தவர்கள் - அனனியா, சப்பீராள் (அப். 5 :1-11)
6. உதாரத்துவமாய்க் கொடுத்தவர்கள் - மக்கெதோனியா நாட்டு கிறிஸ்தவர்கள் (2 கொரி 8:1-5; 11:8,9)
7. உள்ளதைத் தந்தவர்கள் - பேதுரு, யோவான் (அப்போஸ்தலர் 3:1-10).
8. தானாய் முன்வந்து கொடுத்தவர் - சகேயு (லூக்கா 19 :1-9)
9. பலனை விரும்பிக் கொடுத்தவர்கள் - மனுஷரால் காணப்பட விரும்புகிறவர்கள் (மத்தேயு 6:2)
10. கடமையில்லாமல் கொடுத்தவர் - நல்ல சமாரியன் (லூக்கா 10 :25-37).
11. மணக்கும்படி கொடுத்தவர்கள் - பிலிப்பு பட்டணத்து சபையார் (பிலி. 4:17,18)
12. மிகச் சிறந்ததைக் கொடுத்தவர் - தேவாதி தேவன் (யோவான் 3:16)

**இதில் எந்த வகை நம்முடைய கொடுத்தல்?**

# நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன்?

## WHY DO I BELIEVE GOD?

*Roy V. Palmer*

நடைமுறையில் அநேக ஜனங்கள் தேவனை விசுவாசிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை தேவன் இருக்கிறார் என்பது அவர்கள் இருப்பதைப் போலவே வெளிப்படையான ஒன்றாக இருக்கிறது." *தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்* " என்று வேதாகமம் சொல்கிறது (சங்கீதம் 53:1). ஒருவர் தேவனை விசுவாசிக்கக் கட்டாயமான காரணங்கள் இருக்கின்றனவா? தேவன் இல்லையென்று எண்ணிக் கொள்வது உண்மையாகவே நியாயமான ஒன்றாக இருக்கிறதா?

முதலாவது, நாம் தேவனைப் பற்றி பேசும் போது என்ன நினைக்கிறோம்? " *ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்* " என்று வேதாகமம் சொல்கிறது (ஆதி. 1:1). ஆகவே, தேவன் நம் சிருஷ்டிகராயிருக்கிறார். "*நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்* " என்று சங்கீதக்காரன் எழுதுகிறார். தேவன் நித்தியமானவர். அவர் எப்போதுமே இருந்தவர். அவர் எப்போதும் இருப்பார். தேவன் நல்லவர். அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் (சங்கீதம் 111:3). ஆனால், அவர் நம் நியாயாதிபதியும் நமக்கு பிரமாணத்தைத் தந்தவருமாயிருக்கிறார். கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ? கர்த்தர் பூமியின் கடையந்தரங்களை நியாயந்தீர்க்கிறவர் (1 சாமுவேல் 2:3,10).

கர்த்தர் நம்முடைய நியாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப் பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார் (ஏசாயா 33:22). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). தேவன் ஒளியாயிருக்கிறார் (1 யோவான் 1:5). தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:16).

ஆனால், தேவன் என்று அழைக்கப்படுகின்ற சிருஷ்டிகர், நித்தியமானவர், சர்வவல்லவர், நீதியுள்ளவர் என்பதை ஒருவர் ஏன் விசுவாசிக்க வேண்டும்? நாம் வாழ்கின்ற இந்த பிரபஞ்சம், சிருஷ்டிப்பு போன்றவைகள் தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர்

எப்போதுமே இருந்து வருவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் ஒன்றுமே இல்லாத நேரத்தில் ஏதோ ஒன்று (உலகம், மனிதன், மற்றும் இன்று உலகில் இருப்பவைகள் எல்லாம்) ஒன்றுமில்லாமையில் இருந்துதான் வந்திருக்க வேண்டும் என்றாகிவிடும். ஆனால், எந்த மனித அனுபவமோ, மனித விளக்கமோ ஒன்றுமில்லாமையில் இருந்து ஏதோ ஒன்று வந்தது என்று ஒத்துக்கொள்ளாது.

தேவனை விசுவாசிப்பதற்கான இரண்டாவது காரணம், உலகத்திலும், பிரபஞ்சத்திலும் ஒழுங்கு மற்றும் அமைப்பு போன்ற உண்மை தான். ஒழுங்கு இருப்பது மறுக்க முடியாதது. பூமி, சந்திரன், சூரியன் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எண்ணற்ற அமைப்புகள் ஆச்சரியமானவைகள். இவைகளின் துல்லியத்தைப் பொறுத்தவரை எந்தக் கடிகாரத்தையும் இதனுடன் ஒப்பிட முடியாது. ஓர் அருமையான கடிகாரத்தின் சிக்கலான பாகங்கள் தானாகவே உருவாகி, தானாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு, அதை உண்டாக்கினவர் இல்லாமல் அது வேலை செய்வதை கற்பனை செய்து பார்க்க முடியுமா? அது போலத்தான் இந்த ஆச்சரியமான பிரபஞ்சம். இயற்கையின் ஆச்சரியமூட்டும் செய்முறைகள், இயற்கை விதிகளின் அற்புத செயல்பாடுகள் போன்றவை ஒரு சிருஷ்டிகர் இல்லாமல் இவைகளெல்லாம் தற்செயலாக ஏற்பட்டு, தானாகவே நீடித்திருகிற தென்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியாது.

தேவனை விசுவாசிப்பதற்கான மற்றுமொரு காரணம், மனிதனில் இருக்கும் ஒழுக்க ரீதியிலான உணர்வுதான். எதுசரி, எது தவறு எனப் பகுத்தறியும் திறமை கீழான மிருகங்களிடம் இல்லை. இது கலாச்சாரத்தினால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தாலும், அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களிடையே வேறுபட்டாலும் இது உலகெங்கும் காணப்படக்கூடிய ஓர் உண்மை தான். சில தனிப்பட்ட நபர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தாலும் கூட, எவ்வித சந்தேகமுமின்றி மனிதனுக்குள் ஓர் உலகளாவிய மனச்சாட்சி இருக்கிறது. அது ஒழுக்க ரீதியிலான பிரமாணத்தை கட்டாயப்படுத்துகிறது. அதோடு அந்த பிரமாணத்தைக் கொடுப்பவர் இருக்கிறார் என்று சாட்சி பகர்கிறது.

இந்த உலகம் இருப்பதற்கு இதை உண்டாக்குவதற்கு வல்லமை பெற்ற ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் அவசியப்படுகிறார். இவையனைத்தையும் உருவாக்கத்தக்க விவேகமுள்ள ஒருவர் அவசியப்படுகிறார். அதைப் போலவே ஒழுங்கு, அமைப்பு, உணர்வு, மனச்சாட்சி போன்றவைகளை நோக்கப்படுத்தி அதை மனிதனுடைய சுபாவத்தின் மீதும், இயற்கையின் மீதும் விதிப்பதற்கு திறன் பெற்ற ஒருவர் அவசியப்படுகிறார். அவர் தான் தேவன் என்று வேதாகமம் போதிக்கிறது. இதுவரை கற்பனை செய்த அல்லது உருவாக்கப்பட்ட காரண காரியங்களைக் காட்டிலும் வேதாகம பதில் தான் அதிக நியாயமானது. ✝

# நாம் பாசாங்கு செய்வோம்.....

## LET'S PRETEND.....

முதல் நற்செய்தி பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளிலே நாம் எருசலேமில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். நான் பிரசங்கத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தபோது, பாவத்தால் கண்டித்து உணர்த்தப்பட்டு ஆத்துமாவை இழந்துவிட்டதாக உணர்ந்தேன். பிரசங்கத்தின் முடிவில், சகோதரரே, (மன்னிக்கப்படும்படியாக) நான் என்ன செய்ய வேண்டும்? என்று சத்தமிட்டேன் (அப்போஸ்தலர் 2:37).

அப்போஸ்தலனாகிய பேதுரு, " *நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* " என்று சொன்னார் (அப்போ ஸ்தலர் 2:38).

எவ்வித வாக்குவாதமும் செய்யாமல், அந்த எளிய கட்டளைகளுக்கு நான் கீழ்ப்படிந்தேன். என் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. அதே நேரத்தில் " *இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்* " (அப்போஸ்தலர் 2:47).

இங்கே, ஆச்சரியமான உண்மை என்னவென்றால், நாம் இங்கே எதற்கும் பாசாங்கு செய்ய வேண்டிய அவசியமில்லை!

தேவனுக்குக் கீழ்ப்படிதல், பாவமன்னிப்பு, கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபைக்குள் பிறப்பு (ஞானஸ்நானம்), போன்ற எளிமையான நடைமுறைகள் எப்படி ஆரம்பிக்கப்பட்ட அந்த நாளிலே காணப்பட்டதோ, அதே நடை முறைகள் தான் இன்றும் காணப்படுகின்றன. இயேசுவின் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும், அந்த சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும், பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். உங்கள் பாவங்கள் கழுவப்படும்படியாக அவரோடு கூட ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் (அப்போஸ் தலர் 22:16). அப்பொழுது கிறிஸ்துவின் சபையிலே உங்களைச் சேர்த்துக் கொள்வதாக தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (ரோமர் 16:16). ✝

# அவருடைய நினைவில்

## IN HIS MEMORY

*Roger Johnson*

நம் தேசத்தில் வருடந்தோறும் நாட்டுக்காகத் தங்கள் இன்னுயிரைக் கொடுத்த இராணுவ வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் விதத்தில் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது. அந்நாளில் உலகப்பிரகாரமான விழாக்களும், மத சம்பந்தமான நிகழ்ச்சிகளும் நடைபெறும். வீரர்களின் தியாகத்தின் மதிப்பை உணர்ந்தவர்கள் நன்றி நிறைந்த இருதயத்தோடு நினைவு கூருவார்கள். மேலும், அந்நினைவு நாள் தேசிய விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. கல்லறைகள் அலங்கரிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்படுகிறது. இறந்து போனவர்களுக்குப் பிரியமானவர்களால் கண்ணீர் சிந்தப்படுகின்றன, இறந்து போனவர்களின் நினைவுகள் மனதை ஆக்கிரமிக்கின்றன.

தேசத்தின் முக்கிய சம்பவங்கள் மற்றும் நபர்களின் நினைவாக நாம் பல நினைவுச் சின்னங்களைக் கட்டி எழுப்பியிருக் கிறோம். மறைந்தும், நம் மனதில் வாழும் முன்னாள் ஜனாதிபதி ஆபிராகம் லிங்கனின் நினைவாக நினைவாலயம் எழுப்பப்பட்டுள்ளது. அதேபோல் தேசத்திற்குத் தங்கள் சிறப்புப் பங்களிப்பை ஆற்றிய நான்கு பேரின் முகங்களைக் கொண்ட சிலை, மலையைக் குடைந்து வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பாரீஸில் வெற்றி வளைவு, பிரெஞ்சுப் படைகளின் வெற்றியின் நினைவாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நினைவுச் சின்னங்கள் எல்லாம் மனித வரலாற்றில் அழியா முத்திரை பதித்த மனிதர்கள் அல்லது சம்பவங்களின் நினைவாக எழுப்பப்பட்டிருக்கின்றன.

வேதாகமத்திலும் நினைவு கூருதலைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேவன் இப்பூமியை மீண்டும் ஜலத்தினால் அழிக்கமாட்டார் என்பதற்கு அடையாளமாக வானத்தில் வானவில்லை வைத்தார் (ஆதியாகமம் 9: 11-6). பஸ்கா பண்டிகை, மோசேயின் மூலமாக எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்ததை நினைவுகூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது (யாத்திராகமம் 12). யோர்தான் நதியின் நடுவிலிருந்து பன்னிரெண்டு கற்களை எடுத்து அவைகளை நாட்டும்படியாக யோசுவாவுக்கு தேவன் கட்டளையிட்டார். எதற்காக வென்றால், இஸ்ரவேல் புத்திரர் யோர்தான் நதியை, வெட்டாந்தரையைக் கடந்துபோவதுபோல், கடந்து போனதை நினைவுகூரும்படியாகவும், வருங் காலத்தில் அவர்களுடைய சந்ததி தங்கள் முன்னோர்கள் தேவனால் யோர்தானைக் கடந்துபோனதை நினைவுகூரும் விதத்திலும் அக்கற்கள் அங்கே நாட்டப்பட்டது.

ஆனால், எல்லா நினைவு கூருதல்களிலும், அதன் மேன்மை மற்றும் முக்கியத்துவத்தில் தனித்து

நிற்பது கர்த்தருடைய பந்திதான். இப்பந்தியானது இயேசுவால், தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே எருசலேமில், தம்முடைய சீஷர்களோடு மேல் வீட்டிலே இருந்தபோது ஏற்படுத்தப்பட்டது. "*அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பணம் பண்ணினார்கள் அப்பொழுது அவர் அவர்களை நோக்கி ; இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்ஜியத்தில் நவமான ரசத்தைப்*



*பானம் பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழ ரசத்தை இனி நான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* " என்றார் (மாற்கு 14:22-25)

வேதவசனங்களில் இந்த நினைவு கூருதலுக்குப் பல்வேறுபட்ட பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 11:21-ல் " *இராப்போஜனம்* " என்றழைக்கிறார். இதன் மூலம் பவுல் இராப்போஜனத்தை ஏற்படுத்தினவரே கர்த்தர் தான் என்பதை உறுதிப்படுத்தினார். பவுல் 1 கொரிந்தியர் 10:21ல், " *கர்த்தருடைய போஜனபந்தி* " என்று குறிப்பிடுகிறார். இப்படிக் குறிப்பிடும் போது, அவர் பாத்திரத்தைக் குறிப்பிடாமல், பாத்திரத்தில் பரிமாறப்படுகிற பொருளைக் குறிப்பிடுகிறார். 1 கொரிந்தியர் 10:16 ல் "*ஐக்கியம்*" என்கிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ஐக்கியத்தின் பொருள் நெருக்கமாயிருப்பது. இது கிறிஸ்துவின் இரத்தத்தோடும், சரீரத்தோடும் ஐக்கியமாகும் நேரத்தைக் குறிக்கிறது. "*அப்பம் பிட்குதல்* " என்பது ஒருவிதமான மொழிநடையாகும் (அப்போஸ்தலர் 2:48). "*அப்பம் பிட்டுதல்* " என்பது சில வேளைகளில் பொதுவான போஜனத்தையும் குறிக்கும், சில வேளைகளில் கர்த்தருடைய பந்தியையும் குறிக்கும். அப்போஸ்தலர் 20-ம் அதிகாரத்தில் அப்பம்பிட்குதல் என்பது இரண்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது -7ம் வசனம் கர்த்தருடைய பந்தியைக் குறிக்கக்கூடியதாகவும் , 11 ம் வசனம் பொதுவான போஜனத்தைக் குறிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. சில மத அமைப்புகள் இந்நிகழ்வை திருப்பலி என்றும் சடங்காச்சாரம் என்றும் அழைக்கிறார்கள்.

இயேசு பந்தியை ஏற்படுத்தின போது அப்பத்தை ஆசீர்வதித்து அதைப் பிட்டு, தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். மேலும், "*நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமா யிருக்கிறது*" என்றார் (மத்தேயு 26:26) " *பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக் காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக் கைக்குரிய என்னுடைய இரத்தமாயி ருக்கிறது* " (மத்தேயு 26 :27,28) என்றார். இங்கே இயேசு தம்முடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடை யாளமாக வைக்கப்பட்டிருக்கிற அப்பத் தையும், திராட்சரசத்தையும் குறிப்பிடு கிறார். இந்த அப்பமும், திராட்ச ரசமும் உண்மையான சரீரமாகவோ, இரத்த மாகவோ மாறினது என்று வேதத்தில் எங்குமே இல்லை. ஆனால், சிலர் அவ்விதமாகப் போதிக்கிறார்கள். வேதம் அப்படிப் போதிக்கவில்லை. ✝

# நினைவில் கொள்ளுங்கள்

1. ஒருவர் தவறாகப் போதிக்கப்பட்டு , சரியாக ஞானஸ்நானம் பெற முடியாது (ரோமர் 10:17; 6:17).
2. ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு, சரியாக ஆராதிக்க முடியாது (ரோமர் 6:34; அப்போஸ்தலர் 2:42).
3. ஒருவர் தவறாக ஆராதித்துக்கொண்டு சரியாக வாழ முடியாது (யோவான் 4:2–24).
4. ஒருவர் தவறாக வாழ்ந்து கொண்டு சரியாக மரிக்க முடியாது (மத்தேயு 25:31–41).
5. ஆகவே, ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுவிட்டு சரியாக மரிக்க முடியாது.

என் நண்பரே, நீங்கள் எப்படி? வேதாகம அடிப்படையிலான ஞானஸ் நானத்திற்கு நீங்கள் உங்களை ஒப்புக்கொடுத்து விட்டீர்களா? வேத வசனத்தின் வெளிச்சத்தில் காரியங்களைப் புரிந்து கொள்ளுங்கள். பலர் செய்கிறது போல, காலங்காலமாக நீங்கள் செய்த தவறுகளுக்கு விளக்கம் கொடுக்க முற்படாதீர்கள். உள்ளப் பூர்வமாக சுவிசேஷ வசனங்களுக்கு கீழ்ப்படியத்தக்க ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யும்போது தான், அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கெள்ள முடியும்.

# ஜனங்கள் எதற்காகக் கொடுக்கிறார்கள்?

## WHY DO PEOPLE GIVE?

*Jerry . A. Jenkins*



பலர் கொடுக்கிறார்கள், ஏனென்றால், அவர்கள் அதை சரியானதாகவும், ஒழுக்க நெறியாகவும் உணர்கிறார்கள். சிலர் சுயநலத்தை மையப்படுத்திக் கொடுக்கிறார்கள். சிலர் தன்னலமற்ற நோக்கத்துடன் பிறர் நலனுக்காகக் கொடுக்கிறார்கள். சுயநல நோக்கத்தோடு கொடுக்கிறவர்கள், சபையில் தங்கள் பெயர் பெருமையாக அறிவிக்கப்பட வேண்டுமென்பதற்காகவும், சபை அறிவிப்புப் பலகையில் தங்கள் பெயர் கொட்டை எழுத்துக்களில் தெரிய வேண்டுமென்பதற்காகவும், தங்கள் அன்பளிப்புகளுக்கு மக்கள் மத்தியில் ஓர் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவும் கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுக்கிறவர்கள் மற்றவர்களுடைய பாடுகளைப் பற்றி சற்றும் அக்கறை இல்லாதவர்கள். பொதுவாக, இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காணிக்கைப் பெட்டியில் காணிக்கை போடுபவர்களல்ல, மாறாக சிறப்புக் கூட்டங்களில் தங்கள் பெயர் பெரிதாகப் பேசப்பட வேண்டுமென்பதற்காக அதிகமாகக் கொடுக்கிறவர்கள்.

ஓர் ஆய்வறிக்கையின்படி, பலர், சில பொருளாதார நன்மைகளுக்காக நன்கொடைகளை கொடுப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. வருமான வரிச் சலுகைகளுக்காகவும், வேலை வாய்ப்புகளைப் பிரகாசப்படுத்திக் கொள்வதற்காகவும் நன்கொடைகளை வாரி வழங்குவதாக அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. பெரும்பாலும் இந் நோக்கம் மக்களுடைய அங்கீகாரம், பிரதி உபகாரம், சுய நலத்திற்காகக் கொடுக்கும்போது கிடைக்கக்கூடிய திருப்தி, மாரியதை, கடமை மற்றும் குற்ற உணர்வுகளிலிருந்து நிம்மதி போன்றவைகளை உள்ளடக்கியதாகும்.

மற்றவர்கள்மீது கொண்ட சுய நலமற்ற அக்கறையினால் தூண்டப்பட்டவர்கள், மற்றவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதைப் பகிர்ந்து கொள்வார்கள். பாதிக்கப்பட்டவர்களுடைய மனச் சோர்வைப் போக்க சுயநல மற்றவர்களுக்கு விருப்பம் இருக்கும். இவர்களுக்குக் கிடைக்கும் பலன் சரியானது தான்.

சிலர் தங்களுக்கு வருமானம் அதிகமாகக் கிடைத்தாலும் காணிக்கைப் பை தங்களுக்கு முன்பாக நீட்டப்படும் போது குறைவாகவே கொடுக்கிறார்கள் அல்லது கொடுப்பதேயில்லை. சிலர், ஏன் கொடுக்கக்கூடாது என தீர்மானிக் கிறார்கள்? உண்மையில் ஜனங்கள் கொடுக்கத் தவறுவதற்கான காரணங்களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. சரியாகக் கொடுக்காதவர்களைப் பற்றிய ஓர் ஆய்வறிக்கை அதற்கான பல தடைகளைப் பட்டியலிடுகிறது. சிலர், கொடுக்கப்படும் பணம் சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லை என நினைக் கிறார்கள். சிலர் பணம் செலவழிக்கப்படுகிற விதத்தைப் பார்த்து வெறுப்படைகிறார்கள். சிலருக்கு பணசெலவு சம்பந்தமான போதுமான தகவல்கள் கிடைப்பதில்லை என்கிற குறை இருக்கிறது. இப்படிப்பட்ட மனநிலை கொண்டவர்கள் கொடுக்காமலிருப்பதால், இவர்களுடைய நம்பிக்கையை அதிகப்படுத்த பண வரவு, செலவுகளில் சபை வெளிப்படைத் தன்மையுடனும், பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

சிலர், தாங்கள் கொடுக்கும்படி வற்புறுத்தப்படுவதால் கொடுப்பதில்லை. தேவன் தம்முடைய பிள்ளைகள் மனப்பூர்வமாகக் கொடுக்க வேண்டுமென்று தான் வலியுறுத்துகிறார். அவர், நாம் கொடுத்தே ஆக வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில்லை. வாரத்தின் முதல்நாள் தோறும் வருமானம் உடையவர்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியைத் தேவனுடைய வேலைகள் செய்யப்படும்படியாகக் கொடுக்க வேண்டுமென்று தான் கட்டளையிடுக்கிறார் (1 கொரிந்தியர் 16:1,2).

காணிக்கைப் பையில் சிலர் காணிக்கை போடாமலிருப்பதற்கான எதிர்மறையான காரணங்கள் : 1. பொறுப்பை மறுப்பதாகும். " *சிலர், எனக்குக் கொடுப்பதற்குப் போதுமான அளவு பணமில்லை* ". எனவே தேவனுடைய வேலைக்கென்று தனிப்பட்ட முறையில் கொடுப்பதற்கு நான் பொறுப்பாளியல்ல என்ற தட்டிக் கழிக்கிறார்கள். 2. தேவையை மறுப்பது. " *நான் கொடுக்காததினால் எந்த வேலையும் தடைபடுவதில்லை* ". எனவே, தொடர்ந்து நான் கொடுப்பதற்கான தேவையில்லை. 3. காணிக்கையை விட மேலான ஒன்றிற்குத் தன் விருப்பத்தைத் திருப்புதல், " *எனக்கு முக்கியம்*

*எனது குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது தான். தனக்கு மிஞ்சினது தான் தர்மம்"* என்ற மனபாங்கு.

இக்கட்டுரையை படித்துக் கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்கும் என் வேண்டுகோள் என்னவென்றால், மேற்சொல்லப்பட்ட கொடாமலிருப்பதற்கான சாக்குப்போக்குகளை அலசிப் பார்த்து, கொடுப்பதினால் உண்டாகும் மகிழ்ச்சியைக் குறித்து ஆழ்ந்து யோசிக்க வேண்டும் என்பதாகும்.

மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். வாரியிறைத்தான் ஏழைகளுக்குக் கொடுத்தான். அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும் (2 கொரி. 9:8-9). ✝

- அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். [II கொரி. 9:7]

- அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூராண சந்தோஷத்தினாலே மிகுந்த உதவத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும், நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள் [II கொரி. 8:2, 5]

# கஷ்டங்கள் இயல்பான வாழ்க்கையின் ஓர் அங்கம்தான்

## DIFFICULTIES ARE PART OF NORMAL EXISTENCE

*Ronald D. Bryant*

**வா**ழ்க்கை என்பது ரோஜா மெத்தைகளால் ஆனதல்ல. உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ அவைகளையெல்லாம் நீங்கள் செய்யலாம். நீங்கள் எவை களையெல்லாம் நாடவேண்டுமோ, தேடவேண்டுமோ அவைகளை யெல்லாம் நீங்கள் தேடலாம். இருந்தபோதிலும், வாழ்க்கைக்குண்டான கஷ்டங்கள் இருந்து கொண்டு தான் இருக்கும். சில கஷ்டங்கள் மற்றவர்களுடைய தவறான தெரிந்து கொள்ளுதலினால் நமக்கு வரும். சில கஷ்டங்கள் நம்முடைய தவறான தெரிந்து கொள்ளுதலின் விளைவுகளினால் நமக்கு ஏற்படுகிறது. சில தொந்தரவுகள் கோணலும், மாறுபாடுமுள்ள சந்ததியின் நடுவே நாம் வாழ்வதின் விளைவாக நமக்கு வந்து விடுகிறது. நமக்குள்ளிருந்தும் கூட சில வேளைகளில் பிரச்சனைகள் துளிர்விடுகிறது. சில வேளைகளில் நாம் கோபப்படுகிறோம், கவலைப்படுகிறோம், பயப்படுகிறோம், சோர்வடைகிறோம் அல்லது பெலவீனத்தோடு போராடுகிறோம். நம் கஷ்டங்களின், மன அழுத்தத்தின் நிலை அல்லது அளவு வேறுபடலாம். ஆனாலும், இவைகளெல்லாம் நமக்கு பொதுவானவைகள் தான்.

நம் கஷ்டத்திற்கு தேவன் காரணரல்ல. ஆனால், தம்முடைய பிள்ளைகள் அவைகளை அனுபவிப்பதற்கு அனுமதிக்கிறார். ஏன் அப்படி? அதற்குப் பல பதில்களைக் கொடுக்கமுடியுமென்றாலும் கூட, அவைகளுள் பிரதானமானது நாம் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறோமென்றும், தன்னிறைவு பெற்றிருக்கிறோமென்றும் நினைக்க உந்தப்படுகிறோம். இருந்தபோதிலும், தேவை யையும், வறுமையையும் நாம் நேருக்கு நேர் எதிர்கொள்ளும் போது தான், தன்னிறைவு என்னும் முகத்திரையைக் கிழித்தெறிந்து நம்மை நாமே ஒப்புக் கொடுத்து எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற அவரைத் தேடுவோம்(அப்போஸ்தலர் 17 :25).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பிரச்சனைகளே இல்லாத ஓர் வாழ்க்கை யல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம். ஆனால், அது நம்முடைய பெல வீனங்களோடும், நம் மதியீனமான தெரிந்து கொள்ளுதலோடும் வாழ்ககை யின் ஏற்றத்தாழ்வில், கடினமான வேளைகளின் மத்தியில் வாழக் கற்றுக் கொள்வ தாகும். மேலும், வாழ்க்கையின் நஷ்டமான வேளைகளின் மத்தியிலும் உறுதி யான அடையாளத்துடனும், தெளிவான நோக்கத்துடனும் வாழ்வதே கிறிஸ்த வனின் அடையாளம். தேவபெலனால் அவன் தேவனோடு கொண்டிருக்கும் உறவையும், அவர் ராஜரீகம் பண்ணுகிறார் என்கிற உணர்வையும் உள்ளடக்கி யதாகும். ஒரு கிறிஸ்தவனின் நோக்கம், சூழ்நிலைகள் என்னவாக இருந்தாலும், எப்படிப்பட்ட கஷ்டங்களிருந்தாலும் தேவனை அறிந்து அவரைக் கனப்படுத்தும் செயல்திட்டத்துடன் வாழ்க்கையை எதிர்கொள்வதாயிருக்க வேண்டும். ✝





# " நான் சபைக்கு கட்டாயம் போக வேண்டுமா? "

## DO I HAVE TO " GO TO CHURCH? "

*Steve Higginbotham*

இப்படிப்பட்ட கேள்வியை எப்போதாவது யாராவது கேட்டிருக்கிறார்களா? காலங்காலமாக அடிக்கடி ஜனங்கள் என்னிடம் கேட்கும் கேள்வி, சபையில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் நான் போக வேண்டுமா? அதாவது, நான் ஞாயிற்றுக்கிழமை இரவோ, அல்லது புதன்கிழமை இரவோ போகாமலிருந்தால் அது தவறா? ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்கு நான் உண்மையாகப் போகும் போது மற்ற நேரங்களில் நான் போக வேண்டியதென்ன? என்கிறார்கள்.

நல்லது. என்னுடைய , சில கேள்விகளோடு அக்கேள்விகளுக்கு பதிலளிக்க என்னை அனுமதியுங்கள்.

- ❖ *நீங்கள் உங்கள் குழந்தைகளை கட்டித்தழுவி முத்தமிட வேண்டுமா?*
- ❖ *நீங்கள் உங்கள் மனைவியின் பிறந்த நாளை நினைவில் கொள்ள வேண்டுமா?*
- ❖ *நீங்கள் வேலையிலிருந்து தாமதமாக வரும்போது உங்களை வீட்டிற்குள் அழைக்க வேண்டுமா?*
- ❖ *நீங்கள் உங்கள் வீட்டிற்கு அன்பளிப்புகளை வாங்க வேண்டுமா?*
- ❖ *நீங்கள் உங்கள் குழந்தைகள் பங்குபெறும் பந்து விளையாட்டிலும், இசை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க வேண்டுமா?*
- ❖ *நீங்கள் உங்கள் நெருங்கிய நண்பர் (அல்லது) பிரியமானவருடைய அடக்க ஆராதனையில் கலந்துகொள்ள வேண்டுமா?*
- ❖ *நீங்கள் யாரையாவது நேசிக்கும்போது, "நான் உங்களை நேசிக்கிறேன்" என்று சொல்ல வேண்டுமா?*

என் கருத்தைப் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். சில வேளை களில் நாம் தவறான கேள்விகளைக் கேட்பதினால் குற்றவாளிகளாகிறோம். வாழ்க்கையில் சில காரியங்களை நாம் செய்ய வேண்டியதில்லை, மாறாக, நாம் அதைச் செய்ய நேரிடுகிறது. உண்மையில் சொல்லப்போனால், " *நான் செய்ய வேண்டுமா* " என்று கேட்கும் கேள்வி கூட பொருத்தமான ஒன்றல்ல.

நான் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதை அடிப்படையாக வைத்து, அந்த உறவு எப்படிப் பட்டது என்பதை சற்று உற்று நோக்கிப் பார்க்க வேண்டும்.

" *மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை யொருவர் கவனித்து; சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்* " (எபிரெயர் 10 :24, 25). ✝

# மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ...

*The Fair Woman Without Discretion*

***Ken Tyler***

நீதிமொழிகள் 11:22 நம் கவனத்தை ஈர்க்கும் வசனப்பகுதியாகும். சாலொமோன் சொல்வதைக் கவனியுங்கள். "*மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்*" என்று. பன்றியின் மூக்கில் பொன்மூக்குத்தியை இடுவது அதுக்கு பொருத்தமற்றதாயிருக்கும். பன்றி அழுக்கானது; அது சேற்றில் உருண்டு புரளுவதற்கு விரும்பும். பொன் விலையேறப் பெற்றதும், மிகவும் மதிப்புமிக்கதாகவும் இருக்கிறது. பன்றியின் மூக்கில் பொன் மூக்குத்தியை இடுவதைக் குறித்து யாரும் யோசிக்கக்கூட மாட்டார்கள்.

இது மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீக்கு அப்படியே பொருந்துகிறதாயிருக்கிறது. மதியுள்ள அல்லது புத்தியுள்ள பெண் தான் சொல்லுகின்ற காரியத்தைக் குறித்தும், செய்கின்ற காரியத்தைக் குறித்தும் அதிக ஜாக்கிரதையுள்ளவளாக இருப்பாள். தான் சொல்லுகிறதைக் குறித்தும், செய்வதைக் குறித்தும் ஜாக்கிரதையற்ற, அக்கறையற்ற அழகான பெண் பரிதாபகரமானவள்.

என்ன பொருள்படும்படியாக நான் பேசுகிறேன் என்பதற்கு சில உதாரணங்களைக் கொடுக்கிறேன். 1. அசிங்கமான வார்த்தைகளைப் பேசும் அழகான பெண், 2. கையில் மதுவை ஏந்திநிற்கும் அழகான பெண், 3. பத்திரிக்கைகளுக்கும், படங்களுக்கும் தன் உடம்பை பாலுணர்வைத் தூண்டும்படியாக காட்டும் அழகான பெண்.

ஆம் இப்படிப்பட்ட பெண்தான் பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமமானவள். இவ்வகையான நடத்தையும், அழகும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்ல முடியாது. அறிவில்லாமல் நடந்து கொள்ளும் அழகான பெண் அழுக்கானவளாகவும், பரிதாபத்திற்குரியவளாகவும் இருக்கிறாள்.

நீங்கள் எப்படிப்பட்ட பெண்ணாக இருக்கிறீர்கள்? 1 பேதுரு 3:1-6 ம் வசனங்களை வாசித்து, அதிலே நடத்தைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். அதிலே, கற்பு, பரிசுத்தம் போன்ற வார்த்தைகளை நாம் காணமுடியும். அதன்பின்பு, நீதிமொழிகள் 31-ல் சொல்லப்பட்டிருக்கிற "*குணசாலியான ஸ்திரீயை பற்றிப் படியுங்கள். குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது*" (நீதிமொழிகள் 31:10) வார்த்தைகளை கவனியுங்கள். "*தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளைப் பார்த்து அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்*" (வசனம் 26-28).

இவ்வுலகில் மிகவும் அழகானது, அழகான ஆத்துமாவே என்பதை நாமெல்லாரும் உணர்ந்து கொள்வோமாக. ✝

# மனதைப் பூட்டுதல்

*LOCKING HIS MIND*

***David. W. Chadwell***

ஒரு பூட்டப்பட்ட மனம் ஒருவருடைய புரிந்து கொள்ளுதலைப் பூட்டிப் போடுகிறது. மூடப்பட்ட மனம் புரிந்து கொள்ளுதலைப் பூட்டும் போது, வெளிப் படையாகக் கூடத் தெரிகிறவைகளை அறியாதிருக்கிறார். பூட்டப்பட்ட மனம் கற்றுக் கொள்ளக்கூடாது எனத் தீர்மானம் எடுக்கிறது. பூட்டப்பட்ட மனதுக்கு புரிந்து கொள்ளுதல் என்பது தேவையில்லாத ஒன்று. பூட்டப்பட்ட மனதுக்கு புரிந்து கொள்ளுதல் ஒரு அபாயகரமான எதிராளி.

மாற்கு சுவிசேஷ புத்தகம் அதன் வாசகர்களைக் கீழ்க்காணும் காரியங் களில் மையப்படுத்தி இயேசுவின் ஊழியத்தை அறிமுகப்படுத்தியது: இயேசு முடியாதவைகளை முடித்துக் காட்டினார். பிசாசு பிடித்த மக்களிடமிருந்து பிசாசு களைத் துரத்தினார். அது அசாத்தியமான ஆவிக்குரிய பிரச்சனையாக இருந்தது (மாற்கு 1:23-27). அவர் குஷ்டரோகத்திலிருந்து மக்களை சுகப்படுத்தினார் அது குணப்படுத்த முடியாத வியாதியாக இருந்தது. (மாற்கு 1:40-42). அவர் உடனடி யாக திமிர்வாதக்காரனை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து விட்டார் அது குணமாக்க முடியாத சரீர வியாதியாக இருந்தது (மாற்கு 2:312).

எதிர்பார்க்கப்படுவது போல் இயேசுவைப் பற்றியும், அவருடைய நம்ப முடியாத வல்லமை பற்றியும் செய்தி மிகப் பெரிய அளவில் பரவியது. அது முதல் அவருடைய கீர்த்தி கலிலியோ நாடெங்கும் பிரசித்தமாயிற்று (மாற்கு 1:28). பட்ட ணத்தார் எல்லாரும் வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடி வந்தார்கள் (மாற்கு 1:33). உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்றுள்ளது. (மாற்கு 1:37). இயேசுவால் வெளியரங்கமாய் பட்டணத்தில் பிரவேசிக்கக் கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்; எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத் திற்கு வந்தார்கள் (மாற்கு 1:45). அப்பொழுது ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்குப் போதகம் பண்ணினார் (மாற்கு 2:13).

அந்நாட்களின் பிரதான மதத்தலைவர்களாயிருந்த பரிசேயர்களும், வேத பாரகர்களும், அவர்களுடைய சீடர்களும் இயேசு சொன்னவைகளையும், செய்த வைகளையும் அறிந்து வைத்திருந்தார்கள். மீண்டுமாக, எதிர்பார்க்கப்படுவது போல்; அவர்கள் இயேசுவை அணுகினார்கள். ஆயினும், அவர்கள் இயேசுவிட மிருந்து கற்றுக்கொள்ளவோ, தேவனுடைய வல்லமையை உற்றுக் கவனிக் கவோ, அல்லது அவர் செய்த நன்மைகளுக்காக அவருக்குத் தங்கள் பாராட்டைத் தெரிவிக்கவோ இயேசுவை அணுகவில்லை. மாறாக, அவர்கள் இயேசுவை விமர்சிப்பதற்காகவும், அவப்பெயரை உண்டாக்குவதற்காகவும் இயேசுவை அணுகினார்கள். அவர் ஆயக்காரரோடும், பாவிகளோடும் போஜன பானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்? யோவானுடைய சீஷரும், பரிசேயரு டைய சீஷரும் உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிற தென்னவென்று கேட்டார்கள்? ஓய்வு நாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள்? என்றார்கள் (மாற்கு 2:16,18, 24).

இவைகளெல்லாம் புரிந்து கொள்ளுதல் சம்பந்தப்பட்ட மனப்பூர்வமான கேள்விகளாக இருக்கவில்லை. இவைகளெல்லாம் வெளிப்படையாகத் தோன்று

கிறவைகளைப் பார்க்காமலும், கேட்காமலும் இருப்பதற்கு உதவும்படி மேற் கொள்ளப்பட்ட உபாயங்கள், தீர்மானிக்கப்பட்ட முயற்சிகள். அவர்களுடைய கேள்விகள் புரிந்து கொள்ளுதலைப் பூட்டி வைப்பதற்காக மூடப்பட்ட மனதை உடையவர்களால் பயன்படுத்தப்படும் வழிமுறைகளாக இருந்தது.

இந்த மக்கள், தேவன், இயேசுவில் வல்லமையாகக் கிரியை செய்கிறார் என்பதைத் தெளிவாக காட்டிய ஏராளமான சாட்சியங்களைக் கண்டுகொள்ள வில்லை அல்லது பொருட்படுத்தவில்லை. இயேசு தம்முடைய நற்கிரியையினி மித்தம் மக்கள் மீது ஏற்படுத்திய மிகப்பெரிய தாக்கத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பரிசேயர்கள் தங்கள் நோக்கமென எதை சொல்லிக் கொண்டார்களோ அதை இயேசு நிறைவேற்றிக் கொண்டிருந்தார் என்கிற உண்மையைக் காண முடியாத குருடர்களாயிருந்தார்கள். இயேசு தேவனிடத்தில் மக்களை திருப்பிக் கொண்டிருந்தார்.

ஜனங்களைப் பிடித்திருந்த பிசாசுகளைத் துரத்திய தெய்வீக வல்லமையின் முக்கியத்துவத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக, இயேசு பாவமுள்ள ஜனங்களிடத்தில் தொடர்பு வைத்துக் கொள்வதை மட்டும் கண்டார்கள். குணப்படுத்த முடியாத வியாதியை ஆச்சரியமான தேவனுடைய வல்லமை விரட்டியதைக் காண்பதற்குப் பதிலாக இயேசுவின் சீஷர்கள் மத சம்மந்தமான பாரம்பரியமாகிய உபவாசத்தை அனுசரிக்கவில்லை என்று மட்டும் கண்டார்கள். ஒரு திமிர்வாதக்காரனை சுகப் படுத்தி பழைய நிலைக்குக் கொண்டு வந்த தேவ வல்லமையைக் காண்பதற்குப் பதிலாக, இயேசு ஓய்வு நாள் பிரமாணத்தை மீறிவிட்டார் என்று பகிரங்கமாக அறிவித்தார்கள். இயேசு தேவனைப் பற்றிப் போதிப்பதை ஜனங்கள் கேட்கிறார்கள் என்பதற்காக தேவனுக்கு நன்றி சொல்வதற்குப் பதிலாக, இயேசு சொன்ன, செய்த எல்லாம் தேவனை கொச்சைப்படுத்தியதாகக் கருதினார்கள்.

பூட்டப்பட்ட ஒரு மனது எல்லா முக்கியமான தீர்மானங்களையும் எடுத்திருக் கிறது. அது எல்லா முக்கியமான தகவல்களையும் ஆராய்ந்திருக்கிறது. அது சரியான எல்லா சாட்சியங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது எல்லா சரியான முடிவு களையும் எடுத்திருக்கிறது. ஆகவே, பூட்டப்பட்ட மனதுக்கு யோசிக்கத் தேவை யில்லை, கண்டுபிடிக்கத் தேவையில்லை, தனிப்பட்ட தவறுகளை ஒத்துக் கொள்ளத் தேவையில்லை, வாழ்க்கையிலோ, அல்லது சிந்திப்பதிலோ மாற்றங் களை உண்டு பண்ண வேண்டிய தேவையில்லை. சவால் விடப்படும் போது பூட்டப்பட்டமனது பொறுப்புகளைத் தவிர்ப்பதற்காக எப்போதும் தவறுகளைப் பார்த்துக் கொண்டே இருக்கும். அது ஒருபோதும் கற்றுக்கொள்வதில்லை; ஒரு போதும் மறுபடியும் யோசிப்பதில்லை; ஒரு போதும் வளர்வதில்லை. பூட்டப்பட்ட மனது ஒரு நபரை சுயநீதி என்கிற அறியாமை இருளில் பூட்டிப் போடுகிறது.

திறந்த மனது பார்க்கிறது, புரிந்து கொள்கிறது, போராடத் துணிகிறது. அது யோசிக்க, கற்றுக்கொள்ள, மறுபடியும் இயக்கப்பட, மாற விருப்பமுள்ளதாயிருக் கிறது. திறந்த மனது தனக்கு எல்லாம் தெரியாது என்பதை புரிந்து கொள்கிறது, தன்னிடத்தில் எல்லா பதிலும் இல்லை என்பதைப் புரிந்து கொள்கிறது, தேவையான மாற்றத்தை உண்டு பண்ணவில்லை என்பதையும் இது புரிந்து கொள்கிறது. திறந்த மனது ஒருவரை முழுமையான வாழ்வைச் சாத்தியமாக்குகிற வெளிச்சத்திற்கு கொண்டு செல்கிறது.

நீங்கள் எந்த மனதை உடையவர்களாயிருக்கிறீர்கள்? நீங்கள் இயேசுவை எப்படிப் பார்க்கிறீர்கள்?. ✝

# எது அதிக முக்கியம்?

## WHICH IS MORE IMPORTANT?

## நம்முடைய அன்றாட வாழ்க்கை முறையைப் பரிசோதிப்பதற்கான கேள்விகள்

1. எது அதிக முக்கியமானது?
   - உங்கள் செல்லப்பிராணிகள் அன்றாடம் போஷிக்கப்படுவதா? அல்லது
   - உங்கள் பிள்ளைகள் ஆவிக்குரிய ஆகாரம் அன்றாடம் பெற்றுக் கொள்வதா?

2. எது அதிக முக்கியமானது?
   - தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதா? அல்லது
   - வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் நேரம் ஒதுக்குவதா?

3. எது அதிக முக்கியமானது?
   - அன்றைய அரசியல் நிகழ்வுகளை அலசுவதா? அல்லது
   - வேதாகம சத்தியத்தை ஒருவர் புரிந்துகொள்ள உதவுவதா ?

4. எது அதிக முக்கியமானது?
   - விரும்பும் விளையாட்டுக்களுக்கு நேரத்தை ஒதுக்குவதா ? அல்லது
   - பிள்ளைகளோடு ஜெபிக்க, செலவழிக்க நேரத்தை எடுத்துக் கொள்வதா.

5. எது அதிக முக்கியமானது?
   - சரீர அலங்காரத்திற்கு நேரத்தைச் செலவழிப்பதா? அல்லது
   - உள்ளான மனிதன் மேம்பட நேரம் எடுப்பதா?

6. எது அதிக முக்கியமானது?
   - ஞாயிறு பிரசங்கத்தைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதா ? அல்லது
   - அந்தப் பிரசங்கத்தின்படி நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதா?

7. எது அதிக முக்கியமானது?
   - உங்கள் வீடு எப்படித் தோற்றமளிக்கிறது என்பதா ? அல்லது
   - உங்கள் குடும்பத்தின் பக்திக் காரியங்கள் எப்படிப் போகிறது என்பதா?

8. எது அதிக முக்கியமானது?

- ஆராதனை முடிந்தபிறகு பிரசங்கியார் கதவண்டை நின்று பேசுவதா? அல்லது
- பிரசங்கத்தின் மூலமாக பிரசங்கியார் உங்களிடம் பேசுவதா?

9. எது அதிக முக்கியமானது?

- சபை கூடும் கட்டிடத்தின் உட்புற நிலையா? அல்லது
- சபையாரின் ஆவிக்குரிய உள்ளான நிலையா?

10. எது அதிக முக்கியமானது?

- உங்களில் அக்கறை காட்டும் அநேகரா? அல்லது
- நீங்கள் அக்கறை காட்டவேண்டிய அநேகரா?

11. எது அதிக முக்கியமானது?

- ஆராதனை முடிந்தபிறகு உங்களைத் தேடிவந்து பேசும் பலரா? அல்லது
- நீங்கள் தேடிப்போய் பேசவேண்டிய பலரா?

12. எது அதிக முக்கியமானது?

- உங்கள் முகம் மற்றும் ஆடையின் அலங்காரத் தோற்றமா? அல்லது
- பிறர் பார்வையில் உங்கள் ஆவிக்குரிய அலங்காரமா?

13. எது உங்களுக்கு அதிக முக்கியமானது?

- உங்கள் பிள்ளைகள் வாங்கும் சம்பளமா? அல்லது
- அவர்கள் நற்செய்தியைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதா?

14. எது உங்களுக்கு அதிக முக்கியமானது?

- நீங்கள் குவித்து வைத்திருக்கும் சொத்து சுகங்களா? அல்லது
- நீங்கள் பரலோகத்தில் சேர்த்து வைத்திருக்கும் பொக்கிஷமா?

15. எது உங்களுக்கு அதிக முக்கியமானது?

- பரலோக தேவனுடைய அங்கீகாரமா? அல்லது
- உங்கள் முதலாளி அல்லது அதிகாரியின் பாராட்டுக்களா? †

# நேர்மறையாகப் பயிற்றுவித்தல்

## TRAINING IN POSITIVES

***Betty Burton Choate***

" *பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதர்வயதிலும் அதை விடாதிருப்பான்* " (நீதிமொழிகள் 22:6).

ஒரு வீட்டில் கணவன், மனைவி, தாத்தா, பாட்டி, அழகான, அறிவுள்ள பிள்ளைகள் என்று எல்லாரும் இணைந்து, இசைந்து வாழும் வாழ்க்கையை விட விலையேறப்பெற்றது ஒன்றுமேயில்லை. ஒரு வீடு உற்சாகமும், பாதுகாப்பும், அன்பும் நிறைந்த இடமாக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

ஒவ்வொருவருக்கும் அரவணைப்பும், அங்கீகாரமும், உற்சாகமும் தேவைப்படுகிறது. குறிப்பாகப் பிள்ளைகளுக்கு வளரும் பருவத்தில் தங்கள் பெற்றோரிடமிருந்து இவ்வகையான உறவு அவசியப்படுகிறது. இது சம்பந்தமாக சில ஆலோசனைகளைக் கொடுக்க நான் ஆசைப்படுகிறேன்.

*1. கைகளை தண்டிப்பதற்கு உபயோகப்படுத்துங்கள்*

ஆம், சிலவேளைகளில் பிள்ளைகள் குறும்பு செய்யும்போது அவர்களைத் தண்டிக்க வேண்டியது அவசியம். உங்கள் கைகள் 99% நேரம் அரவணைப்புக்கும், தட்டிக் கொடுப்பதற்கும் பயன்படுத்தப்பட்டால், நீங்கள் தண்டித்தாலும் உங்கள் பிள்ளைகளோடு சரியான உறவை ஏற்படுத்துவதற்கு அடித்தளம் அமைக்கிறீர்கள் என்று அர்த்தம். இந்த முக்கியமான, அவசியமான பண்பை அலட்சியப்படுத்தாதீர்கள்.

*2. உங்கள் குழந்தைகளிடம் மனந்திறந்து பேசுங்கள்*

உங்கள் எண்ணங்களை அவர்களிடம் மனந்திறந்து பேசுங்கள். அப்போது அவர்கள் நியாயமாக முடிவெடுக்கும் திறனை உங்கள் மாதிரியின் மூலமாகக் கற்றுக்கொள்வார்கள்.

*3. மனதார அவர்களைப் பாராட்டுங்கள்*

உங்கள் குழந்தைகளின் செயல்பாடுகளை மனதார வாய்திறந்து பாராட்டுங்கள். ஆனால், அது சமச்சீரான பாராட்டாக இருக்கவேண்டும். பெற்றோர்கள் சிலவேளைகளில் குழந்தைகள் தான் உலகம் என்றும், அவர்கள் செய்வதெல்லாம் முக்கியமானதென்றும் எண்ணி விடுகிறார்கள். இது பெற்றோருடைய பங்கில் அவர்கள் செய்யும் தவறாகும். இன்று சமுதாயத்தில் "சுயமுக்கியம்"

மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. அது பெரும்பாலும் குழந்தைப் பருவத்தில் தான் ஆரம்பமாகிறது.

இருந்தபோதிலும் போதுமான அளவு உற்சாகமும், அங்கீகாரமும் இல்லாததால் குழந்தைகளுடைய நம்பிக்கையின் அளவு குறைந்து போகிறது. குழந்தைகள் ஓர் இலக்கை நோக்கி வேலை செய்யும்போது அதை அவர்கள் அடையாவிட்டாலும், அந்த முயற்சிக்காக அவர்களைப் பாராட்டி, அடுத்த முறை இன்னும் சிறப்பான முயற்சியை எடுக்க வேண்டுமென்று தட்டிக்கொடுக்க வேண்டும். மற்றவர்களிடம் உங்கள் குழந்தைகளைப் பற்றிப் பேசும்போது பெருமையாக இல்லாவிட்டாலும். அவர்கள் செய்த நல்ல காரியங்களைப் பற்றி பாராட்டிப் பேச வேண்டும். மாறாக, அவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

### *4. அவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனியுங்கள்*

அவர்களுடைய திறன்களை, முன்னுரிமைகளை, சவால்களைக் கவனியுங்கள், அவர்களுக்கு எது விருப்பமாயிருக்கிறது என்பதைக் கண்டறிய நாம் நம்முடைய உண்மையான விருப்பத்தைக் காட்ட வேண்டும். ஏதாவதொரு குறிப்பிட்ட விளையாட்டில் அவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தால் அந்த இலக்கை நிர்ணயிக்க அவர்களுக்கு உதவுங்கள். அந்த ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் அவர்கள் விருப்பம் உறுதி செய்யப்பட்டால், பெற்றோர் என்ற நிலையில் அவர்கள் பயிற்சி எடுப்பதற்கும், கருவிகள் வாங்குவதற்கும் நீங்கள் உதவ வேண்டும். சிலவேளைகளில், நம் குழந்தைகள் அடையக்கூடிய அல்லது சாதிக்கக்கூடிய இலக்குகளில் கவனம் செலுத்தும்படியாக அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும். அதனால், அவர்கள் தொடர் தோல்விகள் வந்தாலும் சோர்ந்து போகமலிருக்க முடியும். இருந்தாலும், அவர்கள் தங்கள் இலக்கை எட்டத் தேவைப் படும் தீவிரப்போராட்டத்தையும், சவால்களையும் ஒருபோதும் தடுக்கவே கூடாது. ஏனென்றால், சவால்களும், போராட்டங்களும் இல்லையென்றால் வெற்றி பெறவே முடியாது.

### *5. உங்கள் குழந்தைகளோடு சேர்ந்து வாசியுங்கள்*

பெற்றோர், குழந்தைகள் உறவின் அருமையான தருணங்கள் புத்தங்களை வாசிப்பதிலும், அதிலுள்ளவைகளைப் பகிர்ந்து கொள்வதிலும் ஏற்படுகிறது. அதேபோல் நம் அன்றாட வாழ்வில் விளையாட்டுகள், பயணங்கள் போன்றவற்றிலும் குழந்தைகளோடு நேரத்தைப் பயனுள்ளதாக செலவிட வேண்டும்.

### *6. உங்கள் குழந்தைகள் பொறுப்புள்ளவர்களாயிருக்கும்படி சிறு வயதிலேயே அவர்களுக்குப் பயிற்சி கொடுங்கள்*

அவர்கள் செய்யும்படியாக சில வேலைகளைக் கொடுங்கள். அப்போது

அவர்கள் இவைகளெல்லாம் குடும்பத்திற்கு அவசியமென்பதை உணர்ந்து கொள்வார்கள். உங்கள் வீட்டுக் குளிர்சாதனப் பெட்டி அல்லது கதவுகளில், செய்ய வேண்டிய வேலைகளுக்கான பட்டியலை ஒட்டிவிடுங்கள். அவர்கள் பட்டியலில் உள்ள ஒவ்வொரு வேலையையும் செய்து முடித்தபின்பு செய்து முடித்த அந்த வேலையைக் குறித்து வைக்கும்படியாக அவர்களுக்குப் பயிற்சி கொடுங்கள். குழந்தைகள் விளையாட்டுச் சாமான்களை வீடெங்கும் சிதறாதபடி, விளையாடி முடித்தவுடன் அவைகளை அழகாக அடுக்கி வைக்கும்படி சொல்லுங்கள். அதே போல் துணிகளை அங்குமிங்குமாக சிதறவிடாமல் அதினதின் இடத்தில் வைக்கக் கற்றுக்கொடுங்கள்.

### *7. அவர்களுக்கு மரியாதையைச் சொல்லிக்கொடுங்கள்*

வீட்டுக்கு வரும் பெரியவர்களிடத்தில் எப்படி மரியாதையாக நடந்துகொள்ள வேண்டுமென்பதைக் கற்றுக் கொடுப்பதோடு, மரியாதைக்குரிய வார்த்தைகளான, " *தயவு செய்து,* " " *நன்றி* " போன்றவற்றைச் சொல்லிக்கொடுத்து, பெரியவர்கள் பேசும் போது தேவையில்லாமல் குறுக்கிடக்கூடாது என்பதையும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

### *8. குழந்தைகளுக்கு பல வேலைகளைக் கற்றுக்கொடுங்கள்*

குழந்தைகள் வளர்ந்து, பெரியவர்களாகும் போது சமைத்தல், சுத்தம் செய்தல், துணிதுவைத்தல், தோட்டப் பராமரிப்பு போன்ற பல வேலைகளைக் கற்றுக்கொடுங்கள். அப்போது அவர்கள் இவ்வுலகில், எல்லா வேலைகளையும் தனியாகச் செய்யும்படியான அறிவைப் பெற்றுக்கொள்வார்கள். மேலும், பணத்தை எப்படிச் சரியாகக் கையாள வேண்டுமென்பதையும் நாம் அவர்களுக்கு கற்றுக்கொடுப்பது அவசியமாயிருக்கிறது. அவர்கள் ஞானமாக பொருட்களை வாங்கவும், கடன் வாங்காமல் இருக்கவும், ஒருவேளை கடன் வாங்கினாலும், கடன் அட்டையிலுள்ளபடி கடனை மாதந்தோறும் திரும்பச் செலுத்தவும், ஒரு பொருளைப் பார்த்தவுடன் உணர்ச்சி வசப்பட்டு அதை வாங்கி பின்பு கடன்படாத படி எச்சரிக்கையாயிருக்கவும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

### *9. வேதவாக்கியங்களில் முழுமையாகப் போதிக்கப்பட்டிருக்கிறபடி உங்கள் குழந்தைகளோடு நீங்கள் பேசும்போது, அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் போதும் பேச்சுக்களையும், அறிவுரைகளையும் வேதவாக்கியங்களால் நிரப்புங்கள்*

குழந்தைகள் வேதவாக்கியங்களிலிருந்து கற்றுக்கொண்ட சம்பவங்களை வைத்து அவர்களோடு பேசுங்கள், அவர்களுக்கு அறிவுரை வழங்குங்கள். மேலும், உங்கள் வீட்டிலுள்ள குழந்தைகளோடு சேர்ந்து பாடல்களைப் பாடுங்கள், ஜெபியுங்கள், வேதாகம சம்பவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அதோடு, வேத பாடங்களையும் ஆழமாகப் படியுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் அவர்களை ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுத்தி, பக்தி, காரியங்களில் வளரச் செய்ய முடியும். ✝

# நல்ல பெற்றோர்களாயிருப்பது எப்படி?

## *How To Be Good Parents?*

### *David Tarbet*

**யோ**சேப்பும், மரியாளும் இயேசுவை " *ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்த்தார்கள்* " (லூக்கா 2:52). எவ்வித சந்தேகமுமின்றி மற்ற குழந்தைகளையும் (யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் மற்றும் சகோதரிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை) (மாற்கு 6:3). இதே விதமாகத் தான் வளர்த்திருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. குறிப்பாக இவர்களில் யூதா வெற்றியுள்ளவராகி புதிய ஏற்பாட்டில் ஒரு புத்தகத்திற்கு ஆசிரியராயிருக்கிறார். ஆகவே, மரியாளிடமிருந்தும், யோசேப்பிடமிருந்தும் தேவ பக்தியுடன் கூடிய வகையில் குழந்தைகளை வளர்க்கும் திறமைகளை பெற்றோர்கள் கற்றுக்கொள்ள முடியும். அவர்களுடைய இந்தக் குணாதிசயங்களைக் கவனியுங்கள்.

**அவர்கள் தங்கள் குமாரனை ஆராதனைக்கு அழைத்துச் சென்றார்கள் (லூக்கா 2:41)**

ஆராதனை முடிந்த பிறகு வந்து உன்னை கூட்டிக் கொண்டு போகிறேன் என்று ஆராதனை கூடுமிடத்திற்கு இயேசுவை அவர்கள் விட்டு வரவில்லை. ஒன்றாகச் சேர்ந்து தேவனை ஆராதிக்கும் குடும்பங்கள் சேர்ந்தே வாழ்கின்றன. ஆவிக்குரிய காரியங்கள் தான் அதிக முக்கியத்துவத்துக்குத் தகுதியுள்ளவைகள்.

**அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு, பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொடுத்தார்கள் (லூக்கா 2:51).**

பிள்ளைகள் தேவனுடைய அதிகாரச் சட்டத்தை மதிக்க வேண்டும். பெற்றோர்களை மதிக்காமலிருப்பது பாவமாகும் (எபேசியர் 6:1,3).

**அவர்கள் கடின உழைப்பின் முக்கியத்துவத்தை தங்கள் குமாரனுடைய மனதிற்குள் ஊட்டினார்கள்**

தச்சனாகிய யோசேப்பு இயேசு கிறிஸ்துவுக்கு தச்சுத் தொழிலை கற்றுக் கொடுத்தார் (மாற்கு 6:3). குழந்தைகளுக்கு வேலை செய்ய கற்றுக் கொடுக்காமலிருப்பது, அவனுக்கு திருடக் கற்றுக் கொடுப்பதற்கும் சமமாகும்

அவர்கள் இயேசுவை அன்பும், தயையும் மற்றவர்களைக் குறித்து சிந்திக்கிற பிள்ளையாகவும் வளர்த்தார்கள். இத்தன்மைகளைப் பலரும் அங்கீகரித்து அதிசயப்பட்டார்கள் (லூக்கா 2:52). நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஆவிக்குரிய காரியங்களில் நாட்டமுள்ள பிள்ளைகளாக வளர்க்கிறீர்களா? இவ்வாறமே உங்கள் குடும்பத்தை ஆராதனைக்கு அழைத்துச் செல்லுங்கள். அதுவே செய்யத்தக்க சரியான காரியமாகும். ✝

# நான் எங்கே இருக்கிறேன் ?

## *WHERE AM I?*

***Rebecca Rushmore***

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து கவனமாக யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே என் பெயரை நீங்கள் யூகித்து விட்டால் 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யார் என்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்கக் கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்

1. வேதாகம பூமியில் நான் மிகவும் முக்கியமான நதி
2. என் ஆதாரம் வடக்காகவும், என் வாய் தெற்காகவும் உள்ளது
3. என் அகலம் எண்பது அடியிலிருந்து நூற்றெண்பது அடியாக உள்ளது
4. என் ஆழம் ஐந்திலிருந்து பன்னிரெண்டு அடியாக உள்ளது
5. என் நீளம் நேர்வழியாக நூற்றிருபது மைல்கள், ஆனால், நீர் வழியாகப் பார்த்தால் என் நீளம் இருநூறு மைல்களாகும்.
6. என் வீழ்ச்சி ஒரு மைலுக்கு சராசரியாக இருபத்தி இரண்டு அடியாக உள்ளது.
7. தேவன் என் தண்ணீரைக் குஷ்டரோகம் பிடித்த ஒரு மனுஷனைச் சொஸ்தமாக்கப் பயன்படுத்தினார் (2 ராஜாக்கள் 5:10)
8. இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்காகத் தண்ணீர் அற்ற உலர்ந்த தரைவழியாய் என்னைக் கடந்து போனார்கள் (யோசுவா 1:2;3:17)
9. யோவான் ஸ்நானகன் அநேக ஞானஸ்நானங்களுக்கு (கிறிஸ்துவின் ஞானஸ்நானம் உட்பட) என்னைப் பயன்படுத்தினார் (மத்தேயு 3:13)
10. என் ஆதாரம் எர்மோன் பர்வதத்திலும், என் வாய் சவக்கடலிலும் உள்ளது.

✝

# இயேசு நேசித்த சீஷன்

## THE DISCIPLE JESUS LOVED

*Dan. R. Owen*

செபெதேயுவின் குமாரனாகிய யோவான் இயேசுவால் நேசிக்கப்பட்ட ஒரு சீஷனாக இருந்தார். ஒரு சீஷன் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு, அவர் நம்மெல்லோருக்கும் மிகச் சிறந்த உதாரணமாயிருக்கிறார். இவர் இயேசுவுக்குப் பிடித்தமான ஒருவராக இருந்தார். நாமெல்லோரும் பின்பற்றத்தக்கதாக அவர் ஓர் ஆவிக்குரிய கதாபாத்திரமாக இருக்கிறார்.

செபெதேயு மற்றும் சலோமி தம்பதியினருக்கு கடைசிக் குமாரனாக இவர் பிறந்தார். மீன்பிடித் தொழில் இவருடைய குடும்பத் தொழிலாக இருந்தது. இவருடைய குடும்பம் கடினமாக உழைத்து, பெரும் பொருள் ஈட்டி வசதியாக வாழ்ந்து வந்தது. இளம் வயதில் யோவான் கடல் சூழலில் வளர்க்கப்பட்டபடியால் அவர் காற்றையும், கயிற்றையும், வலைகளையும், மனிதர்களையும் பயன் படுத்தி மீன்களைப் பிடிக்க நன்றாக அறிந்திருந்தார். ஆனால், ஒருநாள் தீர்க்கத்தரிசி யாயிருந்த இயேசு, வலைகளிலிருந்து இவரை அழைத்து இவருடைய வாழ்க்கையை மாற்றினார்.

யோவான் இயேசுவின் கிரியைகளைக் கண்டு பிரமிப்படைந்தார். இயேசுவின் அற்புதங்கள், போதனைகள், ஆள்தத்துவம் போன்றவைகள் அந்த இளம் மீனவனைக் கட்டிப்போட்டன. தீர்க்கத்தரிசியான இயேசுவைப் பின்பற்றிய இந்த மீனவன் சீக்கிரமே அவருடைய நண்பரானார். மறுரூப மலையிலிருந்து கெத்சமனே தோட்டத்திற்கு, அங்கிருந்து சிலுவையினண்டைக்கு, அங்கிருந்து திறக்கப்பட்ட கல்லறைக்கும் என்று அது ஓர் உன்னதமான பயணமாக இருந்தது. அப்பயணம் யோவானை முற்றிலுமாக மாற்றியது. எஜமானாகிய இயேசு தம்முடைய கட்டளைக்கு யோவான் கீழ்ப்படிந்து அதை உலகிற்கு எடுத்துச் செல்வார் என்பதை அறிந்திருந்தார்.

யோவான் பரிசுத்த ஆவியானவரின் இறங்கினதையும், பெந்தகொஸ்தே நாளில் ஏற்பட்ட மனமாற்ற சம்பவங்களையும், ஆதித் திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில், கிறிஸ்தவத்தின் அசுர வளர்ச்சியையும் கண்ணாரக் கண்டவர். தேவன் இவரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்தினார். யோவான் ஆலோசனை சங்கத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டார், எச்சரிக்கப்பட்டார், பின்பு விடுதலை செய்யப்பட்டார். மறுபடியும் கைது செய்யப்பட்டார், சிறையிலடைக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், மறுபடியும் விடுவிக்கப்பட்டார். இவைகளெல்லாம் நடந்த பிறகும் அவர் தொடர்ந்து பிரசங்கித்தார். அவர் தர்சு பட்டணத்து சவுலால் சபை பாழாக்கப் பட்டதைக் கண்டார். அதேபோல் சபை சிதறடிக்கப்பட்டதையும் கண்டார். கடைசியாக, கிறிஸ்தவ சகோதரனும் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனுமாயிருந்த பவுலுக்கு தன் ஐக்கிய கரத்தை நீட்டினார்.

தன் மூத்தசகோதரன் எருசலேமில் இரத்த சாட்சியாக மரித்ததால் மனதளவில் நொறுங்கிப்போன யோவான், கடைசியாக ஆவியானவரால் எபேசுவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். கொடுங்கோலனாகிய டொமிஷியன் கிறிஸ்தவர்களைத் துன்படுத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் யோவான் ஓர் வயதான மனிதராக பத்மு என்னும் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருக்குத் தரிசனங்களைக் காண்பித்து, தேவனுடைய மாபெரும் நோக்கத்தை விளக்கி, அவைகளை எழுதும்படியாகக் கட்டளையிட்டார். கி.பி. 98 ல் தள்ளாடும் வயதில் இவர் விடுதலையாக்கப்பட்டு ஆசியாவுக்குத் திரும்பினார். அங்கே, அவர் மரிக்கும் வரை சபைகளில் கர்த்தருக்கு ஊழியம் செய்தார்.

இயேசு நேசித்த இந்த சீஷன் தன் தகப்பனுடைய தொழிலைவிட்டு இயேசுவைப் பின்பற்றின நாள் முதல், எபேசுவில் மரிக்கும் வரை ஒருபோதும் தடுமாறவே இல்லை. தெய்வீக கலப்பையில் கையிட்ட ஒருவர் ஒருபோதும் பின்னோக்கிப் பார்க்கவே கூடாது என்பதற்கு இவருடைய வாழ்க்கை மிகச்சிறந்த உதாரணம். இவர் தன் எஜமான் யார் என்பதை அறிந்திருந்து முடிவுபரியந்தம் அவரைப் பின்பற்றினார். இதுதான் சீஷத்துவத்தின் இலக்கணமாகும். ✝

இவைகளுக்குப பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத்தின விபரமாவது; சீமோன் பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும் கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபதேயுவின் குமாரம் அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி; மீன் பிடிக்கப் போகிறேன் என்றான், அதற்கு அவர்கள், நாங்களும் உன்னோடே கூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய் உடனே படவேறி னார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமானபோது. இயேசு கரையில் நின்றார். அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி; பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்; ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப் பட்டதினால், அதை இழுக்கமாட்டா திருந்தார்கள். ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து; அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன் பேதுரு கேட்ட வுடனே தான் வஸ்திரமில்லாதவனாயிருந்தபடியினால், தன் மேற் சட்டையைக் கட்டிக் கொண்டு கடலிலே குதித்தான். மற்ற சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இரு நூறுமுழத் தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்து கொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக் கொண்டு வந்தார்கள் (யோவான் 21:1,8).

# சில புதிய ஏற்பாட்டு விஜபிகள்

## SOME NEW TESTAMENT VIPS

*Owen Cosgrove*

சமுதாயத்தில் விஜபி என்பவர் மிகமுக்கியமான நபராகக் கருதப்படுகிறார். இவ்வார்த்தையை, ஒரு நாட்டின் தலைவரிலிருந்து, விளையாட்டுப் போட்டியைக் காண சிறப்பான பகுதியில் அமர்ந்திருக்கும் நபர் வரை பயன்படுத்துகின்றனர்.

புதிய ஏற்பாட்டில் ஒவ்வொருவரும் விஜபிகளாக இருக்கிறார்கள். ஏனென்றால், இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும்விட விலையேறப்பெற்ற ஆத்துமாவை ஒவ்வொருவரும் பெற்றிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து, இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார். ஏனென்றால், ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் தனித்துவம் வாய்ந்தவர்களாக, விலையேறப்பெற்ற வர்களாக இருக்கிறார்கள். ஆச்சரியத்திற்கெல்லாம் ஆச்சரியம் என்னவென்றால், நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தது தான் (ரோமர் 5:6,8)

புதிய ஏற்பாட்டில் மிக முக்கியமானவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். யூதேயாவின் ரோம ராஜாவாகிய ஏரோது பாலஸ்தீனத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்தான். அவன் தன்னுடைய பெயரோடு "*மகா*" என்னும் வார்த்தையை இணைத்துக்கொண்டான். அவன் ஜனங்களின் மனதைக் கவர, தேவாலயத்தை மறுபடியும் மகிமையாகக் கட்டினான். இவன் தன் சிங்காசனத்தை தக்கவைத்துக் கொள்ள, பெத்லகேமுக்கு உள்ளும், புறமுமுள்ள பச்சிளங் குழந்தைகளை இந்தக் கொடூரன் கொன்று குவித்தான். உலகத்தின் பார்வையில் இவன் ஒரு விஜபி யாதத்தான் இருந்தான். இவனுடைய குமாரன் தான் யோவானுடைய சகோதர னாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான் (அப்போஸ்தலர் 12). இவனுடைய பேரன் அகிரிப்பா ராஜா பவுல் தனக்காக உத்தரவு சொல்வதைக் கேட்டான் (அப்போஸ்தலர் 26). இன்னும் பல விஜபிகள் இருக்கிறார்கள். இயேசுவைக் கொலை செய்ய முயற்சி எடுத்த பிரதான ஆசாரியன், அந்த செயல் தொடர்ந்து நடக்க வழிவகுத்த கோழையான பொந்தியு பிலாத்து, இயேசுவை சிக்கவைத்து சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்ற பல விஜபிகள் உள்ளனர்.

ஆனால், புதிய ஏற்பாட்டில் இன்னும் பலர் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் சமுதாயத்தின் பார்வையில் அற்பமானவர்கள், ஒன்றுக்கும் உதவாத வர்கள். ஆனால், தேவனுடைய பார்வையில் அவர்கள் விலையேறப் பெற்றவர்கள் அல்லது மிகவும் முக்கியமானவர்கள். அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவன் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற மனதாயிருந்த லாசரு, மனந்திரும்பு முன்பு துன்மார்க்கமான வாழ்க்கையினால் செல்வத்தையெல்லாம் விரயம் செய்து சுய இஷ்டமாய் நடந்து கொண்ட

வாலிபன், கர்த்தருடைய பாதங்களிலே பரிமாள தைலத்தை ஊற்றி தன் தலை மயிரால் துடைத்த பாவியான ஸ்திரீ, சீகார் கிராமத்து மக்கள், கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கும்படி செய்த ஒழுக்கக் கேடான சமாரியா ஸ்திரீ, கர்த்தருக் கென்று தனக்கிருந்த இரண்டு காசுகளைக் கொடுத்த ஏழை விதவை இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கிறது. தரித்திரர், குருடர், ஊனமுற்றோர், வியாதியஸ்தர், துன்பத்தில் இருக்கிறவர்கள், அடிமைகள், சோர்வடைந்தவர்கள், சமுதாயத்தால் புறம்பே தள்ளப்பட்டவர்கள் போன்றோருக்கு இயேசு நண்பராயி ருக்கிறார். இயேசுவுக்கு இவர்களெல்லாரும் முக்கியமானவர்கள்.

பெரும்பாலான மக்கள் மற்றவர்களைவிட தங்களை உயர்வாகக் கருதி, கிறிஸ்துவைவிட தங்களை மற்றவர்கள் உயர்வாக மதிப்பீடு செய்ய அனுமதிக் கிறார்கள். சிலர் சமுதாயத்திற்குத், தங்களை மலிவாக விற்றுப்போட்டு, தாங்கள் எப்படிப்பட்ட விஐபிகள் என்பதையும், தேவனுடைய பார்வையில் தாங்கள் எப்படி யாகக் கருதப்படுகிறோம் என்பதையும் உணராமலிருக்கிறார்கள்.

விஐபி கள் சாதாரண மக்களை இழிவாகப் பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தர் ஒருபோதும் அப்படிச் செய்வதில்லை. தேவன் சாமுவேல் தீர்க்கதரிசியிடம், "*மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்* " (1 சாமுவேல் 16:7) என்று சொன்னார். தேவனுடைய பார்வையில் ஒவ்வொருவருமே விஐபிகள் தான் ✝

## சுவிசேஷமும் அப்படித்தான்

ஒரு சோப் தயாரிப்பாளரும், பிரசங்கியாரும் ஒரு மிகப்பெரிய பட்டணத்தின் தெருவில் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது அந்த சோப் தயாரிப்பாளர் எதேச்சையாக பிரசங்கியாரிடம், நீங்கள் பிரசங்கிக்கும் சுவிசேஷம் அதிக நன்மை செய்யவில்லை அப்படித்தானே? உற்றுக்கவனித்துப் பாருங்கள். இவ்வுலகில் அக்கிரமங்கள் அதிகமாகப் பெருகியிருக்கிறது, அதேபோல் அக்கிரம் செய்கிறவர்களும் அதிகமாகப் பெருகியிருக்கிறார்கள் என்றார்.

அப்பிரசங்கியார் சாக்கடை அருகே சிறு குழந்தை ஒன்று மண்ணினால் ஒரு பொருளை உண்டாக்கிக் கொண்டிருப்பதை பார்க்கும் வரை அவருக்கு பதிலளிக்கவில்லை. அழுக்கான அக்குழந்தையைப் பார்த்ததும் பிரசங்கியார் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சோப் தயாரிப்பாளரிடம் இவ்வுலகைச் சுற்றிலும் அழுக்கும், அழுக்கான ஜனங்களும் அதிகமாக இருக்கிறார்கள் என்றார். அப்போது அந்த சோப் தயாரிப்பாளர் சோப்பைப் பயன்படுத்தினால்தான் பயன் கிடைக்கும் என்றார். அப்பொழுது பிரசங்கியார் மிக சரியாகச் சொன்னீர்கள், " *சுவிசேஷமும் அப்படித் தான்* " என்றார்.

# தேவனை மகிமைப்படுத்துவோம் வாருங்கள்

## *COME, LET US GLORIFY GOD*

**Thomas R. Dohline**


இழந்துபோனதைத் தேடி வந்த இறைமகன் இயேசு தமது இனத்தாரான யூதர்களுக்கு மறுமொழி கூறுகையில் ..... *என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன். நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். நான் எனக்கு மகிமையைத் தேடுகிற தில்லை; அதை தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார் என்றார்* (யோவான் 8:49,50)

மனித கண்களால் பார்க்க முடியாத மாசற்ற தேவனை இவ்வுலகிற்கு காண்பிக்கவே வந்தார். மாறாத தேவனின் ஒரே மைந்தன் இயேசு அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார் (எபி. 1:3) இந்த பூமியில் அவர் இருந்த காலத்தில் எல்லா வகையிலும் அவரை கனம் பண்ணவும். அவரையே மகிமைப்படுத்தவும் செய்தார். தன்னலமில்லா தமையனாயிருந்ததாலே தனக்கென்று மகிமையைத் தேடவில்லை. அப்படித் தேடி யிருந்தால் தம்மைதாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலாகியிருக்கமாட்டார் (பிலி. 2:7) தம்மைத்தாமே தாழ்த்தி கோர, பயங்கரமான சிலுவையின் மரணத்தை ருசிபார்த்திருக்கமாட்டார். சிலுவையில் மரிக்கும் நபரை சிலுவை மகிமைப்படுத்தாது. மாறாக, அது சாபப்படுத்தும் (உபா. 21:23); அது ஒரு நபரின் அடிப்படை குணத்தை வெளிப்படுத்தும். ஆனால், பாவம் அறியாத புண்ணியன் இயேசுவோ, ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாளிடம், தூய ஆவியானவரால் பிறந்து இப்படிக் கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டு, தன் மகிமையைத் துறந்து, மகிமைக்குத் தகுதியான பிதாவை மகிமைப்படுத்தினார். இயேசு தமது பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

தேவன் ஒருவரே மகிமைக்குப் பாத்திராமயிருப்பதால் அதை அவர் தேடுகிறார். இயேசு அவரை மகிமைப்படுத்துவது தவறென்று எண்ணவில்லை. பரிசுத்த தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று நமக்கு வேதாகமம் போதிக் கிறது. நாம் ஏன் அவரை மகிமைப்படுத்த கூடாது?. தேவன் மகிமையைத் தேடு வதால் அப்படி செய்வதில் நமக்கு வெட்கம் தேவையில்லை. நாம் அவரை மகிமைப் படுத்தும் போது அவரைப் பிரியப்படுத்துகிறோம். இப்பொழுது நாம் அவரை மகிமைப்படுத்துவோம். (ரோமர் 8:18)

ஆகவே, இப்பொழுதும், எப்பொழுதும், எல்லா வழிகளிலும் மகிமைப்படுத்த தேவனை தீர்மானிப்போம்! ✝


## சத்திய வழி




- பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560 084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- தமிழன் TV : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
  Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் :
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041


## கிருபையுள்ள வார்த்தை



- பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா
- தமிழன் TV : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ்/English )
- தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை மற்றும் கைப்பிரதிகள்
- English Quaterly Magazine : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- J.C. School of Evangelism : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி

தொடர்புக்கு : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

## அஞ்சல் வழி வேதாகம கல்வி

வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள் (Tracts)** வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| E.Z.S. ராஜநாயகம் : 98427 30382 | P.C. பிலேமோன் ராஜா : 92442 04420 |
| P.R. சுவாமி : 098440 70763 | B. அர்ஜுனன் : 94435 58041 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ " சத்தியத்தின் குரல் " நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

**கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி**

**E.Z.S. ராஜநாயகம்**

" சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in

பெயர் : ________________________________

தெரு / ரோடு : ________________________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ________________________________